உ
சிவமயம்

# நகுலகிரிப் புராணம்

கவிஞர் சிகாமணி
**பிரம்மஸ்ரீ கா. அப்பாச்சாமி ஐயரவர்கள்**
இயற்றியது.

114843
3893

கீரிமலைச் சிவன்கோவில் ஆதீனகர்த்தர்
பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின்
திருவுளப்பாங்கின்படி வெளியிடப்பெற்றது.

JPL
C3893

கீரிமலை
...சமய விருத்திச் சங்கம்.
[...ப்பு] [1961
விலை ரூபா 1-25
கலாதேவி அச்சகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
18-5-1995

உ
சிவமயம்

# பதிப்புரை

கீரிமலைச் சிவன்கோயிற் சிறப்பும், சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் பாடிய நகுலேச்சுவர தசகமும், பன்னிருதிருமுறைத் திரட்டும் அடங்கிய ஒரு சிறு நூல். ஷை கோயில் ஆதீனகர்த்தராகிய பிரமஸ்ரீ தி. கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் விருப்பின்படி, அவர் தந்தையாரும் ஷை கோயிலைப்புதுக்கிப் புனருத்தாரணஞ் செய்தவரும், வடமொழி, தென்மொழி, ஆங்கிலமொழி ஆதியாம் பன்மொழிகளிலும் பாண்டித்தியம் படைத்தவரும் ஆகிய பிரமஸ்ரீ தி. குமாரஸ்வாமிக் குருக்கள் அவர்களின் ஞாபகார்த்தமாக சென்ற ஆண்டு வெளியிட்டோம்.

இவ்வாண்டு இந்நூலையும் குருக்கள் அவர்களின் ஞாபகார்த்தமாக இரண்டாம் வெளியீடாக வெளியிடுகின்றோம். குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்வீர்களாக.

திருத்தங் காண்போர் திருத்தங்களை அறிவித்தால் அன்புடன் ஏற்று அடுத்த பதிப்பில் அத்திருத்தங்காண முயற்சிப்போம்.

இந்நூல் இனிது வெளிப்படத் துணைபுரிந்த இந்துசமய அபிவிருத்தி ஆலோசனைச் சபையாருக்கும், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்களுக்கும், சுன்னாகம் கலாதேவி அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றியுரித்தாகுக.

சுபம்.

இந்துசமய விருத்திச் சங்கம்.
கீரிமலை.
31 - 1 - 61

ந. சி. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

KOHA JPL
114844
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படலம் அகராதி

| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | 1 |
| 2. | அவையடக்கம் | 4 |
| 3. | திருநாட்டுப்படலம் | 5 |
| 4. | திருநகரப்படலம் | 10 |
| 5. | பாயிரப்படலம் | 17 |
| 6. | தலவிசேடமுரைத்தபடலம் | 19 |
| 7. | தீர்த்தவிசேடமுரைத்தபடலம் | 26 |
| 8. | மூர்த்திவிசேடமுரைத்தபடலம் | 35 |
| 9. | நகுலமுனியாத்திரைப்படலம் | 51 |
| 10. | இராமயாத்திரைப்படலம் | 60 |
| 11. | நளன்யாத்திரைப்படலம் | 69 |
| 12. | அரிச்சுனன்யாத்திரைப்படலம் | 72 |
| 13. | மாருதப்புரவீகவல்லியாத்திரைப்படலம். | 77 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலகிரிப்புராணம்.

## கடவுள் வாழ்த்து

### வீரகத்திவிநாயகர்

### காப்பு

அலைதிகழுங்கடலுலகினுருயிர்களெண்ணமுறக்
கலைதிகழுமதிமவுலிக்கடவுளுமைகண்களிக்கத்
தலைதிகழும்பிரணவத்தின்முதலெழுந்துதனிநகுல
மலைதிகழும்வீரகத்திவிநாயகனை மனந்துதிப்பாம். 1

### சிவ வணக்கம்

பரிதிநிகர்ஒளியானைப்பரந்துநிறைவெளியானைப்பரிவினானை
வரிசையுடனுகைத்தானையருங்கயிலையகத்தானைமழுவைமானை
உரிமையுடன்பரித்தானையொளிருமறைவிரித்தானையுருவிலானை
அரியபுலியதளானை அலரிதழியிதழானையகமேற்கொள்வாம். 2

### உமை

### வேறு

முல்லையரும்பினைநிகரும்முறுவலாளை
முழுமதியந்தனைநிகரும்முகத்தினாளை
மல்லலருள்சொரியுமலர்க்கண்ணினாளை
வரந்திகழும்வரதனிடமருவினாளை
அல்லைநிகர்கரியநிறக்குழலினாளை
யண்டமொடுமுயிர்களைமுன்னளித்திட்டாளை
பல்லுயிருந்தொழவரியபடிவத்தாளைப்
பரிவினுடன்நெஞ்சமதிற்பரவிவாழ்வாம். 3

### நகுலேசுரர்

### வேறு

வையமீதினிலுயிர்களுக்கிகபரம்வழங்கத்
தையலாணகுலாம்பிகைதணந்திடாதமரச்
செய்யமேனிகொண்டமர்ந்தருளுதவுதெய்வீகத்
துய்யதோர் நகுலேசனதிருபதந்துதிப்பாம், 4

18-6-1995
114843
3893 ட
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நகுலாம்பிகை

நாதனுமரனைந்தெனுந்தொழிலதை நடத்தத்
தீதிலாததோர் திருவருட்சத்தியாய்த்திகழ்ந்து
காதலோடுயர் நகுலமால்வரையிடங்கவினும்
ஏதிலா நகுலாம்பிகையெழிற்பதந்துதிப்பாம். 5

### விநாயகக்கடவுள்

வேறு

சீருற்றிலங்குமுயர் நிமலைமருங்காய்த்திகழுஞ்சிவனருளால்
மூரிக்குவட்டுக்கடாக்களிற்றுமுகத்தோடுதித்துமுன்னியவை
நேருற்றுலகினுயிர்கள்பெறச்சிந்தையிரங்கிநெடிதினருள்
கூருற்றமர்ந்தவைங்கரங்கள்குலவுமமலனடிபணிவாம். 6

### வைரவக்கடவுள்

வேறு

வரமருளுமீசனைமுன்வாயினிகழ்ந்திடுமலரோன்மவுலிதாங்கும்
சிரமதனைக்களைந்துதிறற்கரமேந்திமருங்கதனிற்சிறந்ததானை
பரவிவரமான்முதலாம்பண்ணவர்களிடமணுகிப்பலிமுன்கொண்டே
உரமருவுஞாளிதனிலுறுவடுகன்சரணமதையுளமேற்கொள்வாம்.

### வீரபத்திரக்கடவுள்

வேறு

இந்துவேணிகொளீசனைவாயினிலிகழ்ந்தே
அந்தரத்துறுந்தேவரோடழன்மகந்தன்னை
முந்தைநாட்புரிதக்கனைமுடித்தலைதுணிக்க
வந்தவீரபத்திரனடிசிந்தைமேல்வைப்பாம். 8

### சுப்பிரமணியக்கடவுள்

வேறு

ஆண்மையுறுமவுணரொடுஞ்சூர்விழிய
ஞாங்கர்விடுத்தமரர் நாதன்
சேண்மருவுந்தேனுநிதிமந்தாரங்
கொடுத்தசெழுந்தேறன்மாலை
மாண்மகுடந்திகிரிசெலுமரசுபெற
வீந்துபுதுமயின்மீதூர்ந்தே
பூண்மருங்கினிருமாதர்புடையினுறுங்
குமரனடிபோற்றிவாழ்வாம். 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

பண்ணுசோழமாமன்னவன்பரிந்தருள்புதல்வி
உன்னுமன்பினுலுவந்துமுன்னதிதனின்மூழ்கித்
துன்னுபூசனைபுரிந்திடப்பதிட்டைசெய்தூய்மை
மன்னுமாவையின்கந்தர்க்குவந்தனைபுரிவாம். 10

வீறுமேவியவிண்ணுலகுற்றிடும்விபுதர்
நாறுமாமலர்தூவிமுன்னலனொடும்வணங்கக்
கூறுசீர்நகுலாசலந்தன்னிடைக்குடிகொ
ளாறுமாமுகனடிகளையகந்தனில்வைப்பாம். 11

### திருஞானசம்பந்தர்

அந்தமாதியில்லாததோர்சிவனதின்னருளால்
வெந்திறற்கொடுஞ்சமணரைவேரறமுனிந்து
நந்தலின்றிநீள்சைவநன்னெறிநிலைநடக்கத்
தந்தஞானசம்பந்தர்தாடலைமிசைக்கொள்வாம். 12

### திருநாவுக்கரசு
### வேறு

புல்லியபொய்யுரைபுகலுஞ்சமணர்குழாம்புணரிதனிற்
கல்லுடனேகட்டியிடக்கண்ணுதன்மேற்கவிபாடி
அல்லல்கெடநாவாயிற்கொண்டுகரையணுகியருஞ்
செல்வமுறுநாவரசின்சேவடிகடனைப்பணிவாம். 13

### சுந்தரமூர்த்தி
### வேறு

முகைவிண்டிழியுந்நறவுநதிமூழ்கிச்சாலிவயல்கண்மிசை
நகைகொண்டுரியகதிர்கண்மிகநளிரும்வெண்ணைநல்லூரின்
தகைகொண்டரனைப்பரவையெனுந்தையலிடமாய்த்தூதுபுக
வகைவிண்டனுப்புமேந்தலிருவனசமலரினடிபணிவாம். 14

### திருவாதவூரடிகள்

மருவார்நிம்பவலங்கல்புனைவழுதிக்கிவுளிகொளநடந்து
தருவானிமிருந்துறைபுகுந்துதயவோடமலன்றனைத்தொழுது
கருவார்பிறவிக்கடல்கடந்துகனகசபையினிடமிலங்கும்
உருவோடுடனற்கதிபுகுந்தவூரர்பாதமுளநினைவாம். 15

### விஷ்ணுமூர்த்தி

கஞ்சமாமகள்மார்பினிற்கவின்குடிகொள்ள
மஞ்சுபோனிறமேனிகொண்டுயிர்களைமரபின்
அஞ்சலீரெனக்காத்தருள்செய்துமுன்னமர்ந்த
பஞ்சவாயுதந்தாங்கியமால்பதம்பணிவாம். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடியார்கள்

அங்கமீதினினீறுகண்டிகைவடமணிந்தே
பங்கநீக்குமஞ்செழுத்தினைப்பகர்ந்துநாடோறுந்
துங்கமோடரன்றுணையடித்தாமரைதொழுது
தங்குதொண்டர்தம்பதமலர்தலைமிசைகொள்வாம் 17

சரசுவதி

கல்வியாகியகடன்மடைதிறந்துகாதலினல்
பல்லுயிர்க்கணவிதையமாம்பணைதனிற்பரப்பி
மல்லல்சேரறிவெனும்பயிர்வளர்த்துநாவமருஞ்
செல்விநாமகள்சேவடிசிந்தனைசெய்வாம். 18

கடவுள் வாழ்த்து முற்றிற்று
ஆ. விருத்தம் 18

---

# அவையடக்கம்

உன்னருநகுலமால்வரையினும்பரும்
மன்னியேதொழுநகுலேசன்மாண்கதை
தன்னைமாநிலமிசைதயங்கியோங்குறப்
பன்னருங்கவிதையாய்ப்பகருவாமரோ. 1

வேறு

தலங்கொண்மான்மியந்தாவிலதீர்த்தமீ
திலங்குமான்மியமீசர்தமான்மியம்
புலங்கணீக்கிப்புகுந்தவர்பெற்றிடு
நலங்கொண்மான்மியம்யாவும்நவிலுவாம். 2

அறுகணிந்தவரனிடம்நந்திமுன்
உறவுணர்ந்துமுனிவர்க்குரைத்திட
முறையுணர்ந்திடுசூதன்முனிவர்கள்
பெறவிருப்பொடுபேசியதிக்கதை. 3

திருமலர்க்குநிகழ்த்துபுராணமென்
றுருகிநோக்கும்புலவரிச்செய்யுளின்
பெருகுறும்பிழைபேசுகிலாரெனக்
கருதியானுங்கழறுகின்றேனரோ. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

நூலறிபுலவர்யான் நுவன்றபாடலின்
மாலுறுவழுவமர்ந்தாலுமாற்றிநன்
கேலுறத்திருத்துவரென்னுமாசையுண்
மேலெழுமன்பினுல்மெய்ம்மை கூறுகேன். 5

முற்றுணர்வில்லதோர்முட வன்வான்கதிர்
பற்றிடமுயல்வதோர்பான்மைபோலுமால்
நற்றலம்புகழ்நகுலேசன் மாண்கதை
சிற்றறிவுடையயான்செப்பநின்றதே. 6

பலகதையுணர்ந்தபாவாணர்முன்புறக்
குலவுமித்தொல்கதை கூறற்கெண்ணுதல்
வலனுறும்வெயிலவன் மருங்குநிற்குபு
நிலவுதண்கதிர்விடநினைத்தல்போலுமே. 7

அவையடக்கம் முற்றிற்று.

ஆ. விருத்தம் 25

# திருநாட்டுப்படலம்

பாசநீங்குதொன்முனிவரர்பண்ணவர்பரவு
மீசனுரருணிறைந்திடுமிலங்கையின் வடபால்
மாசகன்றிடுமீழநாட்டணிதனை மண்ணேர்
நேசமோடுறுமியல்பினுனெடிதுரைசெய்வாம். 1

வாக்கினீடியகலைமகள்வடிவெனவயங்கி
மீக்கிளர்ந்துறுபுயலினம்விரிகடல்பருகிக்
காக்குநல்லருள்விமலையினுருவெனக்கறுத்து
நீக்கமின்றியேநகுலமானெடுவரைபடிந்த, 2

வேறு

ககனமேலிரவியின்கதிர் மறைந்திட
அகலுநீண் மலைதனிலடுத்தபைம்புயல்
சகமெலாந்தனதொளிசாரமின்னலுற்
றிகலினுன்முழங்கிமீதிடிகள்கான்றன. 3

பூந்திருவிரும்பிநேர்புகுந்தயாசகர்
வாய்ந்திடுமனமகிழ்வடையவள்ளல்கள்
ஈய்ந்திடுதன்மையினெங்குந்தேங்குற
மீந்தநன்மழைதனை மிசையிற்பெய்தவே, 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

இந்தமண் மகண்மேனியையிரவியின் கிரணம்
முந்தவேசுடவெழுந்திடுமுழுவருத்தத்தைச்
சிந்தியீரமேசிறந்திடவழங்குவனென்னுப்
புந்தியுன்னியபோன் மிகுபுனலினைப்பொழிந்த. 5

வேறு

மற்றிணையிலாதநீண்மலையின்மேலதாய்
உற்றிடும்புயன்மழையுதவுதோற்றமேல்
பொற்பினித்திலக்குடைபொலியப்பூமகள்
நிற்புறுகின்றதோர்நீர்மைபோன்றதே. 6

மலையின்மேற்பெருங்கடன் மருவிமாண்டகு
மலையினோடவனிமேலதிர்ந்துபாய்ந்தெனத்
தலையின்மேனித்திலந்தயங்கத்தண்ணிய
நிலையினுற்றிசைதொறுநிலவிச்சென்றதே, 7

வாங்குமேழ்கட லிறைவருணன் றன்னையான்
ஓங்கவேமணம்புரிந்தொழுகுவோமெனத்
தாங்கியசங்கொடுந்தாவில்கங்கையாள்
பாங்குறப்போவதோர்பான்மைபோலுமே. 8

வேறு

எதிரினுற்றிடுங்கதலிமாவருக்கையெண்ணிலாத
கதிரவன்றனைநோக்குநீண்மரங்களைக்கனிகள்
உதிரவேயுறுதூரொடும்பறித்துடனெழுந்து
முதிரமுன்பரந்தேகினபுவிமிசைமுறையால். 9

வேறு

கயலொடுசுருவினங்களுலப்பாய்தரும்
இயனதிகங்கையாமிசைகொள்பேரொடும்
வியனுறுகுளம்பலமேவிப்பாய்ந்துசென்
றயலுறும்வயல்களினணுகியார்ந்தவே. 10

பண்ணைவாயுததிபோற்பரந்ததன்மையைக்
கண்ணுறுங்களமர்கள்களிப்புமீக்கொள
நண்ணுமந்நிலங்களினயந்துகூடியே
உண்ணிறைபயிர்செயவூக்கினார்களே, 11

வலங்கொணேர்வளைதிகழ்வயலினீடுறும்
விலங்கலைநிகர்தருவிடைகள்பூட்டிடாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலங்கையிற்கோல்கொடுபோக்கிச்சாலுற
நலம்படவுழுதனர்நாட்டின்மள்ளரே. 12

மடையின்வாய்மருவியவால்வளைக்குலம்
விடைகளின்றுள்படவெருவிவேறிடம்
அடைவனவாண்மையோரணுகவஞ்சியே
புடைதனிலொதுங்குறும்புன்மையாளர்போல். 13

புரையிலாநிலமகள்புனையும்பூணென
நிரைதருஞ்சாலுறநெடிதுதானுழாத்
தரைதனைவிரவுசேருக்கித்தங்களில்
விரைதருநெற்களைவிதைத்திட்டனரே. 14

நான்முகனுயிர்களைநல்குந்தன்மையிற்
சான்முகக்களமர்கள்சாலிநாற்றினை
மீன்முகந்தருவயன்மிசையினிட்டுயர்
வான்முகநோக்குறவளர்த்திட்டார்களே; 15

நாற்றுமேல்வளர்தலுநயந்தமள்ளர்கள்
கூற்றினோடமர்செயுங்குந்தநேர்விழி
தோற்றுழத்தியர்தமைச்சொல்லுநெற்களை
வீற்றுவீற்றுறநடவிரைவினேவினர். 16

வள்ளவாய்நிறைதருமதுவையுண்டினி
துள்ளமேற்களிப்புடனுழத்திமாதர்கள்
தள்ளுறநடந்துதங்கொழுநர்தங்கிய
பள்ளநீர்ப்பணைதொறும்பரிவினெய்தினர். 17

கலங்கண்மீதணிந்துறுகளமர்மாதர்கள்
நலங்கிளர்நாற்றினைப்பிடுங்கிநார்தொடுத்
திலங்குபச்சிலைகளைந்திணங்கநேர்கொடு
குலங்களோடினிதுறக்குழுமிநட்டனர், 18

கார்நிகர்கூந்தலார்களனிவாய்தனில்
நேர்தரநட்டநேர்நெற்குழாத்தினுள்
வார்தரமுளைத்தபுற்குழுவைவண்கையால்
வேரறக்களைந்துவெவ்வேறதாக்கினர். 19

நிரவியகற்பகந்நிவந்தநாடுமேல்
விரவுவிண்ணுலகெனவிளம்பலாலிசை
பரவுமண்மாதுநெற்பயிரைக்கற்பக
தருவெனவளர்த்தலிற்றயங்கிநின்றதே. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினையுருவமுற்றெய்திமண்மிசை
வருமுயிர்க்குறுபயன்வழங்கநின்றென
மருவுநற்கதிர்மிகுவிளைவைமல்கிட
விரவுபுன்கதிர்களும்விளங்கிநின்றதே. 21

கண்ணுதலீசனைக்கசிந்துபோற்றிடாத்
திண்ணியர்மனமெனத்திகழ்ந்தபுன்கதிர்
எண்ணியவன்பர்களிதையம்போலுயர்
தண்ணறும்வயல்களின்விளைந்துசாய்ந்தன. 22

இளந்தருநெல்விளைந்தினிதுசாய்ந்ததை
உளங்களிகொளமகிழ்ந்துழவர்நோக்குறு
விளங்குமீர்வாளினல்விரவிக்கொய்திசை
துளங்குறுபோர்களைத்துவன்றவைத்தனர். 23

இந்திரத்தெய்வதமிறைஞ்சியாவருந்
தந்திடும்போர்களைத்தான்பிரித்தெடா
வுந்தியபகடுகொண்டுறமிதித்தபின்
அந்தவைக்கோறனையகற்றினாரரோ. 24

சங்கமார்மள்ளர்கள்மிதித்தசாலியிற்
பொங்கியபதர்புறம்போகத்தூற்றுரு
வங்கணேரளவுகண்டரசனேமுதற்
பங்கமில்கடமைகள்பலவுமீய்ந்தனர். 25

தக்கதோர்நெற்குவைதனைத்தமில்லிடை
புக்கதோர்புதியவரோடும்பொற்புறும்
ஒக்கலோடிசைந்தினிதொருங்கினூட்டியே
மிக்கதோர்செல்வமீதோங்கமேவுவார். 26

சிவனடித்தொண்டினிற்சிறந்துளோரையும்
புவனமேல்விரதங்கள்பூண்டுளோரையும்
தவமிகுபெரியவர்தமையும்பூசித்தே
பவநெறியகன்றிடப்பரிவினூட்டுவார், 27

நல்லபேரறிஞர்கள்வதிதல்நாடிய
புல்லறிவினரொருபுடையொதுங்கவீன்
மல்லல்சேர்முதிரையெண்மாடமாதிய
பல்வகையுறும்பயிர்பணைதொறுற்றவே. 28

வயல்புகுமேதியின்குழாங்கள்வாவியின்
அயமதையருந்தியேயரிமைசேர்முலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமதையுகுப்பனபகரிற்பார்மிசைப்
புயன்மழையுதவியபான்மைபோன்றதே. 29

வண்டினமொலித்திடமருவுமாமலர்த்
தண்டலையிடங்களிற்றயங்கநிற்பன
எண்டகுமாரனுக்கெழில்கொள்பூமகள்
பண்டையினியற்றுபூம்பந்தர்போலுமால். 30

தரையினீள்தண்டலையென்றதையலுக்
குரைதருகமுகெனவுரைக்கும்பாங்கியர்
நிரைதருங்கவரியைநின்றசைத்தல்போல்
விரைதரும்பாளைமேல்விரிந்துநின்றதே. 31

பங்கமில்கதலிமாப்பலவின்மீமிசைத்
தங்கியகிளிமொழிதயங்கமேவுதல்
இங்குமுப்பழங்களுமிருந்தயாவருந்
நுங்குதிரென்றுவாய்நுவறல்போலுமே. 32

இன்னிசையளியினமிசைந்தசோலையிற்
றுன்னியகுயின்மொழிதுலங்கமேவுதல்
கன்னல்வேள்களிப்புறக்காகளந்தனை
முன்னுறவூதியமுழக்கம்போன்றதே. 33

அண்டருமுவகையாலரிவைமார்களும்
திண்டிறலாடவர்தாமுந்திங்களின்
மண்டலமளவியமணங்கொண்மாமலர்த்
தண்டலைதொறுமணிதயங்கமேவுவார். 34

பஞ்சடியுறுசிலம்பதிரப்பாவையர்
கஞ்சமாமலர்முகம்வியர்க்கக்காமர்மின்
வஞ்சிபோலிடைமிகவசையவார்கயிற்
றுஞ்சலைப்பொதும்பரினூங்கியாடுவார். 35

கொத்துறுமலரணிகொண்டசோலையிற்
சித்திரமயில்களின்சிறந்தசாயலைத்
தத்தமிற்கிணையதுசாற்றித்தாமமார்
உத்தமவரிவையருவந்துமேவுவார். 36

கிள்ளைகள்சாரிகைத்திறங்கிளத்திய
பிள்ளைநல்லுரைதனைப்பெருவிருப்பினால்
வள்ளைவார்காதினிற்கேட்டமாதர்கள்
உள்ளமேற்களிப்புடனுவந்துமேவுவார். 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுநீர்வாவியின்வனசமேமுதற்
றுன்னியமலரணிதுவன்றிப்பூத்தன
பன்னருமிலக்குமிமேவப்பார்மகள்
பொன்னிருந்தவிசுமுன்னிடுதல்போலுமே. 38

விரவியமள்ளர்கள்விளம்புமோதையும்
முரசுவெண்சங்கொடுமுழவினோதையும்
குரவையினோதையுங்குழுமிமேலெழீஇப்
பரவையினோதையைப்பருகிச்செல்லுமே. 39

ஏவரும்வியத்தகுமெழில்கொண்மாமலர்க்
காவுசூழ்நாட்டணிகழறினேமினித்
தேவர்கண்முதலினோர்பணியுந்தெய்விக
மேவருநகர்வளமேன்மைகூறுவாம். 40

நாட்டுப்படலம் முற்றிற்று.

ஆ விருத்தம் 65

# திருநகரப்படலம்

பன்னுதற்கரும்புவியினோர்பரவவைகுதலால்
உன்னுகின்றசீருதவுறுமுயர்ச்சியதுறலால்
பொன்னினுலுறுமெளலியதணிந்திசைபுனைந்த
மன்னவன்றனைநிகர்த்ததுமாவைமாநகரம். 1

முண்டகத்தவிசமர்ந்ததோர்திசைமுகன்முன்னுள்
அண்டர்நாடுமொன்றவனிமேல்வேண்டுமென்றணுகிப்
பண்டிரைக்கடல்சூழ்ந்தயாழ்ப்பாணத்தின்வடபாற்
கண்டதென்னவேபொலிந்ததுகழறுமிந்நகரம். 2

தன்னிடந்தனிலுற்றிடுமுயிர்கள்செய்தவங்கண்
டன்னைநேருமையரனிணையடிமலர்காட்டிப்
புன்மைநீக்கிநன்னெறிதருங்கதிபுகுவித்தே
மன்னுதேசிகர்ப்பொருவினமாவைமாநகரம். 3

முதிருமன்பினுற்றமதிடமுற்றிடுமுயிர்பால்
எதிர்கொள்பாவமாமிருளதைநீக்கிவானிகந்தே
யதிருநீள்கடல்சூழ்ந்ததோரவனிமீதமர்ந்த
கதிரவன்றனை நிகர்த்ததாற்கவினுறுநகரம். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லினீடிசைகுயிலமர்சோலைகள்சுரும்பர்
வில்லதாகியகரும்புயர்தென்றல்விண் மருவி
அல்லினூர்மதிகடன் முதற்பலபொருளமைவான்
மல்லன் மாரனை நிகர்த்ததுமாவைமா நகரம். 5

அழகுசேர்வடமொழியுடனருந்தமிழனைத்தும்
பழகியுண்மனநிறைவுறுமுபாத்திமார்பயில்வோர்
கழகமீதுயர்சங்கமிட்டமர்தலாற்கலையாள்
மழவுகொண்டுவாழ்மதுரையேமாவைமா நகரம். 6

நேசமோடுதன் னிடந்தனினேர்ந்தவாருயிரின்
பாசநீக்கியெண்கதிதனிற்புகுத்திடும்பரிசால்
ஈசனீள்பெருங்கருணையோடினிதுவீற்றிருந்த
மாசகன்றதோர்காசிமாபுரந்தனைமானும். 7

நலங்கொணான் மறையந்தணர் நவின்றுமந்திரங்கள்
பொலங்கொணன் மகம்புரிதலாற்பொருவில்பாரினர்க்குப்
பலங்கொணூன் விதிமுறைதனைப்படைத்திடுபண்பால்
வலங்கொணான்முகற்பொருவினமாவைமா நகரம். 8

சரியையேமுதற்சாற்றுநற்பதங்களைச்சகமேல்
வரிசையாயுறுமியல்பினர்க்கிகபரம்வழங்கிப்
புரிசைசூழ்ந்திடுகாஞ்சியம்புரமெனப்புகலும்
பெரியமேன்மைகொண்டமர்வதுபேசுமிந்நகரம். 9

கன்னல்வேளினையெரித்திடுங்கண்ணுதற்கடவுள்
மின்னுவெள்ளிமால்வரைமிசையுமையவள்விரவ
உன்னருந்திருமேனிகொண்டுகந்தமர்ந்தனபோல்
இன்னகர்க்கணுமினிதுவீற்றிருப்பனெந்நாளும். 10

வண்டுழாய்முடிக்கரியவன்வரனுடன்வலாரி
அண்டரேனையமுனிவர்கடம்பதமகன்றே
தொண்டினீர்மையினீசனைத்தொழுதிருந்திடலால்
பண்டைநாளவர்பெற்றிடுபதங்களைப்போன்ற. 11

முன்னர்மாதவநகுலமாமுனிமுசுகுந்தன்
றன்னைநேரிலா நளன்முதற்றரணிபரனாதி
இன்னனீங்கிநல்லிகபரமடைந்திடவருளி
மன்னுமேன்மையுற்றிருந்ததுமாவைமா நகரம். 12

மற்றிந்நீர்மைகொண்மாவைநன்னகரமான்மியத்தைப்
பற்றினோடுயர்பணாமுடிச்சேடற்கும்பார்மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவாயிரந்நாவினிலுரைப்பரிதென்ருல்
முற்றுரைப்பவென்னுவதொன்ருன்முடிந்திடுமோ. 13

பாங்கினீர்க்கடலுடுத்தயாழ்ப்பாணத்தின்வடபால்
ஓங்கநான்முகன்மேருமால்வரைதனையொருங்கே
தேங்கநாற்றிசைப்புறத்தினுந்தெரிந்தெடுத்தும்பர்
தாங்கவைத்தெனத்தயங்கியதடநெடுமதில்கள், 14

கரையினீள்கதிர்நித்திலமிருந்துழிக்கவினத்
திரைகொழித்திடுமுததிசூழ்ந்திடுதலாற்றிறல்கொள்
நிரையினேடருங்ககனமேனிமிர்தரும்வாள
வரையதென்னமுன்வயங்குவமணிதிகழ்மதிலே. 15

வேறு

மண்டலத்தின்மலைகளைமுன்னென்றின்மேலொன்ருகமருவக்கூட்டி
அண்டமதைத்தாங்குதற்குத்திரட்டியொருவடிவாகவமைத்துநீட்டி
முண்டகத்தினிருந்தவயன்சிருட்டிசெய்துமுகடுயரமுன்னுள்மாட்டி
யுண்டுபண்ணிவைத்ததெனநின்றதுபொற்கோபுரங்களுயர்ந்துமாதோ.

மீன்முகங்கொண்டுலவுதற்குமரிதாகிவிண்ணுலகைமிசைவேனென்று
தான்முகங்கொண்டெழுந்துபுவிதலைநீட்டிநின்றதெனத்தளர்விலாமல்
வான்முகங்கொண்மதிநாப்பண்வாயிலொருநான்குமுறவயங்குகாட்சி
தேன்முகங்கொள்வனசமுறுநான்முகன்வாய்திறந்நமருந்திறமைபோன்ற.

முத்திதனையுதவுமிந்தநகரமெனவிண்ணுலகோர்முகத்தைநோக்கிப்
பத்தியுடனவனிதனிலமர்ந்தபலபன்னகங்கள்படங்கொணேர்சென்
றித்தலத்தினீவிரெலாம்வருதிரெனக்கூவியழைத்திடுதல்போல
வைத்தமணிக்கத்திகைகள்வான்முகட்டினுறமலிந்துவயங்குமாதோ.

வேறு

மண்டலந்திகழ்கோபுரமங்குல்மேன்
மண்டலத்தொடுமல்கிவயங்குதல்
கொண்டல்மேனியிற்கோவிந்தனீடுருக்
கொண்டுநின்றிடுகொள்கையதாகுமே. 19

துய்யகோபுரமீதுதுதைந்திடுந்
துய்யதானதுகிற்கொடியாடுத
லையமுற்றயனன்னமதாகியெம்
மையனன்னிலையாய்வதுபோலுமே. 20

பைம்பொன்மாதுபயிலுஞ்சிகரிகள்
பைம்பொனூர்வரையென்றுபகர்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும்பர் நாதனுலகுடன் மற்றைய
வும்பர் நாடுமணித்தெனவோங்கிய. 21

சித்திரந்திகழுஞ்சிகரந்தனிற்
சித்திரித்துளசெய்யபதுமைகள்
பத்தியொன்றுதவம்புரிபான்மையர்
பத்தியொன்றப்பயில்வதுபோலுமே. 22

வலனுயர்ந்திடுமாண்சிகரம்பிறை
வலமதாகவயங்குறுநீர்மைமுன்
நிலவணிந்திடுவேணிகொணின்மலன்
நிலவநின்றிடுதோற்றநிகர்க்குமே: 23

கண்ணாகன்றிடுகத்திகைகற்பகக்
கண்ணகன்சினையைக்கலந்தாடின
விண்ணை நாடியமேற்றலமாதரும்
விண்ணின்மாதரும்மேவியங்காடுவார். 24

நாமிருந்தநகர்க்கிணை நாடிமேல்
நாமியம்பிடநான்முகனிட்டதேர்
பூமிமேலிப்புரந்தனையென்றுபொற்
பூமியோருர் புகன்றிடவுற்றதே. 25

மட்டிலாமணிக்கோபுரம்வானுறல்
மட்டிலாவரனைத்தொழவானவ
ரிட்டமோடுபுவியினிறங்குதற்
கிட்டவேணியதென்ன விலங்குமே. 26

வேறு

கொய்யுளைவாம்புரவியுறுகொடிதிகழுந்தேர்மருவு
வெய்யவனுமிரவதனில்வெண்ணிலவைத்தருமதியு
மையமகல்பொன்னவனுமாதியவாயறைகோள்கள்
வெய்யமணிச்சிகரமதைச்சூழ்ந்துவலஞ்செல்வார்கள். 27

மன்றுமிகுந்திடுநகரமிசைமருவுங்கோபுரத்திற்
றுன்றுபலசூளிகைகள்சுடர்கவினத்துலங்கியுற
லென்றுமதிநோக்கவெழிற்கண்ணுறேடிதனையெதிரி
னின்றுநிலமகளெடுத்துக்காட்டுகின்றநீர்மையதே. 28

மதிக்குடையுங்கவரிகளும்மணிமகரதோரணமுங்
கதிக்கவளர்ந்திடுகொடிகள்கவினநிறைமண்டபமும்
விதிக்கரியசினகரமும்விளங்கிநிறைசுவர்த்தலமுந்
துதிக்கரியமருங்குகளுந்துவன்றிமிகத்துலங்கினவால். 29

3893 ⊂
KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயமதினீறெளிரக்கருதரியகரணமுடன்
நேயமுறும்புலனடக்கிநின்மலனுஞ்சிவனடியில்
ஆயவருமன்புதவியருள்ஞானயோகமுடன்
றூயதவம்புரிகுநர்களொகுதிமிகத்துலங்கியுள. 30

முத்தியினைப்பெறவிரும்பிமுழுமுதலாமரனடிமேற்
பத்தியினைந்தெழுத்தோதிப்பரன்பூசைபயில்பவரும்
நித்தியநல்விரதமுறும்நெறிபூண்டுதவமியற்றிச்
சித்திதனைப்பெறவிரும்பிச்செல்பவருஞ்சிறந்திருப்ப. 31

போதமுறுஞ்சிவாகமநூற்பொருள்பகரவெழுமொலியும்
வேதமொடுசாத்திரமுன்விளங்கவுரைதருமொலியுங்
கீதமிகும்பல்லியத்தைக்கின்னரர்கள்பயிலொலியும்
மாதவங்கொள்சிவனடியார்துதியொலியும்மிகமலியும். 32

வேதநூறனைவருடிவேள்விதனைப்புரிபவர்கள்
ஓதுமுயர்மந்திரத்தையோங்குதருமீதமருங்
காதறருங்கிளிபூவைகேட்டுரைக்கவானவர்கள்
ஏதிலரும்வேள்புரிகின்றனரென்றெய்துவரால், 33

உடம்பிடிநேர்விழிமாதரொடுமைந்தருவந்துறையும்
தடம்பயிலுமேன்மாடந்தயங்கியமர்பலசிகரஞ்
சடம்பயிலாக்கருப்புவிலிதனக்குவிழாப்புரிந்திடமுன்
குடம்பயில்பூரணகும்பம்வைத்ததெனக்குலவுகின்ற. 34

பஞ்சடிநூபுரமொலிக்கும்பதுமையெனமாடமுறு
மஞ்சிலணிந்திடுகேசமங்கையர்கள்சுதியமையக்
கஞ்சமலர்க்கைதனில்யாழ்கொண்டுகானம்பயில
விஞ்சையர்கள்யாருமுளமிகவிரும்பிக்கேட்பார்கள், 35

மட்டவிழுமலர்க்குழலார்வைகுமுயர்மண்டபத்தி
னிட்டபெருஞ்சாளரத்துவாயிலிடையிலங்குமதி
கிட்டுவதையுரைக்கினவர்நோக்குதற்குக்கிளருமொரு
வட்டநிலைக்கண்ணுடியதுவயங்குந்திறனுமால். 36

இதமருவுமேன்மாடத்தியலுகின்றசாளரத்துப்
புதவுவழிநிலவுசெலப்புரிகுழலாரதைநோக்கி
நிதமுறயாமுன்கதிரின்நேசமுறேந்நிசியிலெனக்
கதவையிறுகப்பூட்டிக்கண்டுயில்வாரமளிதனில். 37

காரிகைமார்துயில்வேலைகணவருடனூடியொரீஇ
சீரியசாளரமருங்கிற்சென்றெளிக்கமதிபுகுதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமுகமெனக்கணவர்பரிவினுடன்மோந்திடலுந்
தேரியலுமல்குலினர்தெரிந்துநகைசெய்வார்கள், 38

மயிலினிளஞ்சாயலுறுமாதர்கள்மேல்மாடமிசைத்
தயவினுடனகிற்புகையைத்தாழ்குழலுக்கிடவெழுதல்
கயலுகழுந்திரைமருவுகடலுறுநீர்தனைப்பருகிப்
புயலினங்கள்மிகவெழுந்துபோம்பான்மைதனைநிகரும். 39

அன்னநிகர்நடையார்மேலணிமாடத்தமருதலும்
மன்னுபலசாளரத்தின்மருவியிளந்தென்றல்செலல்
கன்னல்வரிச்சிலைமாரனீண்டுற்றான்கடிதினுமை
இன்னலுறப்போர்புரிவானெனவியம்பவரல்போலும். 40

வள்ளவாய்வனிதையர்கள்மகிழ்ந்துவளர்ந்திடவதியுங்
கிள்ளையொடுகுயிலினங்கள்கசிந்துரைகள்கிளத்துவன
கள்ளவிழும்மலர்க்கணைகொள்காமனிவன்செல்வனென
வுள்ளமதினறிந்தெவர்க்குமுரைத்தமருஞ்செயல்போன்ற. 41

கற்றவராற்புகழ்மருவுங்கவின்மாவைநகரருகின்
உற்றதிரைதருமுவரியொலிமிகவுங்கொண்டுறுதல்
பற்றினெடுமனோபவனாற்படைதிகழப்புறப்படலும்
அற்றமிலாவெற்றிமிகுமுரசமடிப்பதுபோன்ற. 42

தாவின்முகிலுதவியுறுந்தகைமையெனப்பனிநீரும்
பூவினிறைதரவிழியும்புதுநறவுந்திருமறுகின்
மேவியெதிர்சேருக்கமிகுமணமென்மேலெழுந்து
காவலருங்கடவுளர்களுலகினணிகடந்திடுமால். 43

வட்டமதியனையமுகமாதரொடுங்காளையர்கள்
இட்டமுடனணிந்தகற்றுமிலகுகலன்மலர்மாலை
பட்டுடைகள்முதலாகப்பகர்ந்தபலபொருள்களெலாந்
தொட்டமலையிற்குவிந்துவீதிதொறுந்தோன்றிடுமால். 44

மல்லலணிவனிதையரைமைந்தர்களையுடல்வருத்தி
யல்லல்செயநமைக்கணையாய்ச்செலுத்தியமர்புரிகின்றான்
வெல்லனுமைக்கருதிவந்துவெந்தவேளெனப்பரன்முன்
சொல்லுதற்குவாய்திறந்தாலென்னமலர்ந்தனசோலை. 45

உருவிலகுங்கேதகைவானுறவுயர்ந்துசாலமண
மருவியபேரிதழ்விரியமகரந்தம்வயங்கியுறல்
பெருகியெழுங்காதலுடன்பேசுதமதெய்வமெனும்
வரு[illegible]முதேந்திவழிபடுதல்போலுமதே. 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களெனுங்கொழுநன்மரபுறநோக்கித்திகழ்குமுத
மங்கையராம்மனைவியர்கள்வண்டினுடன்முகைவிரிதல்
பொங்குகதிரவன்வெயிலைப்பொறுக்கலோமெனமுறையிற்
றங்களில்வாய்திறந்துமொழிதருவதெனத்தயங்குகின்ற. 47

நிலவுவெளிவரப்புவியின்நிறையுநீர்த்தடமதனிற்
குலவியுறுமணந்திகழ்மென்குமுதமலர்வாய்விரிதல்
கலனணியுந்திருமகள்கோகநகமிசையமர்தலொரீஇ
நலனெடுதன்னிடத்தமரநற்றவஞ்செய்வதுபோலும். 48

நறுவிரைகான்றிடுமுளரிநாண்மலருக்கிடையளியின்
றிறமதிருங்குவளைமலர்திருமகள்தன்னிடமேவப்
பெறுவலெனநினைந்துதவம்புரிந்தபேதைமைநோக்கி
முறுவல்புரிந்தாற்போலப்புடைவிரிந்தமுல்லைமலர். 49

விண்ணுதலாளுமைமருவவிடையதனைவாகனமாய்
மன்னிவருநகுலேசவள்ளல்பதந்தொழுமவர்கள்
கன்மவினையகலுமெனக்கழறவாய்திறந்ததுபோன்
மின்னொளிகால்முகையவிழ்ந்துமிகவிரிந்தகரவீரம். 50

கண்ணகலுங்ககனமிசைத்தாரகைகள்கவினுறுதல்
மண்ணுலகினிலங்கைதனில்மருவுகின்றபலநகருட்
புண்ணியங்கொணகர்மாவைப்புரமதெனும்மொழிவினவி
யெண்ணரியவிழியுவணையெய்திநோக்குறல்போன்ற. 51

சந்தமுடனகில்கமழுந்தண்பனிநீர்மலர்மாலை
நந்தலிலாநரந்தமுடன்நகைதவழுங்கருப்பூரம்
புந்திமகிழ்பூந்துகில்கள்பூகதக்காய்வெள்ளிலைகள்
அந்தமிலாப்பொருளமருமாவணங்கள்மிகமலிந்த. 52

சங்கினங்கண்முரசமொடுந்தயங்கிமுழங்குறமனையின்
மங்கலங்கொண்மாலையணிவதுவைபுரிவாரொருபாற்
றங்கியமுத்தீவேள்விதயங்கவளர்ப்பாரொருபால் 53
இங்குளதொன்னிலைபல்வுமிலங்கவிருந்தனநகரம்.

நற்றவர்கள்போற்றிசெயுந்நகுலேசனருண்மிகவு
முற்றபுரமகிமைதனைச்சிறிதுரைத்தேனுறவினிமேல்
அற்றமிலாத்தலந்தீர்த்தமகிமையுடனடியவர்கள்
பற்றினுடன்றொழுதுகதிப்பான்மையடைந்ததுபகர்வாம். 54

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆ விருத்தம் 119

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயிரப் படலம்

சந்தவோசைகொணான்மறைசாற்றியவிதியின்
நந்தலில்லதோர்மகந்தனை நாடொறுநடத்தி
வந்தவாறெண்ணாயிரரெனுமுனிவர்கண்மரபால்
அந்தநைமிசாரணியத்தினமர்ந்தனரன்றே. 1

நாதனாகியகண்ணுதனளினபாதத்திற்
காதலாலமர்மாதவமுனிவர்களிக்க
மாதவந்திகழுற்றிடுசூதனுண்மனத்தி
னாதரத்தினைமிசவடவியினுற்றான். 2

புக்கசூதமாமுனிவனைப்புகலருந்தவத்தால்
மிக்கமாதவர்யாவருங்கண்டெதிர்மிடைந்து
தொக்கினோடிருபதமலர்தொழுதுதொன்மனையிற்
றக்கபீடிகையளித்துமுன்றயவுடனிருத்தி. 3

அன்னைபோலமருந்தவச்சூதனுக்கருகின்
முன்னுமாதவரருக்கியமுதலமுன்னுதவி
உன்னுதற்கருமெங்கள்பாலுவந்துநீயுறுதற்
கென்னமாதவஞ்செய்துளோம்யாமெனவிசைத்தார். 4

விள்ளுதற்கருமுனிவர்கள்சிந்தைமேல்விருப்பை
வள்ளல்மாமலரோனிகர்சூதனுமகிழ்வுற்
றுள்ளநீள்பரிசுத்தராமுமைநிகர்த்தவரை
எள்ளலின்றிமுன்காணலெம்போல்பவர்க்கினிதே. 5

என்றுசொல்லியசூதனைமுனிவர்களேத்தி
தென்றல்மேவியகாவுசூடென்னிலங்கையி
லொன்றுமாநகுலேசர்தன்னுசிதமான்மியத்தை
நன்றினோடியாமுணர்ந்திடநவிலுதியென்றார். 6

இன்னவாய்மையையேற்றிடுசூதனுமிசைப்பான்
மன்னுமேருவின்சிகரத்தைவாயுமுன்பறித்துத்
தென்னிலங்கையினெறிந்ததைத்தெரிந்துறுகயிலை
தன்னில்மேவியதற்பரன்கடவுளர்தயங்க. 7

நீடுகாதலில்வந்தமர்பான்மையும்நினைவால்
நாடுதற்கருமுமையவள்முழுகநற்கங்கை
நீடலுற்றதுமுயர்தருதேவர்கணெறியால்
வீடுபெற்றிடும்பூசனைவிரைந்தியற்றியதும். 8

வென்றிவேலுளமுருகவேள்முசுகுந்தன்வேத
நன்றுணர்ந்திடுநகுலமாமுனிநணுகியதுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்றுகீரியின் முகமகலுற்றதுந்துகடீர்
தன்றிருப்பெயரிலங்கவத்தலத்தினிட்டதுவும், 9

வரிந்தவில்விறலிராகவனுற்றதும்வயத்தால்
விரிந்திடுங்குடைநளனுடன்விறற்குருகுலத்திற்
பரிந்தபார்த்தனீண்டுற்றதும்பாரதையரசு
புரிந்தமற்றுளமன்னர்கள்முன்புபோந்ததுவும். 10

ஓதுதற்கருமிவர்முதலுற்றுளோருவந்து
மேதகுங்கடல்படிந்துளவிருப்புடன்மேவும்
நாதனுநகுலேசனுல்நல்லருளடைந்தார்
காதலாலதைக்கயிலைமான்மியமதுகழறும். 11

சொல்லுதற்கருமத்தலந்தனிலருள்சொரிந்தே
பல்லுயிர்க்குலமுய்திடப்பரமனும்பரிவால்
எல்லையற்றதோரன்பினொன்னுளினுமிருப்பான்
நல்லமாதவமுனிவிர்காளென்றவன்நவில. 12

நாட்டமூன்றுளவள்ளல்மான்மியந்தனை நன்கு
கேட்டமாதவர்யாவரும்கேள்வியார்சூதன்
றுட்டுணைக்கமலங்களிற்றுழ்ந்தனரெழுந்தே
யீட்டுமன்பினில்விரிவதாயியம்புதியென்றூர். 13

நிரையினீடியமுனிவர்கள்நிகழ்த்தவிவ்வாறு
கரையினுன்மறையாகமநிலையிசைகவினத்
தரையின்மீதுறநிறுவியதவமுனிச்சூதன்
புரையிலாததோரிலங்கைமாபுரந்தனிலுற்ற. 14

கலந்திகழ்ந்திடுகடலின்வாய்பெருகிமுற்கவினும்
நலஞ்சிறந்திடுகங்கைமான்மியத்துடன்நவையில்
வலஞ்சிறந்திடுமூர்த்திமான்மியத்தையும்வரங்கொ
டலஞ்சிறந்தமான்மியத்தையுஞ்சம்புதாள்சார்ந்த. 15

மட்டிலாப்புகழ்மருவியதொண்டர்மான்மியமுந்
திட்டமாயுமக்குரைசெய்வேனெனத்திகழ்சூதன்
உட்டெளிந்திடவியாதனதுயர்ந்ததாளுன்னி
இட்டமோடவர்முகந்தனைநோக்கியீதிசைப்பான். 16

பாயிரப்படலம் முற்றிற்று.

ஆ. விருத்தம் 135

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலவிசேடமுரைத்த படலம்

நாகநீள்கலைமதியுடன் நதிபுனைவேணி
யேகநாயகனிருமலனுமையுட னிசைந்தே
பாகசாதனன்முதலியபண்ணவர்பரவ
மாகமேநிமிர்கயிலைமால்வரைதனிலுற்றான். 1

கனிவினீள்சுதிமருவுயாழ்கைக்கொள்கந்தருவர்
துனிவினாரதர்தும்புருவேழிசைதுலங்க
வினிதினார்தருமமுதெனவிசைந்தபண்ணெழுப்பிப்
பனிதருங்குரற்றந்திரிதடவிநேர்பாட. 2

மஞ்சுநேர்குழன்மேனகைமுதலவிண்மடவார்
கஞ்சநேர்கரம்விழிகளிற்சதிமுறைகவினப்
பஞ்சினாட்டியபதங்கள்மென் நடமதைப்பயில
வெஞ்சலில்லதோர்துதிமொழிபாடிமுன்னேத்த. 3

வெய்யபானுவும்மதியமும்வெவ்வரவதனால்
அய்யநாமிகவருந்தினோமருள்புரிகென்றே
துய்யநீடிருபாலினுந்தொழுதுநின்றென்னச்
சையநேர்தருஞ்சாரதர்வெண்குடைதாங்க, 4

எம்மையாளுடைநாயகனுதல்விழியெழுந்த
வெம்மைநீள்கனல்மாற்றிடவேணியின் மிலைந்த
செம்மையாகியநதியுறுதிரைகள்சென்றென்ன
தம்மினீண்டியபவனர்கள்சாமரைவீச. 5

அன்னையாமுமைபங்கினனங்கமீதணிந்த
பன்னகங்கள்மீதெழுந்துதம்படமதைவிரித்து
முன்னருற்றிடுதன்மையின்முறைபுரிகணர்கள்
பொன்னினீடியவாலவட்டங்கொடுபோற்ற. 6

காயமீதினில்நீறுகண்டிகைவடங்கவினுந்
தூயவன்பர்களுருத்திரர்துளாய்முடிபுனைந்த
மாயனான்முகன்மகபதிமுதலினோர்வணங்கி
நேயமோடிருதாண்மிசையணிந்துநேர்பரவ. 7

மணமலிந்தநீழ்கற்பகமரங்களினமர்ந்த
விணரவிழ்ந்திடுமலர்களைவிடங்களிற்றூவக்
கணர்மருங்கினிற்சுரிமுகமாதியாய்க்கழறுங்
குணிதமில்லதோர்பல்லியமியம்பியேகுழும. 8

பொதுசன நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைமேலிடுமைம்புலன்களை மிகவடக்கிப்
பாசநீக்குமைந்தெழுத்தினை விதிமுறைபன்னி
மாசில்காட்சிகொள்பரமனிணைமலரடிபரவி
நேசமிக்கதோர்ஞானியர்துதிமொழிநேர. 9

நிலைதரும்புவியாசையையொருங்குறநீக்கி
தலையதாஞ்சிவதத்துவநெறிதனிற்றயங்கிக்
கலைகணான்மறையாகமநிலைகளைக்கண்டு
துலையினோர்தருமனதினர்துதிமொழிகூற. 10

அருண்முகங்களோரைந்துடனையிருகரமுங்
கருவிளங்கியகண்டமுங்கருணைகொள்விழியுந்
திருவிளங்கியபரையுடன்மான்மழுத்திகழ
மருவிளங்கியவிதழியார்மவுலியும்வயங்க. 11

மணிகொள்பீடமீதமர்தருமெம்பிரான்மருங்கிற்
பணியுமான்முதலோர்களுக்கருளொடுபகர்வான்
அணிகிளர்ந்ததோர்சேடனுமூதையினரசுந்
தணிவிலாதுயர்மேருமால்வரைதனிற்சார்ந்தார். 12

மறமெழுந்துசேரிருவருந்தங்களின்வலிமைத்
திறமைகூறிமுன்சிந்தையில்மிகுசினந்திகழப்
பொறிகொளாயிரந்தலையுளசேடனப்பொருப்பை
விறலினீடுறுந்தன்படம்விரித்துமேல்மறைக்க. 13

வேறு

வெவ்வலியுடனேயந்தவெற்புறுசிகரந்தன்னைத்
தெவ்வலியுடையவாயுதேவனும்பிடுங்கிமுன்னாள்
பவ்வமீதெறிந்தபண்பாற்பரவுதென்னிலங்கையென்னு
மெவ்வமில்சிறப்பினீடுந்திரும்பெயரெய்திற்றன்றே. 14

இன்னதோரியல்புபூண்டவிலங்கையின்மகிமைதன்னை
நன்னயமுடையநந்தியுணர்தரநவின்றேன்யானு
மன்னதோர்நகரந்தன்னிலமர்ந்தருள்செய்யநீவி
ரென்னுடன்வருதிரென்றானியாவுமாயமர்ந்தநாதன். 15

வன்னிநேத்திரமதுற்றவரதன்மான்முதலோர்தங்கட்
கின்னவாறுரைத்துப்பின்னரிமையமாதரசியோடும்
மன்னியமறைகணான்கும்வழுத்திடமணிகளிட்ட
பொன்னினாசனமிகந்துபொருக்கெனவெழுந்தானன்றே. 16

முன்னுறுகின்றதெய்வமூரிவெள்ளேற்றின்மீதே
பொன்னி[illegible]மாதுபுடை[illegible]பொருந்திமேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னுவெண்கயிலைமீதுமேருமால்வரையுற்றென்னத்
துன்னினனமரர்யாருந்துணையடிதொழுதுபோற்ற. 17

சங்கொடுபேரிகொம்புதண்ணுமைதடாரிதக்கை
பொங்கொலிமுரசந்தேவதுந்துபிபொலிந்தசின்னந்
தங்குகாகளங்களாதிதயங்குபல்லியங்கடன்னை
யெங்கணுந்நிரந்தபூதரியம்பவருமிசைத்துச்சென்றார். 18

வெள்ளிமால்வரையினின்றுவேயினைப்பழித்ததோளும்
அள்ளிலைநெடுவேற்கண்ணுங்கொளுமையுடனமலனேகி
உள்ளமேல்மகிழ்வுபெற்றவும்பர்கள்புடையிற்சூழத்
தள்ளரும்விளைவாற்றெய்வத்தலங்களையிகந்துசென்றார். 19

வரந்தருமுமைபங்காளன்வயந்திகழ்பூதர்சூழப்
புரந்தரனயன்மாலாதிப்புகலும்வானவர்களியாரும்
கரங்குவித்திறைஞ்சுதெய்வத்தலங்களையிகந்துசென்று
சுரந்திகழ்மறைகளார்குந்துதிபுகல்சுரத்திற்புக்கான். 20

இருக்கடனால்வேதங்களிறைஞ்சுமவ்விடத்திலீசன்
விருப்புளவுமையாளோடும்விடையினாலினிதினீங்கித்
திருப்பயில்முகுந்தனாதிதேவர்கள்மருங்குசெல்ல
வுருப்பொலிசிகரந்தாங்குமாலயத்தினிதினுற்றான் 21

மாலயன்முறையினின்றுவழுத்திடமறைக்கானத்தின்
ஆலமுன்னருந்துகண்டனுமையோடமர்ந்தகாலை
ஞாலமன்னுயிர்கட்கெல்லாம்பகலினைநல்கும்பானு
வேலைபின்மருங்கினந்தவெற்பினில்மறைந்துசென்றான். 22

பூதலமடந்தைதன்பாற்புகுந்திடுமிருளென்றேதுந்
தீதுகொளவுணர்தங்கடிறத்தினைநோக்கின்மிக்க
பாதகமெய்துமென்றைப்பரிவுடனகன்றான்போல
மேதகுபரிதிப்புத்தேள்மேற்றிசைமறைந்துசென்றான். 23

ஆயிரங்கிரணமுள்ளோனத்தவெற்படைந்தகாலை
மேயதோர்செக்கர்வானம்மேற்றிசையெழுந்தபான்மை
ஏயதோரிறுதிகாலத்தெழுதருவடவையென்னுஞ்
சேயிருந்தழல்வானோங்கிநின்றிடுஞ்செய்கைபோலும். 24

விண்ணுறவெழுந்துமேல்பால்விளங்கியசெக்கரென்னு
மண்ணலோடமரஞ்செய்யவகமிசைநினைந்துகங்குல்
எண்ணரியேயழலின்மாயவடிவுருவெதிரினூக்கம்
நண்ணிமுன்சூழ்ந்தாற்போலஞாலமேநிறைந்ததன்றே. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவனந்தனில்மேவுற்றமாதுபங்காளன்றன்மேல்
அறைதருமிமையோர்நாட்டினமர்ந்தகற்பகக்கானின்று
நறைகொடார்முகைகள்விண்டநகைமலர்சொரிந்ததென்ன
நிறைவினீள்ககனமெங்குந்தாரகைநிரையிற்பூத்த. 26

அருணனீள்பகற்காலத்தையரசுசெய்தனனல்மற்றைப்
பொருவிலாக்கனலோன்மாலைப்பொழுதினையரசுசெய்தான்
இரவினையரசுசெய்வானெண்ணியேமதியமென்போன்
உரமொடுங்குணபாலின்கணுவந்துமுனுதயஞ்செய்தான். 27

காசினிபரந்துநின்றகங்குலென்றுரைக்கும்பெண்பால்
ஆசைமேற்கொண்டுவானிலம்புலிகதிரென்கையாற்
றேசுளவுடுமீனென்னுந்தேமலர்த்தொங்கல்சூட்டி
நேசமாய்வதுவைசெய்யநினைந்துசென்றவனைநேரும். 28

பகர்தருமலர்களென்னும்பகளிகொள்மாரன்காணப்
புகலரும்வதுவைதன்னைப்புரிந்துநன்மதியமென்போன்
அகலிருவிசும்பென்றேதுமமளியிற்புணர்ந்துசெல்ல
மகிழ்வுடனமர்ந்தாளந்தக்கங்குலென்றுரைக்குமங்கை. 29

கள்ளுறுஞ்சோலைமேவுகாமர்கொள்சுரும்பராதி
உள்ளபல்லுயிர்களெல்லாமொடுங்கிநல்லுறக்கஞ்செய்ய
தள்ளருங்கரத்தானீவித்தாலாட்டுமன்னைபோல
நள்ளிருளென்னுமங்கைஞாலமேலமர்ந்தாளன்றே. 30

தாட்டுணைமுத்திதன்னைத்தலந்தனிலுயிர்கட்கென்று
மீட்டமோடளிக்குமீசற்கிருள்மருங்குற்றதென்னக்
கீட்டிசையமர்ந்தபாகசாதனன்கிளர்தீபத்தைக்
காட்டியதன்மைபோலக்கதிரவனுதயஞ்செய்தான். 31

இரவிகீழுதயவெற்பினெய்தியகாலையன்னோன்
வரவதைக்கண்டுகங்குல்மங்கைதன்மனதுநாணி
உரமிகுமதியென்றேதுமுளமகிழ்கணவன்பின்னர்
மரபினிற்றெழுதுசிந்தைமகிழ்வுறமறைந்துசென்றாள். 32

பானுவந்துதயஞ்செய்யப்பரமனுசனத்தினீங்கி
மோனநன்முனிவரோடுமோவியந்துளாய்மாலாதி
வானவர்மருங்கினேத்தவன்மைகொள்விடையின்மேவி
ஆனதோர்மறைவனத்தையன்பினிலகன்றுசென்றான். 33

விண்மிசைபவளநீடும்விலங்கல்சென்றிட்டதென்னக்
கண்ணுதல்விடையையூர்ந்துகடவுளர்மருங்குசெல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணிய நரலைதன்னைக்கடந்துதென்றிசையை நாடி
மண்மகள்மௌலிபோலுமிலங்கையின்வடபாலுற்ருன். 34

வேறு

சகந்தருசைவ நற்சமையமேதகச்
சுகந்தருமாகமஞ்சுருதிசெப்பிய
திகழ்ந்திடுநீறணிசிறந்தகண்டிகை
மகந்தலையிடப்பரன்மருவினனரோ. 35

அறத்தலையெடுக்கவைந்தெழுத்துமேதகப்
புறந்தருசமையங்கள்புன்மைசார்ந்திட
துறந்திடுந்தவநெறித்துறவர்தூய்மையிற்
சிறந்திடவிலங்கையிற்சிவனுற்ருனரோ. 36

தலமுறுமுயிரெலாந்தழைத்துவாழ்வுறப்
பலமுறுஞ்சரியை நற்கிரியைபன்னரும்
நலமுறுயோகமெஞ்ஞானமாதிய
வலனுறவழங்குவான்மருவினனரே. 37

உளமகிழ்ந்துயிரெலாமொருவனுந்தன
தளவிருந்தாழ்களினபயமென்றுமெய்ப்
புளகமோடரிச்சனை புரிந்துநல்லருள்
வளமுறுங்கதிபெறவரதனண்ணினுன். 38

வேறு

அண்டமெலாம்படைத்தவெமதிறைவியோடுமரன்கயிலைதனை நீங்கியமரரேத்த
மண்டலமேலிலங்கைதனில்வடபாலாகவந்ததனை மனத்துணர்ந்துவாரியென்
[பால்
அண்டிநிதமுழுகியெழுமடியர்பாவமகற்றுதியென்றுரைத்துமிகக்கரங்கணீட்டி
மண்டுபெருங்காதலினுலிரப்பபோலும்மன்னுபலதிரைவீசியொலித்தன்மா

கருணைமிகுங்கண்ணுதலோன்கவுரியோடுங்கடவுளர்கள்புறஞ்சூழக்கயிலைநீங்
[கிப்
பொருவிலுயிர்க்கருள்புரியச்சென்றவாற்ருற்புணரிமனமுருகியெதிர்சென்று
[போற்றத்
திருமருவுமவன்வரவையுலகினேர்கள்தேறலுறமுரசடித்துச்செப்பல்போலும்
பெருகுபலதிரையதனுற்கரையைமோதிப்பேரொலிசெய்திடுகின்றபெற்றிதானே

வேறு

புயறவளும்மேருவுறுசிகரமதீண்டுற்றபெரும்புகழால்வாய்ந்த
பெயரிலங்காபுரமதெனப்பேசுமிந்தத்தலமதனிற்பெட்பினீடுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயல்முதுகுதரும்விழிகொள்கவுரிநாயகனமரர்கணத்தரோடுஞ்
செயமமரவந்தானென்றுரைப்பனபோற்சோலையிளங்குயில்கள்கூவ. 41

கார்தடவுந்தண்டலையினறவுகனிந்திடுமலர்கள்கவினும்பான்மை
பார்கவினும்புன்மையுறுதாவரமாய்ப்பிறந்திடுமெம்பாவமாகுந்
தூர்களைந்துநிமலவுனதருட்பார்வைதருதியெனத்தொழுதுபோற்றி
நீர்ததும்பிவிழிசொரியவாய்திறந்துகேட்டெதிராய்நிற்றல்போலும். 42

கயில்விரவுமழுவேந்துங்கண்ணுதலோனிலங்கைதனிற்கவுரியோடும்
வெயில்விரவுந்திகிரியுளமுராரிமுதலோர்வேண்டவுற்றவாற்றால்
அயிலதனையேந்துகரத்தறுமுகனுமீண்டினிதினடைவானென்று
மயிலினங்களுணர்ந்ததுபோற்கலாபிதனைவிரித்துநடமாடுமாதோ. 43

காதலுடன்பரனடிகள்கருதுதொண்டர்பாசமதுகழலநான்கு
வேதமுடன்சிவாகமங்கள்முதலானநூற்பொருளைவேறுவேறாய்ப்
பேதநிலையகன்றுயர்ந்தபக்குவத்தைப்பெறுவதற்குப்பேசுங்காலை
மீதுயருந்தண்டலையிற்கேட்டிருந்தபூவைகிளிவிளம்புமாதோ. 44

கொன்றைமலர்வேணியற்காய்மேருமலைதனதுகொடுமுடியிலொன்றைச்
குன்றுருவாயிலங்கைதனிற்சென்றுநீயமர்தியெனக்குணமொடேவர்
சென்றமலன்வரவையெதிர்விழிநோக்கித்தவமிகவுஞ்செய்துபோற்றி
நின்றதுபோல்விலங்கலுயர்பரிதிமதிமண்டலத்தைநிமிர்ந்துமேவும். 45

மலைவளமுங்கரைமருவத்தரளமதையுருட்டுகடன்மறியாகின்ற
வலைவளமும்பூவைகிளியாகமங்கடனையொன்றோடறைந்துபாடுங்
கலைவளமுங்குயிலினத்தின்கனிவுதருங்கீதமிகக்கவினுங்கள்ளார்
தலைமருவுந்தண்டலையின்வளங்கணனிசிறந்துமிகத்தயங்குமாதோ. 46

வேறு

இந்தவண்ணமுறுகின்றபல்வளமிசைந்துநீடுறுமிடந்தனில்
அந்தமின்றியகணங்களோடுவருமமலன்முன்னரியைநோக்கியே
நந்தலின்றியமர்தென்னிலங்கைதனினல்லதானமிதுநாமுறக்
கொந்தலர்ந்துமலிசோலைநீடுகடல்குன்றுகோலமுறநின்றதே, 47

மன்றுதோறுநடமிட்டவெம்மிறைவகுத்தவாய்மைதனைமாமணம்
நின்றுகாதவழிகமழ்துளாய்முடிகொணீலமேனியுறுநேமியான்
துன்றுநூலின்வழிசிற்பவல்லமைகடுன்னுகம்மியனைநோக்கியே
குன்றமேயெனவொர்கோயிலிவ்விடைகுறிப்பினல்குதியெனச்சொன்னான்.

மாயனிந்தவுரைதந்தபோதுளமகிழ்ந்துகேட்டினிதுகம்மியன்
பாயதெண்டிரைகொள்பரவையின்கரையினுற்றகுன்றருகுபன்னருந்
தூயநன்மணிகொளாலயங்கள்மதில்துன்றுசூழிகைகள்சுடர்விடு
நேயமொன்றவுயர்கோபுரங்கடனைநேர்கொள்சிற்பவிதிநல்கினான். 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னதன்மைதனிலாலயந்தனையியற்றிடும்பொழுதினெம்மிறை
மன்னுநந்திதனைவிட்டிறங்கியுமைமங்கைதங்கமிகுமகிழ்வினுல்
அன்னகோயிலிடைசென்றுதந்தியையடர்த்தகேசரியினுசனந்
தன்னின்மீதுறவமர்ந்தனன்கருணைதங்குசீவசுகசம்புவே. 50

எங்குமாகியுறுமெந்தைமங்கையுடனேறுதாங்கவுறுபீடமேற்
செங்கையின்மழுவிலங்குமேனியொடுசென்றிருந்தருளுகாலையின்
சங்கராமிகவுமெங்கண்மீதுநனிதங்குநின்கருணைதருகென
அங்கண்மால்பிரமனுதியோர்களுளவன்பினுலடிவணங்கினர். 51

வேறு

மூவரிலொருவனென்னும்முக்கணனந்தவேளை
ஏவருமினிதுகேட்கவெடுத்திவையிசைப்பானிந்தப்
பூவுலகிடையிலங்காபுரந்தனின்வடபால்யானும்
மேவியதன்மைதன்னுல்மேன்மைசார்தலமதாகும், 52

இலங்கைமேவிதற்கொப்பாகவினையுறுந்தலமதில்லை
நலங்கிளர்காசியாந்தொன்னகர்களுமன்னதாகும்
குலங்கெழுமுயிர்களுள்ளங்குறித்தவையுடனேகூடும்
வலந்திகழ்கதியைநாட்டும்மறுசெனனங்கள்வாட்டும். 53

அணைதருமுயிர்க்குநன்மையருளிவாலறிவைநாட்டிப்
பிணைதருபாசம்போக்கிப்பீடுகொண்ணமதுதாளாம்
புணையினுற்பிறவியானபுணரியைக்கடக்கச்செய்யும்
இணையிலித்தலத்துக்கொப்பாயியம்பவுந்தலமதுண்டோ. 54

நேசமோடென்பாலன்புநேரிலாதமர்ந்திட்டாலும்
பேசுமித்தலத்தின்கண்ணேபிறக்கினும்பெருமையுற்ற
மாசிலாவுயிரையிந்தமண்மிசைவிடினுமன்னேர்
தேசுறுஞ்சிவலோகத்திற்றேவர்கடுதிக்கவாழ்வார். 55

மிடைதருமுயிரின்கன்மவினையதையகற்றிமண்ணுக்
கிடையெனும்நாடியானவிலங்கைமேலரிதாமுத்தி
யுடையதித்தலமதென்றேயுன்னுதிரென்றுமாதைப்
புடைதனிலுற்றவீசன்கருணையாற்புலவர்கேட்க. 56

கருவுறுமுயிர்க்காய்வெள்ளிக்கயிலைமால்வரையில்யானும்
உருவுகொண்டமர்தல்போலவுள்ளமீதெழுந்தவன்பரற்
பெருகுமித்தலத்தின்கண்ணேபெட்பினிலெந்தநாளும்
மருவியீண்டமர்வோமென்றுமரபினினுரைத்துமாதோ. 57

இன்னிலந்தனில்யான்சென்றேயினிமையிலமர்தலானும்
பொன்னிறக்குன்றமொன்றுபொருந்தியபொலிவினுலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னியவுயிர்களெல்லாந்தூய்மையிற்சென்றுமூழ்க
மன்மலிதீர்த்தமொன்றைவருவிப்போமரபினென்றான். 58

என்றிவையமலன்கூறவிமையவர்யாருங்கேட்டுத்
துன்றுபேரன்பினோடும்பரனடிதொழுதுபோற்றி
நன்றுனதருள்போலீண்டுநல்குதியென்றுமுன்னாய்
நின்றனர்தீர்த்தமுற்றநீர்மையையுரைக்கலுற்றாம். 59

தலவிசேடமுரைத்தபடலம் முற்றிற்று.
ஆ விருத்தம் 194

---

# தீர்த்தவிசேடமுரைத்த படலம்

அந்தணருயர்குலமடையமேன்மையை
வந்தவதரித்ததோர்சூதன்வாய்மைசேர்
முந்துறுமுனிவர்கள்முகத்தைநோக்கியே
புந்திகொளுவகையாற்புகல்கின்றனரோ. 1

திருப்பயிலுவரிபாற்றிகழ்விடந்தனைச்
சருப்பதமாகமுன்கொண்டுசார்சிவன்
உருப்பொலியாலயந்தணந்துள்ன்பினல்
பொருப்பினின்மருங்குறப்போயினனரோ. 2

தன்னிகரில்லதோர்தலைவன்பாதமேல்
மன்னநீடவம்புரிமகான்கள்சிந்தைமீ
துன்னியபொழுதிறையுவந்துசேறலின்
பொன்னியல்குன்றமுன்போயினனரோ, 3

பொன்மலையிகந்திவண்போந்தவென்றனக்
கன்னைபோற்பெருமநின்னருளை நல்குதி
என்னநீண்மலைதொழவிரங்கியேயதன்
முன்னராயுற்றெனமுறையிற்போயினன். 4

நஞ்சணிகளத்தினன்னகமுன்னேகுதல்
நெஞ்சுறுமுவகையினேருஞ்சீடர்பால்
விஞ்சியபவந்தனைவீட்டவெண்ணியே
எஞ்சலில்தேசிகனெழுந்துசென்றென. 5

இன்னதோர்தன்மையினிறைவனேகியே
அன்னதோர்வரைதனினருகிற்சென்றுறுப்
பன்னுபாதலத்தமர்கங்கைபாய்ந்தவண்
மன்னியவரைதனின்வருதற்கெண்ணினன். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுநாயகன் மனத்தெண்ணுகாலையிற்
றுன்றுபாதலந்தனிற்றுலங்குகங்கைநீர்
அன்றுநித்திலந்திகழருவியாய்ப்பெருங்
குன்றினீள்குகைவழிகுமிழிகொண்டுற. 7

பனிவரைமாதிடப்பங்கர்பாதமேல்
இனிமைகொள்பூசனை இயற்றமால்வரை
கனிவொடும்பாதலகங்கையென்றிடு
வனிதையைவிளித்துறவைத்தல்போலுமே. 8

உருவினுல்நீள்வரையும்பர்நாயகன்
வருவதாற்களித்துளமருவுமன்பதைப்
பெருகவேபுறந்தனிற்சொரிந்தபெற்றியின்
அருவிநீர்வேலையினதிர்ந்துபாய்ந்ததே. 9

இன்னதோர்தன்மையினிறைவன்வாய்மையின்
துன்னுபாதலத்தமர்தீர்த்தந்தூய்மையோ
டன்னகச்சாரல்வாயணுகியார்ப்பொடு
முன்னுறுமுவரிபால்முறையிற்சென்றதே. 10

திரையுறுமுவரிபாற்சிறந்தகங்கைநீர்
திரையொடும்போதலைநிமலன்காணுறு
விரைகுழலுமையொடும்விபுதரேத்திடப்
புரையிலாமறைமுறைபுராரிமூழ்கினுன். 11

மறைகணேர்விதியொடுமரபின்மூழ்கிய
இறைவனலயந்தனிலினிதமர்ந்துமுன்
முறையுறுந்தேவர்கள்முகத்தைநோக்குரு
நிறைதருங்கருணையாலிவைநிகழ்த்துவான். 12

கதிதொடும்பாதலகங்கைதன்னையான்
மதியுடனிரவிசூழ்மலையின்சாரல்வாய்
விதியுடனழைத்ததில்விரும்பிமூழ்கினேன்
முதிருமன்புடனினிமுறையின்மூழ்குவீர். 13

ஆதிநாள்நிமலைகையதனிற்றேன்றிய
கோதிலாமேன்மையைக்கொண்டமர்ந்துள
ஏதிலாநதிபடிந்தினிமையாற்பெரும்
பூதிமேலிட்டுமைப்பூசைசெய்குதிர். 14

இன்னவாறிறையவனியம்புகாலையின்
மன்னுமாலயன்முதலமரர்யாவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னுபொற்கழலிணைமீதுதாழ்ந்திடா
நன்னகமெழுந்தவன்னதியின் நண்ணினுர். 15

நாடுநான்மறைமிகநவிலும்வாய்மையின்
நீடுசங்கற்பமென் நியமங்கூறியே
கூடுமாலயன்முதற்குலவுதேவர்கள்
பீடுசேர் நதிதனிற்பெரிதின்மூழ்கினுர். 16

புதிதெழுங்கங்கைவாய்மூழ்குபுங்கவர்
விதிநியமங்களைவிளங்கச்செய்தபின்
நதியுறுநீரினுல்நாதற்காட்டியே
துதிதருமறைமுறைதொழுதுபூசிப்பார். 17

பால்முதலாய்ச்சொலும்பஞ்சகௌவியஞ்
சால்புறுநாவிநெய்சாந்தம்மான்மதம்
மேலுளபொருளெலாம்மெய்கொளாகம
நூல்புகல்விதிப்படிநுனித்துநல்கினுர். 18

ஆகமவிதியினுலமலன்றன்னுடன்
பாகமீதுற்றிடுபரைக்கும்பண்பினுல்
நாகர்பாதலந்திகழ்நதியின்நீரினுல்
ஏகநாயகனெழுத்தைந்துமெண்ணியே. 19

அற்றமில்திருவபிடேகஞ்செய்தபின்
பொற்றுகில்சந்தனம்பொலிந்தபூண்முதல்
மற்றையமணிதிகழ்மௌலியோடருஞ்
சுற்றலரிதழியந்தொங்கல்சூட்டினுர். 20

முன்புறுநிவேதனமுழங்குகைமணி
மன்புறுந்தூபநல்வாய்மைமல்கிய
வின்புறுங்கருப்புரதீபமீய்ந்திடா
வன்பிலர்ச்சனைபுரிந்தாசிகூறினுர். 21

முருகுகாலிதழிகொள்மூர்த்திமீதினு
முருவவோடரிவிழியுமைதன்மீதினும்
பெருகவேசிந்தையின்பெட்பினுலுயர்
மருவுபூசனைவிதிவழாமலாற்றினுர். 22

வேறு

ஏதமற்றிடுவிண்ணவரேத்தலும்
நாதனவ்வழிநல்லருள்செய்திடா
வாதரத்தினவர்முகநோக்கிநற்
காதலோடுகனிந்துகழறுவான். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல்குன்றமிலங்கைக்கொருகணா
யுன்னநீர்கொளுததிமருங்கினில்
முன்னுதற்கரிதாகிமுன்னுளிவண்
மன்னுகிற்றதுமாநிலமேத்திட. 24

பொங்குபூவினில்வாசம்பொருந்தியே
தங்குதன்மையதென்னத்தணந்திடா
நங்கையாளுடனுமிவண்மேவலாற்
துங்கமேன்மையதுற்றதுதொல்வரை. 25

என்னையென்றுமினிமையிற்றுங்குற
மன்னுமிந்தமலையைவலஞ்செயிற்
கன்மமிக்கபிறவிக்கடலெனும்
இன்னல்நீங்கியிகபரமெய்துவார். 26

செம்மையோடுமிச்சேணுறுகுன்றதை
நம்மையென்றுளநம்பித்தொழுதுளார்
இம்மைதன்னிலிருஞ்சிறப்பெய்தியே
அம்மைமுத்தியடைகுவர்திண்ணமே. 27

தீதகற்றுந்திருவரைதன்னிடந்
தாதுலாமலற்றண்டலைவைப்பவர்
காதலோடுயிர்காயமகன்றநாள்
ஏதிலாவென்னிருபதமெய்துவார். 28

தருமமோங்கச்சயிலமதன்கணே
பெருகவாலயந்தன்னைநற்பெட்பினால்
உருகுமன்பினுஞற்றுவிப்போர்நம
திருபதங்களினிமையினெய்துவார். 29

பன்னுமிந்தத்தலத்திற்பரிவினால்
அன்னசத்திரமார்ந்தமடங்களை
மன்னுநன்னிலைமல்கவியற்றுவோர்
உன்னருங்கயிலாசத்துறுவரே. 30

பேர்கொளிந்தப்பெருந்தலமுற்றெமை
நேர்மையாய்மனநேசிக்குமன்பருக்
கார்வமோடுமசனமருத்துவோர்
சீர்தருஞ்சிவலோகந்திகழ்வரே. 31

யாவர்தாமுமியம்பருமிவ்வரைத்
தேவுமான்மியந்தன்னைத்தெளிதிரை
மேவுமாநதியின்றிருமேன்மையை
நாவினால்முன்னவிலுதற்காகுமோ. 32

114843
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலையோடுறயானுமமர்ந்தெனக்
கமலையோடுறக்கண்ணனமர்ந்தென
விமலவாநதிதானுமிவ்விண்டதும்
நிமலமோடுநிறைந்திவண்மேவின. 33

பல்லுயிர்க்குமுன்பாவமகன்றிட
நல்லருட்கொருநாயகிநாரிபோல்
மல்லலுற்றமலையின்மருங்குறக்
கல்லெனுற்புறுகங்கைதிகழ்தரும். 34

பாரின்மேலுறும்பல்லுயிருய்ந்திட
வார்கொளிந்தவரையின் வழியுருச்
சார்பினுற்றசமுத்திரகங்கையாம்
பேர்தயங்கப்பெயர்ந்துபெருகுமே. 35

மண்ணுளோர்க்குமதுரவமுதமும்
எண்ணுபோதமுமென்னவெழிலுடன்
நண்ணுமிந்தநதிதனில்மூழ்கினுல்
கண்ணகன்றபவந்தனைக்காய்தரும். 36

ஐந்துசத்திதனிலருட்சத்தியாய்
நந்தலின்றியமர்ந்திடுநாரிபோல்
வந்துதித்தவிம்மானதிமான்மிய
மெந்தன்வாயினியம்பரிதாகுமே. 37

வேறு

உரகவேந்தெனக்குத்தன்பாலுற்றிடுமமுதந்தன்னைப்
பரவுபாதலத்தினின்றும்பார்தனிற்பாய்ந்துசெல்ல
விரவுமன்பதனுலீண்டுவிடுத்ததுபோலக்குன்றின்
மரபினுற்புறப்பட்டேகிமறிகடன்மடுக்குமன்றே. 38

உலகினிலுயிர்க்குநாளுமுள்ளதீவினையென்றேது
மலமதைநிசியைக்காயுமிரவிபோல்மாய்க்கநீடுங்
குலவுமால்சிகரந்தாங்குகுன்றிடைநெறியிற்றேன்றி
நலனிறைதரளந்தன்னைக்கொழித்துமுன்னரலைசாரும். 39

பகிரதனெனுமன்னர்க்குப்பதுமனூர்நதியைமுன்னுள்
மிகவுமன்புடனேயிந்தமேதினிமிசையிட்டென்னத்
தகவினீள்பாதலத்தின்நதிதனைத்தலத்திேனுர்க்கு
நகமுறுநெறியிற்செல்லநல்கினேமிலங்கைநாட்டின். 40

சிந்தையினெழுந்தவன்பாற்சிறந்திடுநதியின்கண்ணே
முந்துறவுமையும்யானும்மூழ்கலால்முதிருந்தூய்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததுமிகவுமந்தத்தன்மையாற்றலத்துளோர்க்கு
மந்தமில்பவங்கள்மாற்றியருங்கதிவழங்குமன்றே. 41

அம்பிகைகரத்தின் முன்னுளெழுந்துநீடலைகள்வீசுங்
கம்பைநன்னதிபோலிந்தக்கங்கையும்புனிதஞ்சார்ந்து
பம்பியகடல்சூழ்கின்றபார்மிசைநிலையாய்விண்டின்
இம்பருந்தொழநாடோறுமினிதுறப்பெருகுமன்றே. 42

வேறு

தாழ்விலாவின்னதிதனில்வந்தேநெறி
மூழ்கியவுயிர்கள்பால்முடுகுந்தீவினை
ஏழ்பரியோன்முனமெதிருங்கங்குலின்
மாழ்குறுமதனியல்வகுக்கலாகுமோ. 43

நாடரிதாகுமின்நகத்தின்சாரல்வாய்ப்
பீடுறப்பெருகியபிறங்குகங்கைவாய்ந்
தேடரும்விதிகொடுதெளிவின்மூழ்கினர்
கூடுநன்னிலைமையைக்குறிக்கலாகுமோ. 44

மீனுறுந்தரங்கநீர்வேலைவாய்மிகும்
பானிறநித்திலம்பலகொழித்துநேர்
தானுதவுற்றதோர்தாவில்கங்கையா
மானதிமகிமையைவகுக்கற்பாலதோ. 45

மற்றுளதீர்த்தமேல்மரபினொடொறு
முற்றுமூழ்குனர்க்குறுபயனையோர்தரம்
பற்றினேடின்னதிபடிந்துளார்நனி
பெற்றிடுவார்தவஞ்செய்தபேற்றினல். 46

வேறு

விள்ளுதற்கரிதானவிருப்புடன்
கள்ளருந்துமவர்களுக்காகிய
தள்ளுதற்கரிதானபவந்தனைப்
பொள்ளெனப்புறநீக்குமிப்பூம்புனல் 47

அளவிலாதவிருப்புடனல்லிடை
களவெடுத்துளசோரர்கடம்பவந்
தளர்விலாதவிம்மானதிதன்னிடை
உளமகிழ்ச்சியின்மூழ்கவகலுமே. 48

வையகந்தனில்வாய்மையிகந்துநீள்
பொய்மைகூறுமவர்க்குறுபுன்பவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்கொளின்னதிமூழ்கியமேன்மையின்
ஐயமின்றியகன்றிடுந்திண்ணமே. 49

அந்தகன்செயலீதெனவன்பிலாச்
சிந்தையாலுறுசீவவதைசெய்வோர்
நிந்தையின்றியநீணதிமூழ்கினூற்
பந்தமோடவர்பாவமகற்றுமே 50

தன்னையீன்றிடுதந்தையைந்தாய்தனை
இன்னல்செய்துவருத்துமிகழ்ச்சிநீள்
புன்மையாளரிப்பூம்புனல்மூழ்கிட
மன்னுபாவமமன்றிடும்வாய்மையே. 51

ஆதரத்துடனுலயத்தின்கணே
மாதர்தங்களைமல்கிப்புணர்ந்திடு
பாதகந்திகடங்குபரவைபால்
ஏதின்மூழ்கவெளிதினகற்றுமே. 52

கொம்மைவெம்முலைக்கோதையராகிய
கைமையோரைக்கனிந்துபுணர்தருஞ்
செம்மையற்றிடுபாவஞ்செழும்புனல்
அம்மமூழ்கவெளிதினகன்றுபோம். 53

இழிகுலத்துறுமேந்திளையார்தமை
விழியிலாதவர்போலவிரும்பினீள்
அழிவினூற்புணர்கின்றவரும்பவங்
கழிகொளின்னதிமூழ்கக்கழலுமே. 54

கங்குல்வாயிற்கதிர்விளக்கின்றியே
நுங்குவோர்க்குறுவலுறுபாதகஞ்
சங்கினந்திகழ்சாகரத்தோடுறுந்
துங்கவின்னதிமூழ்கினிற்றூய்மையாம். 55

வந்தடைந்தவர்தம்மைவருத்திமுன்
நிந்தைசெய்தவர்க்குற்றிடுநீழ்பவம்
நந்தலின்றியநன்னதிதோய்ந்திட
வந்தமாகியகன்றிடுமுண்மையே, 56

புல்லிதானபுலாலைப்புசித்துநேர்
வல்லியந்தனைப்போல்பவர்மாடுறு
மெல்லையில்பவமின்னதியேகியே
தொல்லையின்வி திமூழ்கத்தொலைவுறும். 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலங்கொளாகமவேதம்பகர்ந்தபின்
நலந்தரும்நெறிநாடிநடந்திடாப்
புலங்கொளாணவப்புன்மையரின்பவ
மிலங்குமின்னதிமூழ்கவிகந்துபோம், 58

வேறு

கள்ளார்கடுக்கைகமழுந்திருமுடியான்
புள்ளேறயன்மால்புரையின்முகநோக்கித்
தள்ளாநதியின்றகுமேன்மைதன்னையெடுத்
துள்ளார்கருணையதனுலிவையுரைப்பான். 59

பஞ்சபுலன்களொடுங்கப்பரிவுதரும்
நெஞ்சத்துடனுவந்துநேரின்னதிமூழ்க
வஞ்சப்பிறவிகெடுக்கும்மருவுசமன்
அஞ்சக்கதியைமிகுமன்பினழித்திடுமால். 60

வார்ந்தநதியின்மரபாகப்போய்முழுகி
ஆர்ந்துலவுமன்பாலழகுற்றதென்புலத்தில்
நேர்ந்தபிதிர்களுக்குநேடுஞ்சிராத்தமதைக்
கூர்ந்ததிலமருவக்கூர்ச்சமதிற்பிண்டமிடா. 61

காதலினுற்பூசைகனிவாய்மிகநடத்தி
வேதநிலைதழுவுவேதியர்க்குத்தானமதை
ஆதரவாய்நல்கியருந்தர்ப்பணமருள
வோதுமுயிர்கள்சிவலோகமுற்றிடுமே. 62

தன்னுருடலமருமாவிதனையகன்றூர்க்
கின்னேவிதியினியலந்தியேட்டிதனை
முன்னூல்விதிநதிவாய்மூழ்கிமுறைபுரிய
மன்னுருயிர்கள்பிறவிதனைமாற்றுவரே. 63

பொங்குமுவாக்கள்பொலிந்ததினந்திங்களூறு
சங்கிரமகாலந்தனிலுஞ்சதுர்மறையால்
அங்கநியாசமுடனுசமனந்தானருளித்
துங்கவிதியோடுந்தூனதியின்வாய்மூழ்கி. 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதியணிந்துபுரையிலாவைந்தெழுத்தை
ஓதிமிகும்புனிதமோங்கப்பிதிர்களுக்கு
நீதியுதவுபிண்டம்நீடுந்தருப்பணங்கள்
ஆதியனபுரியவாருயிர்கள்முத்தியுறும். 65

ஆகுமவமிருத்துமாய்ந்தகதிரோனுதி
ஏகுங்கிரகமிருத்தினுடனெண்ணரிய
தேகமுறுமிருத்துந்தீர்ந்துதெளிவினறும்
போகமதையுதவும்பொற்புமிகுமாநதியே. 66

கன்மவினைநெறியாற்காயந்தனைநலியுங்
குன்மங்கசமீளைகுட்டமுதலாயுரைக்கும்
புன்மைமிகும்நோய்புனிதமுடன்கழற்று
நன்மருந்துபோலநளிருமிந்தமாநதியே. 67

கையிலுறுநெல்லிக்கனிபோலக்காசினியர்
மெய்யினிறையும்வியாதிதனைமென்றகற்று
துய்யமருந்தெனவுந்தூண்டுபரித்தேரினுறு
செய்யகதிர்முன்பனியெனவுஞ்சிந்திடுமே. 68

பாந்தணிலாவைப்பரிதிதனைமேன்மறைத்து
நேர்ந்தகிரகணத்தினேரந்தனிலதிவாய்
மீந்தவிருப்பின்விளம்புவிதியான்மூழ்கப்
போந்தவினைகளகன்றுபுறம்போயிடுமே. 69

ஆன்றவருத்தவுதயமுடனுய்வுதரத்
தோன்றுமகவுதயந்தன்னிற்றெருகுதியுற
வூன்றுமறவிதியினுன்னுசங்கற்பமிடா
மூன்றுமலங்கழலமூழ்கிப்புனிதமுடன். 70

நீடுங்கதிமருவநெற்றிமிசைநீறணிந்தே
யீடினியமத்துடன்கிரியைதானியற்றித்
தேடுந்தருப்பணங்களாதிதெளிந்துசெய
நாடுமுயிர்கள்சிவலோகம்நண்ணுறுமே. 71

ஆய்ந்தவிரதமதனையனுட்டிப்போர்கள்
காந்திகொடுக்குந்தரளங்கரைசார்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தநதியின் மறைறநேர்விதிமுறையாற்
றேய்ந்துநமதுசரணந்தொழல்முறையே. 72

ஆதலாலிந்தவருநதியின் மான்மியத்தைக்
காதலால்முற்றுங்கழறமுடியாதெனநீழ்
தாதுலாங்கொன்றைமலற்றுமமணிந்தபரன்
போதன்முதலோர்கள்போற்றநனிபுகன்றான். 73

கண்ணன்முதலாய்க்கழறுகின்றவிண்ணவர்கள்
அண்ணலுரையையருளினெடுகேட்டவரென்
றெண்ணரியசூதமுனிவன்றனக்கெதிராய்
நண்ணுதவமுனிவர்கேட்கநயந்துரைத்தான். 74

மன்னும்புனல்சேர்மகிமையிதுவாகுமெனப்
பன்னுகின்றசூதமுனிவன்பரிவினுடன்
முன்னுங்கருணைதருமூர்த்திவிசேடமதை
இன்னந்தவத்தின்முனிவர்க்கினிதிசைப்பான். 75

தீர்த்தவிசேடமுரைத்தபடலம் முற்றிற்று.
ஆ. விருத்தம் 270

---

# மூர்த்திவிசேடமுரைத்தபடலம்

பரிதிபோல்மிளிர்நேமியம்பெரும்படைபரித்தோன்
பொருவிலாமலராசனன்புராரியைப்போற்றி
யுருவினோடிவணுறைந்துநீயுயிர்களுக்கிரங்கி
அருளுநீர்மையாமுணர்தரவறைகுதியென்றார். 1

இந்தவாசகங்கேட்டெமதிறைவனுமிசைந்தே
அந்தமற்றிடுமுவகையாலவர்முகம்நோக்கிக்
குந்தநேர்விழியுமையுடன்கூடியான்குலவி
வந்தபான்மையாற்சைவநன்னெறிமிகமல்கும். 2

பாதநான்குறுசரியைகளாதியாய்ப்பகர்ந்த
வேதவாகமநிலைகளும்விளங்குவேள்விகளு
மோதுமைந்தெழுத்தாதியுமோங்குறவுலகிற்
றீதகற்றியசைவநன்னெறிமிகத்திகழும். 3

3893 C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுமிச்செயல்மல்கிடக்குவலயத்துள்ளோர்
தேறுமன்புடனிவ்விடஞ்சென்றுளந்தெளிவா
யூறுகங்கையின்மூழ்கிநல்லன்பினாலுகந்து
மாறிலாதிவணுறையுமென்முன்னராய்மருவி 4

அம்மையோடெனையன்புநீடகந்தனில்வணங்கிச்
செம்மலர்க்கொடேசேவடியருச்சனைபுரிந்து
மும்மலந்தனையகன்றுநற்றவந்தனைமுயன்றே
இம்மையோடுயர்கதிதனையெளிதினிலுறுவார். 5

மட்டுலாமலர்மணமுறுந்தெரியலைவயங்கக்
கட்டிநந்திருமுடிதனிற்கவினுறவணிவோர்
இட்டமோடவருடலுறுமாவியதிகந்தாற்
சிட்டரேத்தியசெய்யநம்பதமடைந்திருப்பார். 6

சாருநன்மணமிக்குறுசந்தனக்குழம்பால்
ஈரமுற்றிடுந்திருவபிடேகமதியற்றிக்
கூருமன்பினாற்பூசனைபுரிந்துளோர்குலவி
ஆருநம்பதமடைந்தினியிருப்பர்களன்றே. 7

கண்ணகன்றதோராலயமதனிடைக்கவின்றே
எண்ணுமன்புடனெம்மையும்பூசனைபுரிந்து
வெண்ணிறந்திகழ்கருப்புரதீபத்தைவெறாமல்
நண்ணவெம்முனாயிடுபவர்நமதுலகடைவார். 8

நிகரிலாதுறுமைம்புலனொடுங்குறநியமம்
பகருநூன்முறைநம்மையும்பூசனைபண்ணி
அகருவேமுதலறைதருதீம்புகையமைப்போர்
புகலுநேரிலாநமதுலகதனிடைப்புகுவார். 9

அற்றமில்லதோரன்புடனெம்மடியடைந்து
பற்றினாற்சொலுநூன்முறைபூசனைபண்ணிக்
குற்றமற்றகூவிளையினாலருச்சனைகுணமா
யுற்றுளோர்நமதுலகினிலுவப்புடனுறுவார் 10

நமதுசந்நிதிதன்னைமுன்னாடியேநடந்து
தமதுசிந்தையினன்பினாலருச்சனைதயங்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலநன்மலர்கொண்டு நங்கழலருச்சிப்போர்
விமலமாநமதுலகினில்விருப்புடனடைவார். 11

ஆவினுல்வரும்பால்கொடு நம்முடிய தன்மேல்
ஓவிலாவபிடேகமோடருச்சனையொருங்கிற்
றுவிலாவிதிதன்னுடன்புரிந்துளோர்தகைமை
மேவுநஞ்சிவலோகமாம்வீட்டினையடைவார். 12

நறுமணங்கமழிழுதினுல்நயந்ததீபத்தை
நிறுவிநந்திருமுன்னரே நிலையுறவைப்போர்
மறுவகன்றிடுநம்பதமருவியேமகிழ்வால்
இறுதியில்லதோரின்பவாழ்வுற்றினிதிருப்பார். 13

பகர்ந்தபன்னிருதிங்கள்பாற்பூருவபக்கந்
திகழ்ந்துறுந்திரயோதசிநன்றுறுதினத்தின்
உகந்துறும்பிரதோஷமாமுயர்விரதத்தோர்
அகந்தனிற்றகுமைந்துமந்திரங்களுமமைய 14

முன்னராயுறுதுவாதசித்திதிதனில்முறையே
பன்னுமித்தலஞ்சென்றபராணமெய்ப்பகலின்
இன்னதோர்பெருநதிதனிற்சங்கற்பமியம்பி
மன்னுவெண்டுகிலிரண்டுடன்மரபுறமூழ்கி 15

உரிமையோடுதோய்ந்துலர்வுறுதுகிலுடையுவகை
புரிதருந்நியமத்துடன் நீற்றினைப்புனைந்தே
பரிவினெம்மையும்பூசனைபுரிந்துமுன்பணிந்து
வரிசையாயொருபோதுணவருந்திநேர்வைகி. 16

அறையுமற்றநாட்செங்கதிர்குடதிசையணுக
முறையின்மாநதிமூழ்கிமுற்றுறுகடனியற்றி
நிறைவினேடுமைந்தெழுத்தையும்நினைந்துநேரெய்தி
மறைகொள்வாய்மையிற்பூசனைமரபினிற்செய்து 17

அங்கைதங்குநீர்மும்முறையருந்தியேயடியார்
தங்களோடுயர்தரும்புராணங்களைச்சாற்றிக்
கங்குல்வாயுறுகண்டுயிலகன்றுகன்னியரைப்
பங்கமற்றிடுநமனெனப்பண்பினுலெண்ணி. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்தசெங்கதிர்கீழ்த்திசைவிரவமுன்விழித்துத்
தெரிந்தவுண்மையினுயர்ந்தநன்றேசிகள்போற்றிச்
சொரிந்தநீரினிற்றேய்ந்துசொல்லியகடனியற்றிப்
பரிந்தபான்மையிற்பாரணம்விதிமுறைபண்ணி. 19

புகலலுற்றிடும்புனிதரோடுறவதுபொருந்திப்
பகல்கழிந்தபின் பகர்ந்தநன்நியமமுன் பயின்றே
இகல்கடந்திடுநிலையுறவியல்விரதத்தோர்
தகவுசேர்நலனிறைந்திடுசிவபதஞ்சார்வார். 20

## வேறு

கீற்றுமதியோடரவினினங்கிளர்ந்தேநண்புகலந்துமிகச்
சீற்றஞ்செயயாலுறைமெளலிச்சிவன்மாலயனிலருள்சுரந்து
கூற்றனுலகினுயிர்கள்செலுநெறியைத்தடுத்துக்குலவுகதி
யேற்றவிரதநெறியதனையெடுத்தேபின்னுமியம்பிடுவான் 21

கும்பமதியினபரபக்கங்குலவுந்திரயோதசிநாளின்
உம்பர்மகிழுங்கங்கைநதிமூழ்கியுள்ளங்களிகூர்ந்து
தும்பிமுகனைவணங்கியடிதொழுதுவல்மாய்வந்ததற்பின்
நம்பியெமதுதிருமுன்னாய் நணுகிப்பூசைதனை நடத்தி. 22

அன்பின்மறுநாட்பாரணமுமரிதினியற்றியவனிதனிற்
றுன்பில்சிவராத்திரிவிரதந்தூய்மையுறவேயியற்றுபவர்
வன்பார்புரக்கவெழுபிறவிமன்னனாய்வந்தவதரித்துப்
பின்பார்நமதுதிருவடியிற்பிறவியகன்றுகதிபுகுவார். 23

ஈதலால்மற்றொருவிரதமின்னுமுரைப்போமெமதிரண்டு
பாதந்துணையாயுற்றுரிமைபகருந்தெறுக்கால்மதியதனில்
ஓதுஞ்சோமவாரவுயர்விரதமதனையொருங்குமனக்
காதலுறவேயியற்றுபவர்கதிரோன்வாரந்தனிற்புகுந்து 24

சங்குமுழங்குமுததியின்வாய் தகவேசென்றுசதுர்மறையா
றங்கமுணர்ந்துநமைப்பூசைபுரியந்தணர்பாலகமகிழ்ந்தே
துங்கமிகுந்தசங்கற்பந்தொழுதுகேட்டைந்தெழுத்தோதி
அங்கநியமங்கரநியமந்தன்னோடரியகடன்மூழ்கி 25

வரந்தேறியநற்சந்திதனைவழுவாதியற்றிவாய்மையுடன்
உரந்தேறியவைங்கரமருவுமும்பல்முகனையடிபணிந்து
சுரந்தேறியமாமறைவிதியினமைப்பூசித்துச்சுகமிளிரா
தரந்தேறி நல்லொருபோதினுண்டியாகத்தானருந்தி, 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமகலமறு நாள்சென்றடுக்குஞ்சோமவாரமதிற்
றுய்யவகில்குங்குலியநிறைதூபந்திகழாலயத்தினிடா
நெய்யாற்றீபமெரித்தெமையுநேராய்ப்பூசைதனை நடத்தி
கையினுறுங்கூவிளைகமலமலரிற்கவினர்ச்சனைகள்செயா. 27

இசையுங்கங்குல்வாயதனிலிதநேர்புனிதமுறுமிடத்தின்
குசையிற்படுத்தபாயலிடைகூடும்பரிவினமர்த்துகுண
திசையிற்பரிதியுறவெழுந்துதிகழுங்கடனைமரபியற்றி
அசைவின்மனதினெமையேத்தியன்புற்றிடுபாரணம்புரிவோர்.

தக்கவெமதொண்சாரூபந்தன்னையடைந்துசிவலோகம்
புக்குநெறியேகடவுளர்கள்புகழுந்தனிவாழ்வதையுறுவர்
அக்குமணிகள்பூதியணியடியார்சிந்தைனில்மகிழ்ச்சி
மிக்கவிரதமான்மியத்தின்மேன்மைதனக்குமளவுண்டோ. 29

வேறு.

ஏதமற்றிடுமெம்மிறைசிந்தைமேல்
ஆதரத்தினிலார்ந்திடுமார்கழி
மாதமெய்துமரபுயராதிரைத்
தீதிலாவிரதத்திறஞ்செப்புவாம். 30

ஊன்றுமன்பினுவந்திவணெய்திடே
மான்றலைக்கணின்மாநதிதான்படிந்
தான்றவுண்டியோர்வேளையருந்துறுத்
தோன்றுமாதிரைதொல்லுபவாசியாய். 31

அன்றிராவினெமக்கபிடேகமும்
நன்றுசெய்துநலந்திகழ்பூசையைத்
துன்றுவித்துத்தொழுதுதரிசித்தே
என்றுகீழ்த்திசையேகிடநோக்கியே, 32

முறையினுனதிமூழ்கிநற்பாரணம்
நிறைவினுற்புரிந்தேநிலையுற்றுள
மறைகளுலும்வழுத்தியவென்னிரு
நறைகொள்பாதநளினமதெய்துவார்; 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியருள்ளமதனையகன்றிடாக்
குடிகொளாலயமாகக்குலவிய
முடிவிலாதமுதல்வன்முகுந்தனை
நெடிதினாலுளநேயமுறச்சொல்வான். 34

நன்றியுற்றிடுநன்மிதுனந்தனிற்
றுன்றுமுத்திரத்தூயவிரதத்தோர்
சென்றுமும்மலஞ்சேரவகன்றிட
நின்றுநம்மைநினைவதினேத்தியே, 35

மலையைநேர்வலமாகமருவிமுன்
அலையெறிந்தவருநதிமூழ்கிவெண்
கலையணிந்துகருமமுடிந்தபின்
நிலையினுண்டியைநீடவருந்தியே. 36

நிசியகன்றிடநிந்தனைநீக்கியே
பசியமர்ந்துபகலைக்கழித்துநேர்
கசிவுடன்வருகங்குலின்வெம்பவ
நசியவன்புறநம்மையும்பூசியா. 37

தேறுநாட்டத்தினம்மைத்தெரிசியா
வீறுகொண்டவருணன்வெளியுறக்
ச[illegible]றருஞ்செயன்முற்றிக்குணத்தொடு
பேறுபாரணம்பெட்பினியற்றியே. 38

துதிகொளிவ்விரதந்தனைத்தூய்மையாம்
விதியினாலனுட்டித்துவிளங்குவோர்
நிதியினோடும்நிலமிசைவாழ்ந்துபின்
கதியில்யாவருங்கைதொழமேவுவார் 39

மாகராயுளர்மண்ணினர்மல்கிய
யோகநன்னிலையோங்கியஞானியர்
ஆகினோருமிவணடைந்தாற்பரி
பாகமெய்திடும்பக்குவராவரே. 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு.

புயங்கந்தனைப்பூணெனவணிந்தபுனிதநிமலன்பூந்திகிரி
தயங்குங்கரத்தோன்முதலமரர்தம்மைநோக்கித்தயவினுடன்
வயங்குந்தரளமணிவடங்கள்மருவுங்கொங்கையுமையவடன்
நயங்கொள்கடகமதிப்பூரவிரதநிலையைநவின்றிடுவான் 41

சேலார்விழிகொளுமையவடன்சிலம்புதிகழுஞ்சேவடியின்
மேலாயன்புநிலைவிளங்கமேவுங்கடகத்திங்கடனில்
ஏலாநின்றபூரமுறுந்தினத்தினெழிலோடிவணெய்தி
நூலார்விதியினதிபடிந்துநுவலுஞ்சந்திதனைமுடித்து. 42

மகநாளதனிலொருபோதினுணவையருந்திவதிந்துநிலை
முகமாய்மற்றநாளதனின்நிமலைதிருமுன்முறையணுகி
யகமேலெழுந்தவிருப்பினுடனபிடேகங்களருச்சனையும்
மிகவாநிரைபினுறும்புதியவிழாவுமியற்றிமேன்மையுற. 43

கங்குலகலக்குணதிசையிற்கதிரோனுதிக்கக்கனிவினுடன்
மங்குல்படியும்மலைச்சாரல்வயங்குநதியின்மகிழ்ந்தாடித்
திங்கணிகரும்வதனவுமைதிகழ்கோவிலைமுன்வலமருவித்
துங்கமிகுந்தபூசனையைத்தூய்மையுறவேபுரிந்துதொழா. 44

அறுகான்முரலநறவொழுகுமிதழிபுனையுமரனடியை
மறவாதமருமடியருடன்மனதுமகிழ்ந்துபாரணத்தை
யுறநேர்புரியும்விரதமதையுயர்பானேற்குமவர்பிறவி
அறவேநமதுதூய்மையுளசிவலோகத்தினமர்ந்திடுவார் 45

இந்தவிரதமன்றிநமதிறைவிபரைக்காயின்னமுமோர்
நந்தலகலும்விரதமதைநவில்வோமுலகினயந்துறைவோர்
முந்தும்புகர்நாள்விரதமதைமுறையினேற்கக்கருதுமவர்
அந்தநிமலைசரணமதையகமேல்விருப்பினுடன்கருதி. 46

தன்னேரிணைசொல்லுதற்கருமித்தலமீதடைந்துதகைமையுள
பொன்னேர்வாரத்தாபரணம்பொருந்தவுததிபோய்முழுகி
மின்னேரிடையின்விமலையடிவிரும்பிச்சிரமீதுறவணங்கி
நன்னேயமதாயொருநேரத்துண்டியதனைநயந்தருந்தி. 47

மறுநாள்வெள்ளிவாரமதின்மகிழ்ந்துகாலையெழுந்துநதி
யுறநேர்முழுகிக்கடனியற்றியுள்ளங்கனியவுமையடியைப்
புறநேர்விடயந்தனையிகழ்ந்துபோற்றியெழுந்துபுரையின்மன
நிறைவாலுயருந்தொண்டருடன்நீடும்பகற்போதினைநீக்கி. 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவிகுடபாலுறவிசைந்தகங்குற்போதினிருங்கடலின்
விரவிப்பகர்ந்தவிதியினுடன்மூழ்கியெழுந்துவிபூதியணிந்
தரவின்படநேரல்குலுமையடியிலருச்சித்தன்பினுடன்
பரவிவிழியின்றுயிலதனையகன்றுகுசையின்பாயலின்மேல். 49

புனிதமுடனேவைகிநெறிபுலரிக்காலையுறவெழுந்து
கனிவினுடனீள்கங்கைதனில்முழுகிக்கவுரியடியேத்தி
இனிமைதிகழும்பாரணத்தையியல்பிற்புரிந்துகுடதிசையின்
நனிகொள்கதிரோனுறுமளவுந்துயிலைநீங்கிநன்கமர்ந்து. 50

வெய்யோன்மறைந்தபின்றனக்குவேண்டுங்கடனையன்பினுறச்
செய்தேதுயிறல்முறையாகுஞ்செப்பமுடனிவ்விரதமதை
மையார்விழியின்மங்கையருமைந்தர்தாமும்நோற்றிடுகின்
நையாதுயிர்போங்காலைதனின்நமதுசரணந்தனிற்புகுவார். 51

மண்டுங்ககனமிசைமருவிவளருங்கிரிமேலினமருவுங்
கொண்டல்முழங்கிநனிவிரவுகோலமினலைநிரையுதவக்
கண்டலலரமணமெழும்பிக்காதங்கமழுங்கடலருகின்
அண்டர்புகழுந்தலமிசையானருளுந்திறத்தையறைவரிதே. 52

தளருஞ்சூல்கார்குரங்கினங்கடயவினருந்தவிளங்கமுகின்
வளரும்பாளைதனிற்றூங்குமதுவையாண்மந்திகளிக்கும்
பழனஞ்சூழ்ந்ததில்லைவனந்தனில்யான்பரிவினமர்வதென
விளரிபயில்வண்டுறுசோலைவிண்ணுடிந்தத்தலத்துறைவோம். 53

ஆவிவருத்தும்பிறவியெனுமலைநாடுவரிதனையகலத்
தாவினமதுசந்நிதியினடைந்தோர்முத்திதனைமருவப்
பூவின்மணநீடுறைவதெனப்புகலுங்கருணைதனைப்புரிந்து
மேவியுலகுள்ளளவுமிவண்மேன்மைதிகழவிளங்குதுமால். 54

என்னுமூர்த்திவிசேடமதையெடுத்தேயிறைவனியம்பநனி
முன்னுயுற்றமுராரிமுதல்விபுதகணத்தோர்முகமலர்ந்தே
பொன்னேர்சரணந்தனில்வீழ்ந்துபுரிவினெழுந்துநனிபரவி
நன்னயகவுன்னருணிலைமைதனையாம்நவிறலரிதென்றார். 55

பாலாருவரியிடைதயங்கும்பாம்பினமளிமிசைதுயின்ற
மாலோடயனுமுவணையுறுமகவானுடன்சூழ்வானவரும்
மேலாகியவெம்மிறைமொழியைவினவிமகிழ்ந்தாரெனவிரவு
நூலார்நைமிசாரணியர்கேட்கச்சூதமுனிநு[illegible]ான். 56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

பொறிகளும்புலனுங்கெடப்போதநீள்
நெறியுறுந்தவநிட்டையினேரிலா
மறுவில்காசிபமாமுனிமைந்தராந்
தறுகண்மிக்கவர்சூர்முதற்றனவர். 57

ஆண்டளப்பிலகாலமருந்தவம்
மூண்டுயர்ந்தபுராரியினல்வரம்
வேண்டலுற்றபின்வேள்விமனுதியா
யீண்டுதேவர்க்கிடர்புரிந்தானரோ. 58

வானநாடரும்வன்மைகொள்சூரனல்
ஆனதீமையினஞ்சியகன்றிடாக்
கூனல்மாமதிவேணிகுலாவுநன்
ஞானநாயகநாதனைப்போற்றினர். 59

போற்றிநின்றிடுபொன்னுலகோர்துயர்
ஆற்றியெந்தையுமாறுமுகன்றனைச்
சாற்றருஞ்சமர்வீரரைத்தன்னிடந்
தோற்றுவித்தனன்யாருந்தொழுதிட, 60

கருணைதங்கியகண்ணுதலனருண்
முருகவேளைமுரணுறுஞ்சாரதர்
அருகுசெல்லவமரர்மகிழ்ந்திட
மருவுசூர்முன்மரபினனுப்பினன். 61

பூதர்சூழ்தரப்பூழியெழுந்திட
வேதனுதியரேத்துறவேள்புகாத்
தாதுசேர்மலர்த்தாரகவீரனைக்
காதினனயிலாலக்கணந்தனில். 62

வென்றியுற்றிடுவேலவனவ்விடம்
நின்றுநீங்கிநிருதற்கிறைவனுந்
துன்றுசூரன்றிருநகர்துன்னியே
கன்றிநேருமவுணரைக்காய்தர 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவாகுமுதற்சொலும்வீரரை
நேரிலாதவனேவநெடிதுறும்
பாரமிக்கபகழிகளால்வருங்
கோரநீடுநிருதரைக்கொன்றனர், 64

அரிமுகங்கொளவுணனுஞ்சூரனும்
எரிதருங்கனல்போலெழவெம்பிரான்
திரிதருங்குலிசந்திகழ்வேல்விடா
வரிசையாகவதைசெயமாண்பினில். 65

உன்னுசூரனுடலங்கிழிந்தபின்
மன்னுசேவல்மயில்வடிவங்கொளா
முன்னரேகமுதல்வனல்வாகனம்
மின்னுகத்திகையாக்கியுமீண்டனன். 65

பிணிமுகத்தின்பிடரினில்வானவர்
பணியவைகுமறுமுகப்பண்ணவன்
மணிகளோடுயர்மல்குமருவியின்
அணியினீள்பரங்குன்றினமர்ந்தனன். 67

வாசவன்மகடன்னேவரைந்தபின்
பேசருங்குறமங்கையைப்பெட்பினுல்
நேசமோடுவதுவையினேர்கொளா
மாசகன்றுயர்கந்தமலையின்வாய், 68

கருணையோடுறுகந்தனுமவ்விடை
பெருகுமாதரத்தோடிருபெண்களுல்
அருகின்மேவரவாலயந்தன்னிடைப்
பொருவில்பூதர்கள்போற்றிடவேவினுன். 69

கடம்பணிந்திடுகந்தனுந்தாதைமே
விடங்கணுக்கவிதையங்குறித்தெழா
வடங்குதற்கரிதாயுறுமன்புடன்
நடந்துவெள்ளிநகந்தனிலெய்தினுன். 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுதற்கரிதாயுற்றுரைக்கரும்
அன்னைதந்தையடிதனையேத்தியே
மன்னுகந்தன்மகிழ்வினவர்கள்பாற்
பன்னரும்விடையுற்றுப்படர்ந்தனன். 71

கேடிலாதிசைகேள்கிளரத்திகழ்
வீடளித்துவிளங்கியகாசியும்
நீடுகாஞ்சியினோடுநிறையுறீஇ
மாடுசூழ்தருமற்றுந்தலங்களும். 72

சிந்தையன்புசிறந்திடநோக்கியே
கந்தவேளுங்கனிவினுடன்புகாச்
செந்திமாநகரம்முதற்செப்பிய
வந்தமற்றதலங்களமர்திடா. 73

சொல்லுதற்கரிதானவருள்சொரிந்
தெல்லையற்றதலந்தொறுமேகியே
பல்லுயிர்க்கருள்செய்பரன்மேவிய
மல்லல்சார்ந்தமறைவனமுற்றனன். 74

வேறு.

மன்றின்மதலைதனின்மருவிநடனம்புரிந்துமகிழ்பவர்போற்
றுன்றும்விளவிற்குரங்கினங்கடுரிதம்பயிலக்கனிகளுதிர்ந்
தொன்றுங்கதலிக்குலையிடறவொழுகுநறவொண்பனைமருவி
நின்றுதிகழ்ந்தமறைவனத்தின்நிமலவாறுமுகனடைந்தான். 75

வன்னிமரத்தினிரையினுடன்மருவும்பூவைகிளிகலைகள்
பன்னியமர்ந்தமறைவனத்திற்சூரனுடலம்பகவிரைவின்
மின்னலுமிழுமயில்விடுத்தோனன்புமீதூர்ந்திடவணுகி
உள்ளவரியபரனுமையையவணங்கியவரோடுறைந்தனனல். 76

அமரர்தொழவிண்ணுலகதனையாகண்டலனுக்கினிதினருள்
குமரன்சுருதிபயில்வனத்திற்குலவுமமரனீடருளடையாத்
தமரமிகுந்ததிரைபுரண்டுமருவுங்கடலைத்தான்கடந்தே
கமலந்தயங்குவயல்சூழுமிலங்கைநகரிற்கடிதடைந்தான். 77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைநிறங்கொள்மயிலிவர்ந்துபரிதிநிகர்த்தபடிவமுடன்
செச்சைமௌலியணிதிகழுஞ்செவ்வேளுந்தென்றிசையுததி
இச்சைதிகழவிகந்திலங்கைவடபாலிரும்பூதரநிகருங்
கச்சினிறுகுமுலையுமையாள்கணவனமருந்தலமடைந்தான். 78

துங்கந்தளவாவுததிகரைத்துறைவாயுறையும்வெண்மைதரு
சங்கந்தவழ்ந்துமுழங்கியுறல்சமர்வேலுறுசண்முகப்பெருமான்
இங்குற்றனனென்றுலகினர்கள்யாருங்கேட்கவிடுமொலிகள்
தங்கவுவந்தீண்டுறுதிரெனச்சாற்றியழைக்குந்திறனுமால். 79

சிறகாலலமிட்டுயர்பறவையிலுஞ்சிகரவரைமருங்காய்
உறவோங்கியதண்டலைகள்பலவொளிகொண்மலரையலர்த்தியுகு
நறவோடவனுற்றிடுபான்மைமுருகன்வரவைநாடியெமை
மறவாதருளென்றிரந்துகணீர்மல்கிவணங்குவதுபோன்ற. 80

கரியமுகிலைநிகர்த்தநிறமயின்மீதிவர்ந்தகடவுள்செலல்
உரிமையுறவேகண்டுமனமுவகையுறல்போற்கலாபிதனை
விரியநடித்துமயிலினங்கள்விரவுபான்மைவாகனமாய்ப்
பரிவினெமையுங்கொள்ளுகெனப்பண்பினேத்தியுறல்போலும், 81

திரைகள்கொழிக்கும்பவளமிசைதிகழ்ந்தவளைகானித்திலமுங்
கரையினுருண்டுவெண்மணலிற்கவினும்பான்மைமுருகனிவண்
வரையின்மகளோடிறைவனிடஞ்சேறலவனிமகனோக்கிப்
புரையின்மகிழ்ச்சிகொண்டுசிறுமுறுவல்புரிதல்போன்றனவே. 82

மகவான்முன்னுள்வச்சிரத்தின்மலையின்சிறகுதனையரிய
வகமீதுணர்ந்தபொன்னசலமஞ்சிஉருவந்தனைச்சுருக்கித்
தகநீளிலங்கையடைந்தமலன்றாண்மீதிறைஞ்சியருவிதனை
மிகவாயுதவிக்கடலருகின்விளங்குந்தகையிற்கிரிமருவ. 83

ஆருமுளத்தினுணர்வரிதாமமலன்றனதுபுதல்வனெனுங்
கூருமிலைவேற்குமரனிவண்செல்வானென்றுகுறித்தமரர்
சீர்விண்ணுலகிற்சினகரத்தையலங்காரஞ்செய்துற்றிலங்க
ஏர்கொண்டவனிவைத்ததெனமதில்கோபுரங்களெதிர்குலவ. 84

பொருவின்வளங்களிந்தவிதமபொருந்திநிறையும்பொற்பதனை
முருகன்நிறையுங்கருணையுடன்மகிழ்ந்துநோக்கிமுகமலர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவின்கணவனுடனமரர்தினமுந்துதிசெய்துணர்வரிய
அருவின்வடிவாமமலனுமைதன்னேடமராலயமடைந்தான். 85

இருமையுடன்சென்றரனுமைதனிருசேவடியின்மகுடமுற
மருவியெழுந்துவலமாகச்சென்றுமரபினுடனேத்தக்
கருதியவன்றன்புறமதனைக்கையாற்றடவிமடிமீதின்
பெருகுமகிழ்வினுறவிருத்திப்பெட்பாலுச்சிமோந்தனனல். 86

மறையுந்தேடியுணர்வரியவமலன்கரத்தாலெடுக்கிமகிழ்ந்
திறைவியமலையிடங்கொடுக்கவினிதின்வாங்கிவிழிகளித்து
முறையிற்குறங்கின்மிசையிருத்திமுகத்தாலுச்சிமோந்தழகு
நிறையுங்குமரன்றனைமருங்கினிலவியமர்தற்கருளினரால். 87

மேவுங்குமரன்கருணையுறுமேலோன்வதனந்தனைநோக்கித்
தாவில்சிறப்பின்மிகவுறுமித்தலத்தின்மகிமைதனையானும்
ஓவின்முறையான்மனந்தேறவோதல்வேண்டுமெனவினவக்
காவிமலரின்விழியுமைதன்கணவன்பரிந்துகழறிடுவான். 88

வேறு.

விண்டோய்வுற்றிடுமேருவின்கணே
உண்டாநன்சிகரத்தினென்றினைப்
பண்டேவாயுபறித்தெடாவிறல்
கொண்டேவீசியதீண்டுமண்கொள. 89

மேனுடுற்றிடமேவுநீண்முடி
தானேயிவ்விடையுற்றதன்மையின்
வானேரன்பில்வணங்கமாசிலா
நானேசுற்றிவணன்மைமீதுற. 90

காதோடுற்றிடுகண்கடங்குமை
மாதோடேநலமுற்றமால்வரை
மீதேயன்புமிகுந்துமேவினே
மோதானின்றிடுமும்பரேத்திட. 91

சென்றேறவைகியயான்செழிப்புற
நன்றேபாதலநண்ணுகங்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்றேயிவ்வசலத்தினீள்வளி
நின்றேசெல்லநினைந்தழைத்தனன். 92

அரிதாமின்னதியார்கலிக்கண்வாய்
பெரிதாயுற்றிசைபெற்றுமேவுமால்
பரிவாலேயுயிர்தான்படிந்தெழ
வெரிபோறீவினைகாய்ந்திலங்குமே. 93

தேராய்நீகுகதென்னிலங்கையின்
நேராயித்தலமேன்மைநேடியாம்
ஆராயிற்பிறிதில்லையன்புகொள்
நீராருந்துதிசெய்யநின்றதே 94

பிறையூருஞ்சடையுற்றவெம்பிரான்
நிறைவோடுந்தலநீர்மைசெப்பலும்
மறைநாலும்புகழ்வாய்மைகொண்டுள
இறையோனுங்குகனீதியம்புவான் 95

வேறு

போதனேமுதற்புங்கவர்போற்றரும்
நாதனேதென்னிலங்கைநகர்வயின்
ஆதரத்தினமர்ந்ததுமன்றியொண்
பாதலத்துறுகங்கையைப்பண்புற 96

போற்றியுன்னருளாலுயிர்பொற்புறச்
சாற்றுமிந்தத்தனிவரைச்சாரலின்
ஊற்றெடுத்துடனோடிப்பெருகுற
ஏற்றகங்கைகளிதினிலீந்தனை 97

ஆரணத்தையுண்டாக்குமமலநின்
காரணத்திறநன்றெனக்கந்தனும்
நாரணன்மலரோன்முனநாடரும்
பூரணன்பதம்பொற்புறவேத்தினன் 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனார்தனிணையடியேத்தியே
மாசகன்றுயர்கந்தனும்வானவர்
ஆசிகூறிடவாலயமொன்றினில்
நேசமோடுநெடிதமர்ந்தானரோ. 99

அங்கவெல்லையரியயனாதியாந்
துங்கவானவர்துய்யகுமரனின்
பங்கயப்பதமீதினிற்பரிவொடும்
பொங்குபூசைபுரியப்பொருந்தினர். 100

ஈறின்மாலயனாதியிமையவர்
ஆறிரண்டுபுயமுளவண்ணலின்
மாறிலாதமலரடிதாழ்ந்துநின்
றாறுகாதலினேடுமுரைசெய்வார். 101

உன்னடிக்கமலத்தினுவகையால்
மன்னுபூசைமரபினிற்செய்திட
நன்னயப்பினருளதைநல்கென
அன்னதாகவென்றானறுமாமுகன். 102

மற்றவெல்லையின்மாலயனாதியோர்
உற்றகங்கையுறுபுனல்கொண்டுரு
வெற்றிசேரயில்வேள்முடிமீதினிற்
பற்றினேடபிடேகமுன்பண்ணினர் 103

பட்டினீடுதுகிலினைப்பண்பொடுங்
கட்டியேபொற்கலனுறுசந்தனம்
இட்டுமுன்னரிலங்குமௌலியின்
மட்டுலாமலர்மாலையுஞ்சூட்டினர். 104

நீபமார்ந்தகுகற்குநிவேதனந்
தூபமோடுதுலங்கியகைமணி
தீபநல்லுபசாரந்திகழ்ந்திடப்
பாபநீங்கமுன்பூசனைபண்ணினர். 105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லல்கொண்டுறுமாலயனாதியாய்ச்
சொல்லலுற்றிடுசோர்விலதேவர்கள்
அல்லல்நீங்கவருச்சனைசெய்திட
எல்லவர்க்குமினிதருள்செய்தனன். 106

விண்ணில்மேவுவிபுதர்களுக்கருள்
அண்ணலாறுமுகத்தனமர்ந்திடத்
திண்ணநீடியசித்தரிலங்கையின்
நண்ணியேநகுலாசனமெய்தினார். 107

அட்டசித்திநிலையையருளினால்
இட்டமோடுமிதையமுணர்தருஞ்
சிட்டராகியசித்தர்சிறந்துடன்
உட்டெழிந்துயராலயமுற்றனர். 108

கோலமேவியசித்தருங்கோயிலின்
மேலதாயுறும்வேழமுகன்றனை
யாலமுண்டவரன்றனையம்மையை
ஏலுமன்பினிணையடியேத்தினார் 109

நெறிவணங்கியசித்தருநெஞ்சினில்
அறி; தற்கரியானையகன்றுபோய்க்
குறுமுனிக்குபதேசக்குருவதாய்
உறையுமாறுமுகன்முனருற்றனர். 110

சேவலங்கொடியுற்றசெவ்வேள்முனர்
ஆவலோடுசென்றேயருஞ்சித்தர்கள்
மேவுமன்னவன்மெல்லடியேத்தியே
ஓவில்சிந்தையதோகையதெய்தினார். 111

ஆறிரண்டுபுயத்தனடிகள்மேற்
றேறுபூசனைசித்தர்தெளிவுடன்
பேறதுன்னிநற்பெட்பினியற்றிமுன்
ஈறிலன்பினினிதுடனேத்தினார். 112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவெல்லையறுமுகனுங்கவர்
சிந்தைமன்னியசித்திகளுற்றிட
நிந்தையின்றியநீள்வரமீந்திடா
நந்தலில்லவிடையதுநல்கினன். 113

சித்தர்யாவுஞ்சிறந்துபராவுற
வத்தனுமயில்தாங்குமறுமுகன்
பத்தியோடுபரனைப்பணிந்திடா
வித்தலத்தையினிதிகந்தானரோ. 114

பீடுதங்குமரனைப்பிரிந்தபின்
ஏடவிழ்ந்தகடம்பனுமேகியே
காடுசூழ்கதிர்காமத்தலமுறீஇக்
கூடுமன்பிற்குலாவியமர்ந்தனன். 115

மன்றினுடியவள்ளலின்மான்மியம்
என்றுசூதனெழில்கொளும்மாதவர்
துன்றியேமுன்றொழுதுவணங்கிட
ஒன்றுமன்பினுணர்தரவோதினன். 116

மூர்த்திவிசேடமுரைத்தபடலம் முற்றிற்று.

ஆ. விருத்தம் 387

---

# நகுலமுனி யாத்திரைப் படலம்

மண்டலமதித்ததொல்சீர்நைமிசவனத்தின்மேவிப்
பண்டெயின்மூன்றுமட்டபரனடிவிரும்புநாற்பரன்
எண்டொகைமுனிவரேத்தியினிமையினமர்ந்துகேட்க
அண்டர்கள்புகழ்ந்தசூதமுனிவரனறையலுற்றான் 1

வேறு

மூண்டவல்வினைநெறியினுல்முனிவரிலொருவன்
நீண்டகீரியின்முகத்தொடுநிலமிசையுதித்தே
ஆண்டளப்பிலகாலமாயரன்கழல்நெஞ்சிற்
பூண்டவன்புடனிருந்துமாதவம்புரிந்தனனல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தநீர்மையினகுலமாமுனிவனுமிதையம்
நொந்தனேகநாளுேற்றுறவனேயதைநோக்கி
நிந்தையின்றியதீர்த்தங்களாடுநீயென்ன
வந்தமில்லதோர்பரனசரீரியினறைந்தான், 3

தேவர்தேவர்முனருளியவாய்மையைத்தேறி
நாவிஞற்றுதிபகர்ந்ததோர் நகுலமாமுனிவன்
ஆவலோடுமுன்சென்றிடவெண்ணியங்கமரத்
தாவிலாமுசுகுந்தனேர்சென்றமைதருவாம் 4

கையினுரழல்தரித்திடுங்கண்ணுதல்கயிலேச்
சையமீதினிலுமையொடுந்தண்டலேசார்ந்து
நொய்யநாண்மலர்விரிதருஞ்சிறப்பதைநோக்கி
எய்துநல்லருளுற்றவணெழிலொடுமிருந்தான். 5

மேனிலாவுமாலூரமேலமர்ந்திடுமுசுவில்
ஆனதோர்முசுவிலேதனேக்கையினிலாய்ந்து
ஞானநாயகன்மீதுறச்சொரிந்திடநயந்தே
வானநாயகன்வாலுணர்வதனேமுன்னளித்தான். 6

அன்னகாலேயினம்முசுவிமலன்பாலணுகிச்
சென்னியாலடிதாழ்தலுந்திருவருள்செய்து
மன்னனுகிநீயுதித்துயர்மண்ணுலகெல்லா
இன்னலின்றிநீபுரந்திடுவாயெனவிசைத்தான். 7

ஆறுசேர்சடையண்ணலங்கருளியவாய்மை
தேறியேமுசுமுகமுறுந்தேகமோடுதித்தே
வீறுபெற்றிடுமன்னனுயமர்ந்திசைவிளங்க
ஏறுசீர்க்கருவூரினிலரசுசெய்திருந்தான், 8

துன்னலார்புகணுற்பெருந்தானேகடுதிக்க
மின்னுவேல்முசுகுந்தனுமுளநனிவிரும்பி
மன்னுநற்சிவதலங்களின்மலிதருதீர்த்தம்
உன்னுமன்பினுல்மூழ்கிநன்மேருவினுற்ருன். 9

உற்றவேன்முசுகுந்தனுந்தவமிகவுயர்ந்த
பற்றிஞேடுறுநகுலமாமுனிவனேப்பார்த்தே
அற்றமில்லதோரடிகளின்வணங்கலுமாசி
சொற்றுநீயிவணுற்றதுசொல்கெவனவினவ 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈனமின்றியதீர்த்தமேவினிதுடன்மூழ்கிப்
பானல்போன்மிளிர்களமுறும்பரனடிபணிய
மானிலந்தனில்வந்தனனென்றலுமகிழ்ந்து
மோனமிக்குறுநகுலமாமுனிநனிமொழிவான். 11

திருந்திடாதுறுந்தீர்வையின்முகமதைத்தீமை
பொருந்துதன்மையினுற்றனன்யானுமிப்போதின்
மருந்துபோலதைமாற்றிடவெண்ணியிம்மண்மேல்
இருந்ததீர்த்தமதாடுதற்கெண்ணியீண்டுற்றேன். 12

இன்னகாலையினெமக்குறுதுணையதாயினிய
மன்னனீயிவணுற்றனையாதலின்மகிழ்ந்தேன்
உன்னுதீர்த்தமதாடுதற்குவகையினுடனே
புன்மைநீக்கியதலங்களிற்புகுதுவமென்றான். 13

என்றநன்மொழிகேட்டபின்முசுகுந்தவேந்தல்
நன்றெனத்தொழுதிறைஞ்சினனிருவரும்நயந்து
துன்னுமவ்விடந்தீர்த்தமதாடிமுன்றொழுது
சென்றுநீள்கடலிகந்துறுமிலங்கையிற்சென்றார். 14

## வேறு

முந்துவந்தமுசுகுந்தனுமேன்மை
தந்தமானகுலமெய்முனிதானுஞ்
சிந்துவின்கரைசிறந்துறுகின்ற
வெந்தையாலயமுனின்புறவேகி. 15

குன்றிணேடிசைகுலாவியமேன்மை
மன்றுசூளிகையும்மாமணிகொண்டே
நின்றகோபுரமும்நீடியசோலை
ஒன்றுமாமதிலுமோங்குதனேக்கி 16

காதலாலிருவர்கண்களிதுன்ற
மேதகுங்கனிவுமேம்படவேலை
ஓதமுற்றதிரையோடெதிராக
நாதனேருதவுநன்னதிசெல்ல. 17

பூவின்மேவுமயனுற்புகழ்கின்ற
தாவிலாதமர்தலந்திகழ்வுற்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவு தன்மையனை தமேன்மையினுடி
நாவினுலிருவர் நன் குடனேத்தி 18

மண்டுவீதிவலமாகிமுன் வந்தே
கொண்டல்மீதுபடிகோபுரவாயில்
கண்டுசிந்தைகனிவோடுறவேத்தி
அண்டர்நாதனமராலயமுற்றுர் 19

தொழுதுதீவினைதொலைந்திடவேகி
உழுவலன் புடனுளங்களிகூர்ந்து
தழுவுமன்பரடிதந்தலைகொண்டே
வழுவையின்வதனவள்ளலையேத்தி. 20

குறவர்மாதினெடுகுஞ்சரமாதும்
புறமிலங்கவுயர்புள்மயிலின்மேன்
உறவிருந்தருளுடம்பிடியேந்து
மறுமுகேசனடியன்புடனேத்தி 21

அன்னமென்னடையினம்பிகைபாதம்
உன்னியேதொழுதுவந்தவணீங்கி
மன்னுமன்பினெடுமாதவர்போற்றும்
என்னையாள்பகவனீசன்முனேகி. 22

செக்கர்வேணிமிகுசென்னிறமேனி
மூக்கணேடுமுனைதங்கியசூலந்
தக்கதந்தியுரியோடுதயங்கும்
நக்கனுருருவை நல்விழிகண்டு. 23

மறைகளுடவரிதாயுயிர்மல்கி
நிறையுநின்மலனை நீழ்விழிகண்டு
குறையிரந்துகுணமாயெதிராக
முறையினீடுதுதிமுன்மொழிகின்றுர். 24

வேறு.

அடியவரிதயந்தன்னிலமர்ந்தருள்புரிவாய்போற்றி
நெடியமாலயனுமுன்னுள்நேடருந்திறத்தாய்போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடியிடையுமையினேடுதுலங்குறவமர்வாய்போற்றி
கடிகமழிதழிவேய்ந்தகண்ணுதற்பரனேபோற்றி. 25

வெள்ளியங்கிரியின்மீதுவிளங்கியதேவேபோற்றி
அள்ளிவெண்ணீறுதன்னை ஆகமதணிந்தாய்போற்றி
புள்ளிகொளருணமேந்திபுலியதளுடையாய்போற்றி
முள்ளரைமுளரித்தேவன் முடித்தலைதுணித்தாய்போற்றி, 26

ஆருயிர்க்குயிராயென்றுமமர்ந்தபூரணனேபோற்றி
பார்முதலைந்தாம்பூதபகுதியினமர்ந்தாய்போற்றி
தார்கொழுமண்டமெல்லாந்தந்திடுமுதலேபோற்றி
ஊர்குணங்குறிகளில்லாதுற்றநின்மலனேபோற்றி. 27

இருக்குநான்மறைகளாதியியம்புதற்கரியாய்போற்றி
விருப்பொடுவெறுப்பிலாதுவிளங்கருட்கடலேபோற்றி
பொருப்பினுண்மேலதாகும்பொன்மலைச்சிலையாய்போற்றி
திருப்பயில்முகுந்தனாதிதேவர்க்குந்தேவேபோற்றி. 28

தொல்லுயிர்க்குள்ளபாசத்தொடர்பதைக்களைவாய்போற்றி
அல்லல்கொள்பிறவிதன்னையகற்றுபுண்ணியனேபோற்றி
மல்லலாகமங்களியாவும்வழுத்திடவமர்வாய்போற்றி
தில்லையில்நடனஞ்செய்துதிகழ்ந்ததற்பரனேபோற்றி' 29

இடர்கொள்மார்க்கண்டர்க்காகவியமனையுதைத்தாய்போற்றி
கடலெழுவிடத்தைமுன்னுட்கண்டமதணிந்தாய்போற்றி
படர்மதிநெடியகங்கைபன்னகமணிந்தாய்போற்றி
மிடலுறுவிடையின்மீதுவிளங்கருட்கடலேபோற்றி. 30

சித்தசனுடலைமுன்னஞ்சிதைவுறவெரித்தாய்போற்றி
மத்தநீளறுகுகொன்றைமணமுறவணிவாய்போற்றி
முத்திறநிருதர்மேவும் முப்புரமெரித்தாய்போற்றி
நித்தனேயருணீங்காதநின்மலச்சுடரேபோற்றி. 31

மதியிலாத்தக்கன்செய்தமகமுனஞ்சிதைத்தாய்போற்றி
விதிசிரமாலையென்புவிளங்கமுன்புனைந்தாய்போற்றி
அதிர்தருதுடியினேடுமனல்கயினுற்ருய்போற்றி
கதிதனையருளமேனிகாட்டியவிறைவாபோற்றி. 32

உட்டெழிவுற்ரேர்காணவுகந்துமுன்நிற்பாய்போற்றி
இட்டமோடிகபரத்தையினிதினிலருள்வாய்போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டசித்திகளை வெஃகுமன்பருக்களிப்பாய்போற்றி
சிட்டர்கடுதிகள்கேட்டுச்சிறந்துளமகிழ்வாய்போற்றி. 33

பெட்பினிற்சைவமோங்கிப்பெருகிடவமைத்தாய்போற்றி
கட்புலன்றனக்குங்காணுக்கருணையினிறைவேபோற்றி
உட்புலனிகந்தோரேத்துமுதயசூரியனேபோற்றி
நுட்பஞானியர்களாலும்நுவலருந்திறத்தாய்போற்றி. 34

முற்பழவினையைமாற்றுமுதற்பரம்பொருளேபோற்றி
நற்பயன்கருதினோர்க்குநலமுடனளிப்பாய்போற்றி
உற்பவமகற்றயாங்களுனதடியடைந்தோம்போற்றி
கற்பனைகடந்தவாதிக்கடவுளேபோற்றிபோற்றி. 35

இன்னனதுதிகடன்னையிருவருமிசைத்தகாலை
பன்னகமணிந்தவெங்கள்பரமனும்பரிவுபூண்டு
முன்னுறுமவர்கள்மீதுமுகமலர்ந்தருள்மீதூர
நன்னயமோடுமிந்தவாசகம்நவிற்றுகின்றான். 36

பூண்டபேரன்பினோடிப்புண்ணியநதியின்மூழ்கி
மாண்டகுமெனதுபாதமலரினைத்தொழுகினும்பால்
ஈண்டுபுன்முகத்தைநீங்கியிவ்வுலகத்தில்யாருங்
காண்டகவழகின்மிக்கமுகமதுகவினுமென்றான். 37

இம்மொழிதன்னையுள்ளத்தன்பினுலினிதுகூறி
மைமலிவிடைநேர்கண்டவள்ளலும்மரபின்மேவ
மும்முறைவணங்கிநின்றுமுனிமுசுகுந்தனோடுந்
தம்முளநிறைந்தவன்பாலவ்விடந்தயங்கமேவி, 38

மலங்கொடுகயல்சேல்கெண்டைமகரமீதுகளநீடுங்
கலங்கள்கூடம்பிலங்கச்சென்றகடலருகதனின்மேரு
விலங்கலைநிகரும்வெற்பினித்திலம்விரவப்பாய்ந்த
நலங்கிளரருவிகண்டுநான்மறைவிதிகைக்கொண்டு. 39

வேறு.

முன்வினைப்பயன்முற்றுமகன்றிடப்
பன்னுசங்கற்பமோடும்பரம்பிய
நன்னதிக்கண்ணகுலமுனிவனும்
மன்னுமாய்நன்மரபினின்மூழ்கினர். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்செழுத்தொடுபூதியணிந்துமென்
பஞ்சடிச்சிவைபாகனைநெஞ்சினிற்
றஞ்சமென்றுதவாதுதினந்தொறும்
மஞ்சுயர்ந்தமலைப்புனன் மூழ்கினார். 41

அல்லினும்பகறன்னினுமாலயம்
புல்லுநல்லடியாரொடுபொற்புறு
மல்லலங்குழன்மங்கைபங்காளனைத்
தொல்லைவேதமுறையிற்றொழுதனர். 42

ஊழ்வினைப்பயனீங்கிடவுற்றெமை
ஆழுமீசனையேத்தவர்க்குறும்
நீழ்விலங்கின்முகநிலைநீங்கியே
நாளுநல்லெழிலார்முகநண்ணிய. 43

இருவர்தாமுமிதையங்கழித்தவண்
அருவிநீரினிலன்புறமூழ்கியெம்
பொருவிலீசனுமையடிபோற்றியே
உருகுமன்பினுடனவணுற்றனர். 44

114843

மேவுநாளினில்மேலுலகுற்றிடுந்
தாவில்விண்ணவர்தற்பரனாலிவர்க்
கோவினன்முகமுற்றதையோர்ந்துதங்
காவின்மேவுகடிமலர்சிந்தினார். 45

முண்டகாசனனோடுமுகுந்தனீழ்
எண்டிசைக்கணுமெய்தியபாலகர்
தொண்டரோடுறுதொல்லைமுனிவர்கள்
அண்டர்நாதனருணெறியேத்தினார். 46

இன்னதன்மையின்யாருமகிழ்வுறப்
பன்னகேசன்பணாமுடிதாங்கிய
வுன்னரும்புவிமீதினிலுற்றுளோர்
நன்னயத்துடனாசிநவின்றனர். 47

கொற்றவேன்முசுகுந்தனுங்கோதிலா
நற்றவங்கொள்நகுலமுனிவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றகங்கையின் மூழ்கியுவகையால்
அற்றமின்றியவரனைவெய்தினர். 48

நீசமெய்தும்விலங்கினிலேமுக
மாசகன்றுமதியமெனத்திகழ்
தேசுமிக்கவதனமுறத்தெரிந்
தாசையோடுமரனடியர்ச்சியா. 49

முறையினோடுமுதல்வனைமக்கினி
அறையுனீர்மையினன் புற்றெழுகுதல்
நிறைவெனுவிருவோருநிகழ்த்தியே
மறையின்வாய்மையையவயங்கவமர்ந்தனர். 50

வேறு

அங்கண்நகுலமுனிவனுநல்லரசன்றானுமமர்ந்திதமாய்க்
கங்குல்வாயிற்றுயிலலுறுங்காலையொருநாளரன்கனவிற்
செங்கைமழுமானிலங்கவருள்செய்யும்வடிவமுடனணுகிப்
பங்கமகன்றமுனிவனுக்குப்பரிவாலினையபகர்ந்திடுவான். 51

வனஞ்சார்தீர்வைமுகமகன்றவாய்மையதனுளிவ்வரைக்கும்
அனஞ்சார்நடையினம்பிகைக்குநதியோடெமக்குமார்வமுற
முனஞ்சார்நகுலநாமமின்றுமுதலாயுலகின்மிசைவளங்கக்
கனஞ்சார்முனிவநிறுவினன்யான்கைவாய்நெல்லிக்கனிபோல. 52

சகமீதுற்றோருனதுபெயர்புகன்றேயன்பிற்சார்ந்துநமை
அகமேனினைந்துமூழ்கினருளதனைப்பெறுவாராணையிது
தகவோடிவணீயுறைந்திடுதீதார்வேன்முசுகுந்தனைநகரம்
புகநீடருளைப்புரிந்தனமென்றன்பாலீசன்புகன்றுசெல. 53

அடங்காமகிழ்ச்சியுடன்முனிவனமர்வேல்மன்னனுடன்மருவி
விடங்காஸ்களத்தனருள்புரிந்தமேன்மையதனைவியந்துமொழிந்
துடம்பார்புளகமுறநிறையுமுள்ளங்குளிர்ந்துமுகமலர்ந்தெம்
இடஞ்சார்புறதிவினைநிலையையிகந்தோமென்றுதிகழ்வதுரு. 54

பின்னுமிருதர்தாங்கலந்துபிறைசேர்முடிகொளரனருளை
உன்னியுரைத்துமகிழ்ந்ததற்பினுலகாளரசனகுலமுனி
தன்னைவணங்கியழப்பரியதவத்தோயெனக்குவிடைதருதி
என்னவினவவாசிதனையெடுத்துமொழிந்தேகெனவிடுத்தான். 55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிபால்விடைபெற்றிடுநிருபன் முக்கண் முதல்வனிடமணுகி
இனிதாய்வலமுற்றிணையடியினிறைஞ்சியிரண்டுவிழியினும்நீர்
பனியாநெஞ்சம்பரவசமாய்த்தேகம்பதறப்பலதுதிநேர்
நனிசேர்விளைவினொடுந்தனதுநாவினெடுத்துநவிறுவான். 56

## வேறு

ஐந்தெனுந்தொழிலாய்போற்றியடியவர்க்கெளியாய்போற்றி
நொந்தவர்க்கருள்வாய்போற்றிநோக்கருந்திறத்தாய்போற்றி
இந்துவையணிந்தாய்போற்றியிருவினையிகந்தாய்போற்றி
சிந்துவையணிந்தாய்போற்றிசிவபெருமானேபோற்றி. 57

விடைதனையுகந்தாய்போற்றிவிண்ணவர்க்கரியாய்போற்றி
அடைகுனர்க்கருள்வாய்போற்றியமலநன்வடிவேபோற்றி
புடையுமையுகந்தாய்போற்றிபுண்ணியவடிவேபோற்றி
சடையில்மண்சுமந்தாய்போற்றிசங்கராபோற்றிபோற்றி 58

ஆரணமுதல்வாபோற்றியாகமப்பொருளேபோற்றி
காரணமுதலேபோற்றிகலைகளின்முடிவேபோற்றி
வாரணவுரியாய்போற்றிவரமருள்முதல்வாபோற்றி
பூரணசொருபாபோற்றிபுலியதனுடையாய்போற்றி. 59

கருணையங்கடலேபோற்றிகழறுதற்கரியாய்போற்றி
உருவமதிகந்தாய்போற்றியுயிர்களுக்குயிரேபோற்றி
நிருமலச்சுடரேபோற்றிநிலமுதற்பொருளேபோற்றி
தருமனையுதைத்தாய்போற்றிதற்பரானந்தாபோற்றி. 60

மன்னவனிந்தவாறுமதிமுடிச்சடையான்முன்னர்
உன்னருந்துதிகள்கூறியுவந்துநல்லருள்பெற்றேகித்
தன்னகரடைந்துமின்னுதவிசினிலமர்ந்துகையிற்
பொன்னியல்திகிரிகொண்டுபொலிவினிலரசுசெய்தான். 61

அறுபகையகற்றுந்துய்யநகுலமாமுனிவனுண்மை
உறுமுசுகுந்தமன்னன்பிரிந்ததையுளத்தினெண்ணி
மறுகியிம்மண்ணேராசைதகாதெனமதித்துநெஞ்சை
நிறுவிநன்னிலையின்வைகிநிமலனைநினைந்துநோற்றான். 62

## வேறு

வெண்ணிலாமதிமிலைச்சியவேணியான்றனக்கும்
பண்ணுலாவியமொழிதிகழ்பராபரைதனக்குந்
தண்ணுலாவியநதியுடன்றங்கியவரைக்கும்
நண்ணுமெய்த்தவநகுலமாமுனிபெயர்நயக்க. 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதிலாநகுலேசனென்றேத்தியுமெங்கோன்
பாதியாணகுலாம்பிகையென்றடிபணிந்துங்
கோதில்கங்கையைநகுலமாநதியெனக்கொண்டும்
பூதரத்தையும்நகுலமால்வரையெனப்புகல்வார். 64

உம்பரோடுயர்முனிவரருலகின்மேலுயிர்கள்
வெம்புமாரஞர்ப்பிறவியாம்வேலையையிகந்து
நம்புநீழ்கதியெனுங்கரைவிடுத்தநாவாயின்
எம்பிரானருள்வளர்ந்துமீதெழுந்துறவிருந்த. 65

என்றுசூதனெண்ணுறெனுமுனிவரர்க்கியம்ப
நன்றுகேட்டவரனைவருமுளநனிமகிழாத்
துன்றுதந்தலைதுளக்கிநற்றுணையடிபரவி
உன்றனக்குநேர்யாருலகத்தினிலென்றார். 66

நகுலமுனியாத்திரைப்படலம் முற்றிற்று
ஆ. விருத்தம் 453

---

# இராமயாத்திரைப்படலம்

கரியினமொலிகள்செய்யுங்கடிமலர்ச்சோலைவானந்
தெரிதருமிலங்கைநாட்டிற்றேசுறுநகுலேசன்றன்
பரிவுறுமேன்மைதன்னைப்பண்புடன்முனிவர்கேட்ப
புரிசடைதயங்குஞ்சூதமுனிவரன்புகல்வான்பின்னும். 1

வேறு

முகந்தநீருறுமுகிலெனமுகங்களோர்பத்துந்
திகந்தமெட்டியதிண்புயமொருபதுந்திகழ
அகந்தைதன்னுடனுதித்திடுமிராவணவரக்கன்
சகந்தனிற்பெரிதாகியவிலங்கையிற்சார்ந்தான். 2

எம்மையாளுடையீசனதருள்பெறீயெழில்கொள்
மும்மையாகியவுலகினர்முன்னர்போய்வணங்க
வெம்மைநீழ்கொடுங்கோல்கொடுவேலைநீர்சூழ்ந்த
செம்மைநீடியசெகமதையரசுசெய்திருந்தான். 3

கும்பகன்னனும்விபீடணனென்றிசைகுலவு
தம்பிமாருடன்றுணைகள்சூழ்ந்திடத்தகைசால்
இம்பர்தன்னுடன்முனிவரராசிகளிசைக்க
உம்பர்மன்னவன்முதலினோருளங்குலைகுலைய. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமேவியபுதல்வரோடரசியல்செலுத்தி
அட்டதிக்குளோர்யாரையுமமரினில்வென்றே
இட்டமோடுதென்னிலங்கையம்பதிதனிலிலங்கு
வட்டநீழ்குடைநிழலிடத்தவிசினில்வைகி. 5

நேமிகொண்டரசுற்றவனிலங்கையினேர்ந்து
தீமைசெய்ததால்நான்முகன்மகபதிதேவர்
தாமினிப்புரிசெயலதைவுணர்வுறத்தயங்கு
பூமகழ்க்கிசைகணவனுமுராரிபாற்புகுந்தார். 6

சென்றநான்முகனுதியாயியம்புசேனுலகோர்
துன்றிடுந்துளாய்மௌலியானிணையடிதொழுது
நின்றுராவணன்செய்திடுதீமையைநிகழ்த்த
நன்றுகேட்டவனவரொடுமரனிடநணுகி. 7

சங்குதாங்கியமுராரியுஞ்சங்கரன்றன்பாற்
பொங்குமன்புறவேகியன்னவனடிபோற்றி
மங்குல்போலமரிராவணன் றனைமடிவிக்கத்
திங்கள்வேனியாய்திருவருள்புரிகெனச்சிறந்து. 8

உரகபூடணமணிந்ததோரும்பர்நாயகனும்
மரபினேடுமான்முகந்தனைநோக்கிநீர்மருவு
நரர்களோடுயர்குரங்கெனநானிலமுதித்து
விரவுமங்கவர்தங்களைவீட்டுதிரென்றான். 9

கொண்டல்போனிறமாயவனவ்வுரைகொண்டு
பண்டுமுப்புரமெரித்ததோர்பரனடிபணிந்தே
மண்டுநான்முகன்முதலினேர்மருங்கினிற்சூழத்
தண்டலில்லதோர்தன்னுலகத்தினிற்சார்ந்தான். 10

அங்கண்மேவியமுகுந்தனுமம்புயன்முதலாம்
பொங்குதேவரைக்குரங்கெனவுதித்துறுபுவியிற்
தங்குதானைகளாகிநேர்செல்லுதிர்தறுகட்
கங்குல்போலுறுமிராக்கதசேனையைக்களைய. 11

கூறிமாலவர்தங்களைவிடுத்திசைகுலவும்
மாறிலாதசீரயோத்திமாநகரிடைவதிந்த
தாறுபாய்மதயானைகொடசரதன்றன்பால்
மாறிலாதசீர்ப்புதல்வனுய்வந்தவதரித்தான். 12

உதயமுற்றவான்பரிதிபோலுறுதசரதன்பால்
இதையநன்மகிழ்வெய்துறவிராமனுமிளையோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைவிலாவிறலிலக்குவன்சிறந்திடுபரதன்
துணையுமாலையதணிந்தசத்துருக்கனுந்துன்னி. 13

பிறந்துபூமியினயந்துறும்பிள்ளைமாமதிபோல்
அறந்தவாதவர்வளர்தலுங்கௌசிகன்றன்னால்
மறங்கொணீர்மைசாலிராமனும்வனந்தனிலுற்ற
திறங்கொள்தாடகைதன்னையும்வதைசெய்துசீதை. 14

தன்னைநன்மணஞ்செய்தவனுறுதலுந்தனக்கு
முன்னுறும்பரசிராமனைமுதுகிடமுனிந்து
பின்னராண்டுறைகூனியாற்பேரரசிழந்தே
இன்னல்நீடுறவிராகவன்மனையுடனிசைநீள். 15

தம்பிலக்குவன்றன்னுடனணிநகர்தணவா
நம்புமாரழல்நெருங்கியகானிடைநடந்து
பம்புறுந்திரையுறுபஞ்சவடிநதிபாங்காய்
உம்பருந்துதிவலிமிகுமிராமனுற்றனனால். 16

வேறு

கையில்வில்லொடுகானகந்தன்னிடை
துய்யனென்னுமிராகவன்துன்றுற
வெய்யராவணன்றங்கைநல்வெற்பென
மெய்கொள்சூர்ப்பனமாதவண்மேவினாள். 18

கயலைநேர்விழிச்சீதையைக்கண்டபின்
இயலுமன்பினெடுத்துமுன்செல்லுற
மயலகன்றவிலக்குமன்வாழ்கொடே
குயமுடன்குழறன்னையுங்கொய்தனன். 18

கொய்தபின்னர்கொடியவரக்கியும்
கையராங்கரதூடணர்தங்கள்பால்
எய்திமுன்னுறவுற்றிடராமனும்
வையமேலவர்தம்மைவதைத்தனன். 19

மம்மல்சூர்ப்பனமாதுமருளடைந்
தல்லல்கொண்டழுதேயவணீங்குறுத்
தொல்லிலங்கைநகரந்தொடர்ந்திசை
புல்லிராவணன்முன்புகன்றாளரோ. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈறிலன்பொடிராவணனுஞ்செவி
மீறுகாதலினால்மிகக்கேட்டபின்
கூறுகானகந்தன்னிற்குறுகிவீ
நாறிடுங்குழற்சீதைமுன்னண்ணினான். 21

ஈனமிக்கவிராவணனீண்டுபொன்
மானதொன்றினைக்காட்டிமயக்கிமுன்
றானுறும்பெருந்தேர்தனிற்சீதையை
வான்வழிக்கொடிலங்கைமருவினான். 22

சிந்தையன்புறுசீதையகன்றபின்
நொந்திராமனுந்தம்பியைநோக்குறா
இந்தநீர்மையையாவர்செய்தாரென
முந்துறுந்துயரக்கடல்மூழ்கினான். 23

அங்கமர்ந்திடுகாலத்தனுமனைப்
பங்கமற்றநற்பம்பைநதிக்கரை
துங்கநீடிவர்கண்டுதுகளிலாத்
தங்கடன்மைகலந்துரைதந்தனர். 24

குனிவில்கொண்டவிராகவனுங்குணா
வனுமனாற்சுக்கிரீவனையன்புசேர்
கனிவினாலுறக்கண்டவன்வாய்மையிற்
றனுவில்வாலிதனதுயிர்வௌவினான். 25

ஒற்றெனாமுனமோங்குமனுமனைப்
பற்றினோடுவிடுத்தலும்பாய்ந்தவன்
உற்றசானகியோடுமுரைபயின்
றற்றமின்றியாக்கரையட்டனன். 26

நீக்கமற்றநிருதர்கட்கண்ணல்முன்
ஊக்கமோடுசென்றுண்மையுரைசெய்தே
தாக்கிலங்கைநகரிற்றழலிட்டே
மீக்கிளர்ந்தவனுமனும்மீண்டனன். 27

அண்டரேத்தவனுமனிராமனைக்
கண்டிலங்கையிற்காரணமோதிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டுவானரச்சேனையைமாறெடுங்
கொண்டுகையிற்கொடுஞ்சிலையோடுயர். 28

மருவுதம்பியிலக்குமன்வன்மையால்
அருகுசெல்லவிராமனுமாண்மையோர்
வெருவுவானரவெள்ளமெழுபதாம்
பெருகுசேனைகளோடும்பெயர்ந்தனன். 29

கூற்றமன்னகுரங்குகள்சூழ்ந்துற
மாற்றலார்கள்வணங்குமிராகவன்
ஏற்றதம்பியிலக்குமன்பின்செல
வாற்றலோடுமிலங்கையடைந்தனன். 30

வேறு

கடல்மண்டிலங்கைநகரின்கண்வீசுகதிரின்குலத்துமுதல்வன்
அடல்கொண்டுமுன்னியவண்வந்தபான்மையகமீதுணர்ந்துநிருதன்
மிடல்கொண்டதேரின்மிசைதுன்றிநாலுவிதநின்றதானைவிரவச்
சுடர்கொண்டவாழிதனுவுங்கைவேல்கள்சூழல்கின்றநேமிபரியா. 31

முரசங்கள்வென்றிபயில்கின்றசங்குமுதல்பல்லியங்களதிரப்
பரசங்கமன்னர்விறல்கொண்டொருத்தல்பரிமீதிவர்ந்துபுகுத
நிரவுங்கைநன்னின்னுறுகின்றதிங்கணிகரென்னநின்றகுடையும்
விரவும்பர்சென்றபுயலென்னமின்கொள்வியனுலவட்டமணுக. 32

வேறு

மருவும்பல்சேனையிருபதமுந்துபூழிகடோன்மரபும்பருர்கள்புகுத
விருதுந்துவீரர்நுபுறமுங்குழுலையொடுவிரவுங்கைவீசுபடையாற்
பொருதுந்தவாகமிநுழிளவுண்டகாறலைகள்பொலிகின்றமேருகிரியின்
பெருகின்றசோரிநதிபெயர்கின்றநாய்நரிகள்பெரிதுண்டுநின்றுமகிழ. 33

இணைதங்கவேறொருவரில்துங்கராமனுநல்லிசைதங்குலக்குவனிடுங்
கணைசென்றுவீரரணிகவசங்களோடுதலைகரமொய்ம்புகால்கடுணியா
வணைதங்கவானினிடையதுகண்டவானவர்களணிதங்குமுள்ளமகிழாத்
துணைதங்குவீரரிருதவர்தங்குமாண்மைநிலைதுதிகொண்டுநின்றுபுகழ. 34

இனநின்றநேர்கொள்பதுதலைகொண்டராவணனுமிகலிந்த்ரசித்துமகவுங்
கனநின்றவனுசனெனவுறுகும்பகன்னனெடுகணியங்கொள்மந்திரிமுதல்
உனநின்றநிருதர்குலமவர்தங்கள்வலியினுடனுதிரங்களருவிநிகரத்
தனதங்கமிசையின்வழிதரநின்றுமிருவரொடுசமரங்கணனிபுரிதர. 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்கின்றவேலையிவர்நிலைகண்டிலக்குமனுமதிர்கின்றதனதுசிலையின்
படர்கின்றவாழிதொடவனிகங்கணீடுதலைபடிவங்கள்சிதறியுருள
இடர்கொண்டுவாடுமமருறுமிந்ரசித்துநனியிருதுண்டமாகியுதிரங்
குடர்சிந்தவார்களமிறந்தனன்சேனவணிகூளிகள்விருந்துகொளவே. 36

அணிகொண்டுமுனைமருவுசதுரங்கசேனையுடனமர்தங்குகும்பகர்னன்
மணிகொண்டுமிளிர்மௌலிபுனைகின்றராமன்விடுமறநின்றபகழியுருவத்
துணிவுண்டுதலையதுடல்கொடியுண்டுநீழ்குருதிதுளிதங்குநதியின்முழுகப்
பணிகொண்டநிலமதனிலுடறுன்றவமரருறைபதிசென்றதவனதுயிரே. 37

அலைமிஞ்சுகடலைநிகர்படைதங்குராவணனுமமர்செய்தபோதுமுதல்வன்
கொலைமிஞ்சுகணைகளுறநிரைதங்குமவுலியணிகொளுவுண்டமணிகள்சிதற
மலையஞ்சுமகலமொருபதுதுன்றுதலையருகின்மறநின்றகரமுமறநேர்
நிலைமிஞ்சிலங்கைநகர்பயில்கின்றவன்பறவைநிழலின்கிடத்திறந்தான். 38

வேறு

வையமுற்றுளோர்புகழிலங்கைப்புரமடவார்
கையினூற்களந்தயங்குதம்மங்கலங்கழற்ற
வெய்யராக்கதகுலந்தனைமுனிந்துவேரறுத்தோன்
தையல்சானகிமனைவியைமீட்டனன்சயத்தால். 39

அன்னகாலையிற்சுசங்கிதனென்றகந்தருவன்
பன்னுதற்கருமிராவணன்பரமன்மேற்பாடி
இன்னிசைக்கொளுமியாள்கயினுற்றதையெடுத்து
மன்னுமன்புடனகுலமால்வரைதனில்வந்தான் 40

பரிவினேகியசுசங்கிதன்பரையொடும்பரனை
அரிதின்மானுடவடிவுறீயலரினர்ச்சித்துத்
திரிபிலாதுறுமேழிசைமரபொடுந்திகழ்ந்த
புரிநரம்புசேர்மாடகயாழ்சுதிபுகன்றான். 41

நாடொறும்நகுலேசர்மேனன்றிசைபாடப்
பீடுறும்பிறையணிந்துளோன்பிரசனனாகிக்
கூடுமன்பநீயெமக்கியாழிசைதனைக்குறித்துப்
பாடுறுந்திறத்தால்மிகும்பரிவதையடைந்தேம். 42

மாணிலாவநீயாழைவாசித்தநன்மரபால்
நீணிலாவுமின்னிலமுறுதேசங்கணிகரில்
வீணபாணமாபுரமெனவியன்பெயரதனைப்
பூணவேநிலையுற்றியான்புகன்றனமென்றே. 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்கொளித்தலந்தன்னிர்சிறப்புடனிறைந்த
கார்பயின்றுறுவனங்களைக்கவினுறத்திருத்திப்
பாருளார்மனம்பண்புறச்செய்துநீழ்பரிவின்
ஏர்கொணீதவமுற்றெமையடைகுதியென்றான். 44

நாதனிவ்வகைநவின்றிடச்சுசங்கிதன்நயந்து
மீதுயர்ந்திடும்வனங்களைத்திருத்தியுண்மிகுந்த
காதலாநெடுங்காலமாய்நற்றவங்கவின்றே
ஆதியாம்நகுலேசனதடியிணையடைந்தான். 45

மற்றினீர்மைகணிற்கமுன்னிலங்கைமாநகரின்
உற்றராகவன்விபீடணற்குளவிருப்புடனே
கொற்றநீடுறுமௌலியைக்கோலமோடணிந்து
பற்றிநேடுறுமிலங்கையம்பதிதனில்வைத்தான். 46

ஈறிலாவலிமிக்கதோர்இராகவனிகலால்
மாறிலாதுறுவானரச்சேனைகள்மருங்கிற்
கூறநம்பலபடையுடன்வந்திடக்கூளி
பாறலாவியவாகவமொருவியேபடர்ந்தான். 47

பன்னுதற்கருமிலங்கையைநீங்கியேபரவை
தன்னையுங்கடந்தேயுயரிராகவன்றரளம்
முன்னராயுறுந்திரையினற்கரையுறமுறையே
மின்னுமாநதிச்சேதுவின்மருங்குறமேவி. 48

கௌவைநீழ்கடற்சேதுவின்கரைதனிலுற்ற
தெவ்வராற்புகழிராகவன்றெளிவினின்மூழ்கி
எவ்வெவர்க்குமேலாகுமீசுரன்றனையெண்ணி
அவ்விடந்தனிலாகமவிதியினர்ச்சித்தான். 49

பிரமகத்தியைநீக்குமச்சிவபிரான்றனக்கு
வரமிகுந்தராமலிங்கமென்றுரையுறவளங்கும்
விரவுமத்தலமேன்மையைவிண்ணுலகத்திற்
பரவுதேவர்களாயினும்பகர்ந்திடவற்றே. 50

வேறு

இந்தவண்ணமிராகவனவ்விடை
அந்தமற்றவமலனுக்கர்ச்சியாச்
சிந்தையன்புளசீதையுகந்துறக்
கந்துகந்தருதேர்கடிதுற்றனன். 51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குளோர்கள்புகழுந்திறலுறு
தக்கதம்பி இலக்குமன்றொடாழப்
பக்கமாயனுமானும்பரிந்துறச்
சுக்கிரீவன்முதலினர்சுற்றிட. 52

வல்லைசுற்றியவானரச்சேனைகள்
ஒல்லைதன்னிலொலிகடல்போலுறு
பல்லியங்களைப்பாங்கர்முழக்கிட
வில்லுறுந்திறல்வீரனடைந்தனன். 53

இகலினால்முன்னிராவணனாதியாம்
நிகரிலாதநிருதரைத்தென்றிசை
நிகழவைத்ததிறல்கொளிராகவன்
நகுலவெற்பினலமுடனண்ணினான். 54

நன்றுவானணைநாடியகோபுரந்
துன்றுமாமதில்தூமணிக்கோவிலுங்
குன்றமோடுகுளிர்ந்திடுமாநதி
ஒன்றுதன்மையுமோகையினோக்குறா. 55

நோக்கலுற்றிடுநொன்சிலைராமனுந்
தாக்கணங்கைநிகர்தருசீதையுந்
தேக்குசீருறுந்தேரினிறங்கிமுன்
ஆக்குசங்கற்பமோடுமணுகியே. 56

சிலைவலான்சிறிராமன்சிறந்திடும்
இலையின்வேல்விழியெய்தியசீதையு
மலையைநேர்ந்தவிலக்குமன்மாடுற
வலைகள்வீசுமருங்கடல்மூழ்கினார். 57

கங்கைமூழ்கிக்கலைகளணிந்துயர்
தங்குநீறதைத்தாவிலதின்றியே
அங்கமீதினணிந்தனுட்டானமும்
பங்கமின்றிமுன்பண்புறச்செய்தனர். 58

விதியின்மூழ்கிவிளங்கியராகவன்
மதியைநேர்முகமாதொடிலக்குமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலினோர்கள் முறைபுறமாயுறக்
கதிகொளீசன் கழலடியேத்தினான். 59

கொத்துறுங்குளிர்கொன்றையணிதரு
அத்தனென்நகுலேசநம்மண்ணலை
வித்தகங்கொள்விமலையைமேவிடும்
பத்தியோடுநற்பூசனைபண்ணினான். 60

நெற்றியங்கணிமலனைநெஞ்சுறும்
பற்றினோடுபணிந்துமருங்கினிற்
சுற்றிமும்முறைசூழ்ந்துமுனின்றுரு
அற்றமின்றியவனைத்துதிசெய்வான். 61

நாரணாதியர்நாடரியோய்நம
வாரணாசியின்வாழ்வுறுவாய்நம
ஆரணங்களளப்பரிதாய்நம
பூரணாமுப்புரமெரித்தாய்நம. 62

அன்பருள்ளமமர்ந்திடுவாய்நம
மன்பெரும்பவமாற்றுகின்றாய்நம
வின்பசாகரமாயிருந்தோய்நம
உன்பதந்துணையாகியுற்றேநம. 63

இந்தவண்ணமிராகவனேத்திட
அந்திமேனியமலனுமன்புடன்
முந்துநிற்குமவன்முகநோக்கியே
சிந்தையன்புசிறந்துபுகலுவான். 64

தீயராவணனாதியர்தேய்ந்திட
நீயமர்க்களநின்றுவதைத்தனை
யாயகன்மமுனைவிட்டகன்றனை
ஏயசேனையோடேகுதிநீயென. 65

கருணையோடுமுக்கண்ணருள்செயப்
பொருசிலைக்கையிராகவன்போற்றியே
பெருகுசேனைபெருங்கடல்போலெழுந்
தருகுசெல்லவிடைபெற்றகன்றனன். 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமீதுசெழித்தவயோத்தியா
எல்லையற்றவளநகரெய்திமேல்
மல்லல்வானவர்மாமலர்தூவிடப்
பல்வளத்தொடுபண்புறமேவினான். 67

இராமயாத்திரைப்படலம்முற்றிற்று.
ஆக விருத்தம் 520

# நளன்யாத்திரைப்படலம்

நாறுகொன்றைமாமலருடனதிமதிவயங்க
ஏறினார்நகுலேசன்றனிணையடியேத்தி
மாறின்மாதவச்சூதமாமுனிவரன்மகிழ்வுற்
ருறெண்ணுயிரர்தங்களைநோக்கியீதறைவான். 1

தண்ணருமலர்த்தண்டலைகழனிகடயங்கி
விண்ணளாவியநிடதநாடதனிடைவிளங்கு
மண்ணல்மாமனுநீதியோடறநெறிமலிந்த
நண்ணலார்புகணளனெனநாமமதுள்ளோன். 2

சீவர்தங்களுக்கன்னையினல்லருள்சிறந்தோன்
நாவலத்தினர்புகன்றபாமாலையினயந்தோன்
தாவிலாக்கமலாசனிதயங்கியமுகத்தோன்
பூவினீழ்கணைமாரனில்வடிவுபூண்டுடையோன். 3

திங்களங்குடைநிழற்றநீடரியணைதிகழ்ந்தோன்
பங்கமில்லதோராணையாசக்கரம்பரித்தோன்
மங்குலீதெனப்பகைவர்கள்திறையிடமகிழ்வோன்
பொங்குசீவர்கள்போற்றிடவுலகதுபுரந்தோன். 4

வாளைபாய்தரக்குருகினமகிழ்ந்துகண்டுயிலுந்
தாளதாமரைமலற்றடமருங்கினிற்சார்ந்த
நீளுமாநகர்விதர்ப்பர்கோனுதவுமின்னனைய
மாழைநேர்தருவிழிதிகடமயந்திமடவாள். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைநன்மணமுற்றவனிருந்துதாழ்வகன்ற
மன்னுபூதலத்தரசியல்மரபினில்நடத்த
அன்னவன்றனக்கிளவலாம்புட்கரவரசன்
முன்னையாகியநளனொடுஞ்சூதிடமுயன்றான். 6

மண்டலத்தினுக்கரசனும்நளன்மருங்கணுகிக்
கண்டுதாண்மிசைவணங்கியுட்களிப்புறநின்று
திண்டிறற்பெருஞ்சூதமர்செய்திடவுற்றேன்
வண்டுதுன்றியமாலையாய்வருகெனவழைக்க. 7

அன்னதற்கிசைந்தரசனுமெழுந்துசூதாடித்
தொன்னிலக்கணுயுள்ளனயாவையுந்தோற்று
பின்னரத்தலந்தன்னைநன்மனையொடும்பிரிந்து
துன்னுகானிடைசென்றனன்மனத்துயரோடும். 8

புடவிநீங்கியமன்னவன்புனையிழையுடன்போய்
அடவிதன்னிடையடிசிலோடுறக்கமுமகன்று
கடலைநேர்தருகலிபிணிவருத்திடக்கலங்கி
யுடல்வருந்துதன்மனையுடனிசைந்தவனுற்றான். 9

கங்கநாடியகதிர்கொள்வேற்காவலன்கானில்
நங்கையாளுடன்றங்கியேநற்றவரோடுந்
தங்கிநாடொறுமவர்பதந்தலைதனிற்கொண்டு
பங்கமில்லதோர்பலகலைகேட்டுளம்பரிந்து. 10

மிக்கதோர்நெடுங்காலமாய்வனந்தனில்மிகுந்த
துக்கமோடுதன்மனையையும்பிரிந்துறுதுனிகொண்
டிக்கொடும்பவமகன்றுயான்புவியரசிருக்கத்
தக்ககாலமுந்நேருமோவெனமனந்தளர்ந்து. 11

வனிதைவின்னுதலாடனைப்பிரிந்தபின்வருந்தி
முனிவர்வாய்மைகள்கேட்டவர்பதமுடிசூடிப்
பனிகொள்மாமலைமங்கையோடுறைதரும்பாகன்
கனிவினலமர்தலங்களுக்கேகினன்கசிந்து. 12

வேறு

காதார்விழியுமையாளொடுகருணைப்பசுபதிநேர்
மீதார்தருதலமேலுளமீறன்பொடுநடவாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரார்தருவினைநீக்கியதீர்த்தந்தனிலாடி
நீதாசனமுறுமன்னவனிரையேதரிசித்தான். 13

காடொன்றியதலமோடிருகதிர்மேலுறவருடி
நீடும்பலவீதண்டலைநிரைதுன்றியதலமுங்
கூடும்பலநதிவாயமைகுணமோடுறமுழுகி
ஈடின்றியநலமேவுறுலங்காபுரமுற்றான். 14

சுகமார்மொழிதருதண்டலைசூழுந்திருமறுகின்
மிகுமாரணவொலியோடுறமிளிர்மாமகநிறையத்
தகவோடுறநிதமுந்தருதவஞானியர்பயிலும்
இகநீழ்பரநகுலாசலமென்னும்பதிபுக்கான். 15

மலைநேர்தரவளர்கோபுரமறுகுந்தணிவில்லா
வலையோடுயர்கரைமீதுறவதிருங்கடலொலியுந்
தலைமேவியநகுலாசலநிமிர்வுந்தரளங்கேள்
நிலையோடுறவருதீர்த்தமுநிறைவுற்றதுகண்டு. 16

கவிர்போலுறுமதரந்திகணகுலாம்பிகையருக
அவிர்வேணியனகுலேசனமடியார்புறமருவத்
தவிராதமருயராலயமதுகண்டிதையங்கை
குவியாவலமாயுற்றெதிர்குலவாநனிதொழுது. 17

சூடாவுறுநளனவ்விடைசுரநான்மறைமுறையை
நாடாவுயர்விதியின்படிநலமாருறுகடலின்
ஊடாய்நனிமுழுகாமனமுருகாவினைகுறையா
நீடாகமவிதியாநுதன்மேனீறணிகொண்டு. 18

கடனாகியவிதியின்முறைகவினும்படிபுரியாப்
படநீடியபணிமேலணிபரமன்முனமணுகா
விடநேர்விழியுமைமாதுறவிரவுந்திருவடியை
உடனீழ்விழிகண்டேயிசையுளநற்றுதிசொல்வான். 19

ஐந்தாகியபூதங்களினண்டங்களையெல்லாந்
தந்தாயுயிருடலத்தொடுதழையும்படிநிறுவி
இந்தாவிருவினையென்றதினியல்யாவையுமருள
வந்தேயமரருளுற்றிடுவடிவேயடிபோற்றி. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலோடுறுமுயிருக்குயிராயுள்ளுறுமுதல்வா
விடநேர்தருகலிநோயெனைவிலகாதுறலாலே
இடரோடுனதிடமாயிவணுற்றேன்நகுலேசா
திடமோடுனதருளாலிவைதீர்த்தாளுகவென்றான். 21

இனநெஞ்சினிலுறுமன்புறவெழில்சேர்நளநிருபன்
முனநின்றிவைதுதியாமொழிகுளருமுறைபிறழா
மனமொன்றியசெயல்கண்டுறுமதிவேணியனருளின்
கனநின்றிடுநிருபர்க்கிசைகவினும்படிபுகல்வான். 22

வேறு

நேமிகொணிருபவீண்டுநெஞ்சகம்வருந்தேனின்பாற்
றுமியல்கின்றதுன்பந்தவிர்த்தனமகிழ்ச்சியோங்கப்
பூமியைமுன்னைநாட்போற்புகலரசாட்சிசெய்தே
ஆமியல்மனைவிமக்கள்செல்வமுற்றமர்தியென்றான். 23

கடுக்கையங்கண்ணிவேய்ந்தகண்ணுதலருளலோடும்
இடுக்கணுற்றங்கணின்றவிறையவனிதயந்தன்னில்
தடுக்கருமகிழ்ச்சிகூர்ந்துதற்பரனடிகள்போற்றி
அடுக்கருங்காதலோடுமவனருள்பெற்றுச்சென்றான். 24

பன்னருநிடதநாட்டிற்பாத்திபன்விரைவினேகி
முன்னுறத்தோற்றசெல்வமுழுவதுங்கவர்ந்துதம்பி
தன்னிகல்வென்றுமின்னுடைமையந்திதனையுங்கூடி
நன்னிலைவிளங்கமேவிநயந்தரசாட்சிசெய்தான். 25

நளன்யாத்திரைப்படலம் முற்றிற்று.

ஆ விருத்தம் 545.

---

## அரிச்சுனன்யாத்திரைப்படலம்

போதமுற்றிடுஞ்சூதமாமுனிவரன்பொருவி
லாதரத்தினல்நைமிசாரணியத்தினமர்ந்த
மாதவத்துறுமுனிவரைநோக்கிநன்மரபால்
நாதனுகியவியாதனையுன்னியேநவில்வான். 1

குருகுலந்தனிலுதித்தவன்குவளைமார்புடைய
தருமனென்பவனனுசரோடமர்ந்துறத்தயங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவிளங்கியவலம்புரிமாலையையணிந்தோன்
பொருவிலாவிறற்சுயோதனன்றம்பியர்போற்ற. 2

அத்தினுபுரிநகர்தனிலமர்ந்தகமகிழ்ந்தே
ஒத்தவாழ்வதைப்பெற்றுறுநாளினிலொருநாள்
குத்திரந்தனையுள்ளமேற்சுயோதனன்குறித்துப்
பத்தியோடுறுதருமனுக்கினையனபகர்வான். 3

பொழுதுபோகயாஞ்சூதினைவிரும்பியேபொருவே
மெழுதியாலெனத்தருமனுமிசைந்தனனெழுந்து
தழுவுமாமனுஞ்சகுனியோடிருந்துமுன்றகாத
விழுமமில்லதோர்சூதினையாடினர்விரும்பி. 4

வேறு

மற்றவெல்லையின்மன்சுயோதனன்
உற்றமாதுலன்றன்னைநோக்குறு
அற்றமின்னகராதியாவுநான்
பெற்றிடும்படிபெட்பினீகென. 5

மன்னனீடுரைகேட்டமாதுலன்
பண்ணுசூதினைப்பரிவினுடியே
உன்னுமாநகருள்ளயாவையும்
முன்னராயறமுதல்வன்றேற்றனன். 6

அந்தவேலையினந்தன்மாமகன்
முந்துதன்மனைமுனிவினேக்குறு
விந்தமாநகர்தனையிகந்துபோய்
வெந்தகானகம்மேவுமென்றனன். 7

தண்டலில்லதோர்தருமனம்மொழி
கொண்டிசைந்துறுக்கோலமாநகர்
விண்டியாவரும்விசனமுற்றிட
மண்டுகானகம்மருவவெண்ணினன். 8

வீமனோடுவில்விசையனுந்திறன்
நாமவேலுறுநகுலமன்னனுந்
தாமமார்சகதேவன்றன்னுடன்
பூமினுள்திரெளபதிபுறஞ்செல. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டுமைந்தர்கள் பரிவினோடுறும்
மாண்டகுந்நகர் தனையுமால்வளம்
பூண்டநாடதைப்புறமிகந்திடா
வீண்டுகானகந்தன்னிலெய்தினார். 10

வாசவன்முதலமரர்வாழ்த்திடப்
பாசநீங்குநன்முனிவர்பண்பினு
லாசிகூறிடவைவர்கானிடை
ஈசனைத்தொழுதினிதுமேவினார். 11

குந்திமைந்தர்கள் குலவுகானிடைப்
புந்தியன்பொடும்புரையிலாதுற
உந்துநேமியம்படையையுற்றமால்
அந்தவேலையினங்கணுற்றனன். 12

கேசவன்றனைக்கண்டுகேள்கிளர்
ஆசனங்கொடுத்தடிவணங்கிநற்
பூசனைத்திறம்புரியுமைவர்மேல்
நேசமுற்றுமாநெடிதுகூறுவான். 13

கண்ணிலான்மகன்காரணத்தினால்
மண்ணிழந்துநீர்வந்தபான்மையால்
உண்ணலிந்துளீரொன்றுமுள்ளமீ
தெண்ணலீர்புவியினிதினெய்துவீர். 14

சிறிதுநாளிவண்சிந்தையன்புற
வறிதுமேவுதிர்வலியசேனையால்
உறுதியாயமருக்கமோடுசெய்
திறுதிதன்னினீரெய்துவீரென. 15

வேறு

என்றுகண்ணனெழிலுடனவ்விடை
துன்றுமைவருக்கின்னதுரைத்திடா
நன்றுவைகநவின்றருள்செய்தபின்
ஒன்றுமாரணியத்தையொருவினன். 16

வேறு

கானகத்தினைவர்களுங்காதலுடனமர்ந்திடுநாட்கடிகொள்காவி
னானகத்தினுடம்பிடிகொடருமனுடனொள்ளழல்வாயுதித்துவாய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானல்விழிப்பதுமைநிகர்திரௌபதியும்விளையாடல்பயிலுங்காலை
கூனல்வரிச்சிலைவலிகொள்பற்குனனுமவள்பாதங்குறிப்பிற்கண்டான்.

அதுபொழுதினரிச்சுனனுங்கண்டிகையோடொளிர்பூதியணியாநின்ற
இதமருவுஞ்சடைமுடிகொடவமுனியின்வடிவமதையினிதின்மேவி
விதமருவுந்துணைவருளமுணரவுரைத்தருந்தீர்த்தம்விரும்பியாடி
அதமருவுங்கன்மமகன்றிடவமலனடிபரவியடைவேனென்றான். 18

மொழிதிகழுங்கரும்பதனைத்தனுவாகக்கொண்டுயிரைமோசஞ்செய்ய
அளிகளொனுஞாண்பூட்டியசோகுமுதற்பகழிதனையனங்கனேவிற்
பழியுறுமென்றுளம்பதைக்கப்பற்குனனுஞானியர்கள்படிவம்பூண்டு
விழியதனிற்கண்டவர்களிருகரமுங்குவித்தாசிவிளம்பச்சென்றான். 19

அமைவுதருநெஞ்சினுடனரிச்சுனனுநீறுதிகழங்கத்தோடும்
இமயமுதலாயுரைக்கும்பலதலங்களிசைந்தநதியினிதினாடி
உமையுடனெங்கோனமருங்கயிலாசமுதலிடங்களுவந்துமேவுந்
தமைநிகரினதிகளெல்லாஞ்சங்கற்பமுறைமூழ்கித்தயங்கினானே. 20

வேல்போன்றவிழிமடவார்வேதனையிலாழாதுவிளங்குஞான
நூலார்ந்ததவமுனிவருடன்பயின்றுகாண்டீபனுவலுஞ்சீர்த்தி
மேலானதலங்களெலாம்வலஞ்சூழ்ந்துமேவிமறைக்கானநண்ணிப்
பாலார்ந்தமொழியுமைபங்கோனுகும்பரமனடிபணிந்திட்டானே. 21

சங்கினங்களிடுதளரநிலவொளிரமதியுதயஞ்சார்ந்ததென்னு
மங்குலுயர்தண்டலையின்மலரவிளமணநிறையுமறைக்கானத்தின்
அங்குளநற்றீர்த்தமதிலாடியெழுந்தரிச்சுனனுமரனையேத்திப்
பங்கமகறென்றிசையிற்பரவையிகந்திலங்கையெனும்பதியுற்றானே. 22

## வேறு

கதிர்சார்கமலந்தனில்வளைகடரளம்பயந்துகண்டுயில
எதிராநாரைதஞ்சிறகாலடித்துவளையைவிலக்கியெழின்
முதுகாற்கவிந்துமுளங்கியடைபயிலுங்கழனிமுதிரிலங்கை
அதிராவுவரியலையெறிந்தநகுலாசலத்தினிடமடைந்தான். 23

மேருச்சிகரமெனவிலங்கைமீதாய்நிமிர்ந்தநகுலமென
நேரற்றிலங்குகிரியினுடனெற்றிவிழியார்நிமலனருள்
கூருற்றெழில்காலுமையினுடன்குலவியமர்ந்தசினகரமும்
பாருற்றவர்கள்படிகினவர்பாவந்தனைத்தீர்த்திடுநதியும். 24

திகழுஞ்செயல்கண்டரிச்சுனனுஞ்சிந்தைமகிழ்ந்துதீதகல
விகலைம்புலனையொருவழியினிறுவியிசைசாலிருக்குமுதற்
புகலுமறையின்படிநியமம்புரிந்துபுராரியெனநினைந்து
நகமுன்குறுகிப்பெருநதியினணுகிநவையற்றிடமூழ்கி. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமன்கனிட்டன்நதிமூழ்கித்தக்கோர்புகழப்புனிதமுடன்
உருவெண்ணீறுபுனைந்தினிமையுறுமைந்தெழுத்துமுறைதழுவிக்
கருமம்முடித்துமதிநுதலாள்கௌரிமருங்கினுறவமர்ந்த
திருகுஞ்சடையானகுசேலன்முன்னர்ப்புகுந்துதீமைகெட 26

உள்ளங்குளிரவென்புருகவுரோமஞ்சிலிர்க்கவுரைதவறக்
கள்ளந்தழுவைம்புலனகலக்கரணமொடுங்கவிழிசொருகத்
தெள்ளுங்கரங்கள்சிரமீதுசேர்ந்துகுவியத்தெண்டனிடா
வள்ளலெனுமின்னகுலேசன்முன்பாய்நின்றுவழுத்துறுவான். 27

வேறு

வஞ்சகரிதையந்தன்னைவறிதினிலிகந்தாய்போற்றி
தஞ்சமென்றுறுவோர்தம்பாற்றயவுசெய்திடுவாய்போற்றி
யெஞ்சலின்மூவராகியிருந்தருள்புரிவாய்போற்றி
அஞ்செனும்பூதமாகியமர்ந்தருளிறைவாபோற்றி. 28

நித்தனுயுலகமெங்குநிறைந்தருளிறையேபோற்றி
சத்தனுயுலகின்மேவுசராசரம்புரப்பாய்போற்றி
புத்தர்பாலன்புபூண்டபழமறைமுதல்வாபோற்றி
தத்துவங்கடந்துநின்றதற்பரவடிவேபோற்றி. 29

மூவராயுயிர்களுக்குமுத்தொழில்புரிவாய்போற்றி
தாவறுமுலகமெல்லாந்தந்தருளிறையேபோற்றி
நாவினிலறையவொண்ணுஞானவாரிதியேபோற்றி
பூவினன்மணமதென்னப்புரையறவிருந்தாய்போற்றி. 30

வேறு

நின்றரிச்சுனனீர்மையினேத்துற
மன்றிணுடியவள்ளல்மகிழ்வுரு
அன்றுதோற்றவவனியைமீழவும்
வென்றுவைகுதிமேன்மையினுலென. 31

நாதனவ்வழிநல்லருள்செய்திடப்
பாதமீதிற்பணிந்துவிசையனும்
ஓதுதற்கருமோகையுடன்செலா
நீதிமிக்கநிருபனெடுற்றனன். 32

வேறு

இந்தவிதமுறுமிலங்கைநகுலேசன்காதைதனையெடுத்துச்சூதன்
நந்தலிலாதுறைநைமிசாரணியமுனிவரர்க்குநவிலும்போதிற்
பந்தமதினீங்குமவர்பரிவுகொண்டேயிருசெவிகள்பனிப்பநீடு
சிந்தையுவந்தனதுரையினன்புற்றேமெனமுகமன்சிறந்துகூறி. 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடரியநருலேசன்மான்மியத்தையுனதருளானயந்துகேட்டு
தேடுமறம்பொருளின்பம்வீடதெனும்பகுதிதனைத்தெளிவினாய்ந்து
நீடிதையமிகமகிழ்ந்தோநின்னாலென்றவனடியைநிரையினேத்தி
வீடுதனையடைந்தனமக்குறுதியெனவழநினைத்துமேவினார்கள். 34

அரிச்சுனன்யாத்திரைப்படலம் முற்றிற்று.

ஆ. விருத்தம்—577.

---

# மாருதப்புரவீகவல்லியாத்திரைப்படலம்

---

முனிவர்கேட்கமுறைதனிற்சூதன்முன்
இனிமையாகவியம்பியதன்மைபோற்
கனிவின்மாருதவல்லிகதையையான்
நனியெழுந்தவிருப்பினவிற்றுவாம். 1

தக்கசோழனளித்திடுந்தையலாள்
புக்குமண்ணிற்புரவிமுகமுநோய்
மிக்ககுன்மமுமீதுற்றுதித்திடத்
துக்கமுற்றுயர்தாதையுந்துன்னினன். 2

மாருதப்புரவல்லியென்றேயரும்
பேர்தயங்கிநற்பேதைவளர்ந்திடச்
சீர்மிகுந்தவளவனுஞ்சிந்தையிற்
சார்தருங்கனசஞ்சலமுற்றனன். 3

ஊனவேல்கொணிருபவுன்புத்திரிக்
கானவெம்பரியானனம்நீங்குற
மானலந்திகழ்வார்நதிமூழ்கவென்
றானதோரசரீரியறைந்ததே. 4

வேழவெம்படைவேந்தனுமின்னலாம்
ஆழமிக்ககடற்கரைகண்டகம்
நாளினும்மகிழ்வெய்திநற்றானைகள்
சூழவேதன்சுதையையனுப்பினான். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலவட்டநிகர்சொலுமல்குலார்
பாலினுற்றிடப்பாத்திபன்மாமகள்
கோலமுற்றபலாக்கிற்கொலுவுறச்
சீலமுற்றிடுசிக்கைதயினேகினள். 6

வளவனீன்றவனிதையும்பாரின்மேற்
றளுவுகங்கைகடன்னிற்படிந்துநல்
உளுவலன்பினுமையொடிறைவனைப்
பழுதிலாமற்பணிந்துமுன்னேகினள். 7

## வேறு

புண்டரிகக்கொடியுயர்த்தபுரவலனீன்றிடுவனிதைபுவியின்மீது
தண்டரளந்தனைக்கொழிக்குந்திரைமருவுதீர்த்தமெலாந்தகவினாடி
அண்டர்பணிந்திடவரியவிமலையுடனிறைவனடியகத்தினேத்தி
மண்டலத்திற்புகழிலங்கைமருவுநகுலாசலத்தின் மகிழ்வினுற்றாள். 8

## வேறு

மாதருக்கரசானவள்வந்திட
மாதருக்குலவீகண்மலர்ந்திடல்
போதிருக்குதினிதுபுராரிக்கெப்
போதிருக்கினிற்பூசனைசெய்கென. 9

என்றறுங்குலவேந்தினையெய்தின்
ளென்றவட்கெதிரிட்டபரிசுபோற்
குன்றுருதொலிகூர்வளைநித்திலங்
குன்றுபோலக்குலவுங்கடற்புறம். 10

பானலின்விழிப்பாவையர்வாயினிற்
பானலம்வளிப்பாடல்பயிற்றுவார்
கானல்கண்புகுதாவிஞ்சையர்கடிக்
கனவந்திகள்நீழல்கவின்வரால். 11

வாளைவாவியுகழ்வனவானுற
வாழைவாவிவளர்வனவானுறத்
தாழைதாவிக்கவியினந்தங்குவ
தாழைதாவிப்பருந்தினந்தங்குவ. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிசைந்தசொற்பாவையர்யாழினிற்
பண்ணிசைந்தெழுபான்மைபயிலுவார்
கண்ணிசைந்துயருங்கரும்பின்மொழிக்
கண்ணிசைந்துதிருங்கதிர்நித்திலம். 13

கொக்கினம்புனல்கொண்ணிலநாடுமே
கொக்கினம்புனல்கொண்முகினூடுமே
தக்கவந்தணர்தந்நெறிகொண்டுமே
தக்கவந்தமர்தானந்தயங்குமே. 14

மாடுறும்மதிகொண்முடிவானவன்
மாடுறுந்துதிசொல்லுவர்வானவர்
ஏடுறுங்கலையெய்துவர்பாவலர்
ஏடுறும்மணமெய்துவமாமலர். 15

114843

வேறு

நித்திலந்தவழ்கடலிடைநிகரிலாநிலையின்
நித்தியம்படிந்தெழுந்துசாந்நித்தியநினைந்தே
பத்தியோடுறின்பரிமுகமகலுமென்பதுபோற்
பத்தியோடுறுந்தருக்களின்குயிலிசைபயில்வ. 16

நிற்குறும்பெருநோயிவணிமலனைநினைந்து
நிற்குறின்புறமகலுமென்றுறநிகழ்த்துவதின்
சொர்க்கவாணரும்புகடருசோலையின்சுகங்கள்
சொற்கழும்பயில்சாரிகைச்சொற்கழுந்தொகுவ. 17

வேறு

மாலையோதுமவுலியன்பால்வரம்
மாலையோதியும்வாங்கவந்தாழ்வரும்
வேலைவென்றிமுரசெதிர்வேண்டுமென்
வேலையார்த்திடமேவினள்மெல்லியல். 18

குழையினுடன்பொருதவயில்விழிதிகழுங்கோதையதண்குறுதிநேய
விழைவுயரத்தவம்புரியும்நகுலமுனிதனைநோக்கிவிருப்பினோடு
வளையலணியிருகரமுஞ்சிரமேறவணங்கியரன்மகிமையெல்லாம்
பிழைபொறுத்துக்கழறுகெனவினவுதலும்பிறழாதுபேசலுற்றான். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயனிகருங்கருங்கூந்தனங்கையான் முற்பிறவிபுகுந்தநன்ம
வியலதனிற்கிரிமுகந்தனையடைந்துவைகுறுநாளிலைவேலுற்ற
தயவுமிகுமுசுகுந்தமன்னன் முசுமுகத்தோடுதளர்வினென்பால்
வியனுறவேவரயரங்களிருவருமாயீண்டுமிகவிருப்பாலுற்று. 20

நிழல்சுழியுங்கடாயானைப்படையுடையவளவனெனுநிருபனீன்ற
சுழலளியின்குலமதிரமலரணியுங்குழலணங்கேசுறவுபாய்ந்த
வளமிலங்குமித்தலத்தின் முன்னாளின் முசுகுந்தமகிபன்றன்னோ
டுளமெலிந்துவந்துமையோடுற்றநகுலேசனடியுன்னிமேவி. 21

துய்யநதிதனிற்றினமும்விதியினுடனேமுழுகித்துகளிலாத
பையரவமணிந்தபிரான்நகுலேசனடிமலரைப்பரவியேத்த
நையுமெனக்குறுங்குலமுகமகன்றுநன்முகத்தைநயப்பினாளும்
கையுறலினினிதணுகிமனங்கனியவைகினன்யான்கதிர்வேற்பூபன். 22

தன்னாடுசென்றடைந்தான்மெல்லியலேயன்றுமுதலாகத்தாவில்
வின்னாடுநுதல்விமலையமலனுடனெடுவரைக்கும்விளங்காநின்ற
மன்னாடுநதிதனக்குமெனதுபெயர்மரபினொடும்வளங்காநின்ற
தன்னாப்பியிவ்விடத்தினுறுமகிமையிதுவெனவுரைத்தானன்பினோடு. 23

வேறு

இம்மொழிகேட்டபினிளையிலாயிளை
அம்முனிவரனிணையடிகளேத்திடாத்
தம்முளமகிழ்ந்துதற்பரனையுன்னியே
விம்மிதமுற்றுநின்றுடல்விதிர்ப்புரு. 24

வேறு

உலகினுயிர்கள்பிறவிபெனுமுததியுழலாதுறவுதிக்கு
நிலவின்மௌலியமனிடமெழுந்துநிதமும்கருணைதனை
நலமுன்னுதவிநகுலவரையமர்ந்தநால்வாயுறுமிபத்தின்
வலநன்முகத்துவீரகத்திவள்ளலடியைமனம்பரவி. 25

வேறு

காடொறும்நதியின்வாய்நணுகிமுன்விதி
நேடிநன்னிலைதருநெறியின்மூழ்கியே
தேடரும்பரனடிதெளிந்துபோற்றுரு
மாடுறுந்தோழியர்மகிழவைகினாள். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தியின்மருப்பெனத்தனங்கொணுரியும்
முந்துநன்னதிதனின்மூழ்கிநாடொறும்
அந்திவேணியனடிபோற்றவன்னைபாற்
சிந்தையினெழின்முகஞ்சிறப்பினுற்றதே. 27

தன்னுறுகுதிரைமாமுகந்தணந்ததால்
மன்மலர்க்குழலியுண்மகிழ்ச்சியுற்றினி
துன்னுதந்தைக்கிவணுற்றபான்மையைப்
பன்னருந்தூதராற்பகர்வித்தாளரோ. 28

சாரணர்தந்தைபாற்சார்ந்துதையலின்
காரணந்தனைநிரைகழறக்கேட்டுளம்
பூரணமடைந்துதன்புதல்விக்காகநல்
லாரணநெறியெலாமாய்ந்துமேன்மையின். 29

அயில்கொளுமாறுமாமுகனையன்பினால்
மயின்மிசைமனைவியர்மருங்குவைகுற
வியனுறுந்திருவுருவியற்றுவித்தனன்
குயினிகருரையினாள்குணமுடன்கொள. 30

அளவிலாநிதியுடனரசனென்றுரை
வளவனுங்குமரவேழ்மடிமைமாணுற
உளமகிழ்வுற்றநல்லோர்களோடுயர்
கழனிசூழிலங்கையின்கண்ணனுப்பினான். 31

வந்ததோர்தன்மையைவனிதைகண்டுளம்
அந்தமில்மகிழ்ச்சிகொண்டமலன்மேவிய
நந்தலின்நகுலமாநகரத்தின்கீட்டிசை
முந்துளமுறையில்வேல்முருகன்மேவுற. 32

நீழ்பெருங்கோயிலுநிகரில்கோபுரஞ்
சூழ்தருநெடுமதில்சுடர்கள்கான்றுறத்
தாழ்வகன்றிடுமறுகோடுந்தந்துநன்
னாளினிற்கந்தவேடனைநயப்புடன். 33

தந்திரவிதிநிலைதவாமல்நான்மறை
அந்தணர்தங்களாலாய்வுற்றேதரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரமுறையருள்வளரமாலையின்
இந்தமாநிலத்தினர்யாருமுய்திட. 34

செப்பருங்கும்பதாபனங்கள்செய்திடா
தொப்பிலாமறைமுறையொளிருநல்லருள்
வைப்பினுவாகனபதிட்டைதன்னைமுன்
தப்பிலாக்குமரவேடனக்குச்செய்தனள். 35

மண்டலத்திறைமகள்மனமகிழ்ச்சியாற்
றண்டினில்வளர்ந்தமுற்சட்டிதன்னிடை
எண்டகுதம்பமேற்றெருசமதேற்றிநாட்
கொண்டுறுமகோற்சவங்குலவச்செய்தனள். 36

நள்ளிசார்பிற்சதுர்த்தசியில்நன்கமை
தெள்ளுதேர்விழாவதுசெய்துமற்றைநாள்
விள்ளமாவாசையல்விரவுவிண்டுமேல்
உள்ளதீர்த்தோற்சவமுவப்பினீந்தனள். 37

இப்படிச்சோழன்மாமகளியற்றியே
யொப்பில்வேலவனடியோகையாற்றுதி
செப்பிமுக்காலமும்பூசைசெய்திட
அப்பெருங்குமரனுமருள்செய்தானரோ. 38

தந்தியின்மருப்புறுதனங்கொணேரீபின்
நந்தலில்நகுலநாயகற்கும்நாரிக்கும்
புந்திகொளன்பினுல்விழாப்புரிந்தவர்
அந்தமிலருளையுமடைந்திட்டாளரோ. 39

மாருதப்புரவிகவல்லியென்றபேர்ச்
சீருறுமாதுதன்சிந்தைபோலருள்
பார்புகணகுலையம்பரனுடேயுமை
கூரயிலேந்தியகுகனையேத்தினுள். 40

பின்னரும்வனிதைநற்பெருவிருப்பினுல்
உன்னரும்வேதியருளங்களித்திட
அன்னதானங்களுமளித்துமேலவர்
மன்னியவாசிகள்மரபிற்கேட்டனள். 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையினான வருஞ்சிவனைக்கந்தனை
இந்துநேர்முகமுளவிமயமங்கையைத்
தந்தையின்நகுலமாமுனியைத்தாழ்பணிந்
தந்தமிலருள்மிகவடைந்துவைகினாள். 42

சங்கரன்றன்னொடுசண்முகேசனும்
இங்கிவர்மகோற்சவமினிதுகாணுறப்
பங்கமில்சிந்தைசிற்பரிவுபூண்டவ
ணெங்குளவுலகினோர்யாருமெய்தினார். 43

எய்தினோர்யாவருமெழில்கொளீசனை
மைதிகழ்விழியுமைதன்னைமைந்தனுந்
துய்யதோர்குமரனைத்தொழுதுமாணுறு
தெய்விகவிழாத்தெரிசித்துத்தீவினை. 44

தீர்ந்திடநகுலமால்வரைதிகழ்ந்துயர்
ஆர்ந்திடுகடலின்வாயருளின்மூழ்கியுஞ்
சார்ந்திடுதானதன்மங்கள்செய்தருள்
கூர்ந்திடுவரமுறீஇக்குலவிச்சென்றனர். 45

மீனுறுதரங்கநீர்மிசைவிளங்கிநீழ்
வானுயர்நகுலமால்வரையின்சாரலின்
ஊனமிலிறைவனையுன்னிநோற்றவ
ணீனமினகுலமாமுனியிருந்தனன். 46

மாருதப்புரவிகவல்லிமங்கையாள்
ஏருறுதன்புரத்தேகவெண்ணியே
நீருறுமௌலியின்நிமலனோடுமை
வார்தருவேலவனடிவணங்கினான். 47

ஈங்கிவர்பால்விடையினிதுபெற்றவள்
ஓங்கியதானைகளொருங்குசூழ்ந்துற
மாங்குயின்மொழிதிகழ்மாவைநீங்கியே
தேங்கியதன்னகர்சென்றுவைகினாள். 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

நூலின்மிகுநகுலகிரிப்புராணமதையன்புடனேநுவலுவோர்கள்
சிலமுறுமன்புமிகநுவலுவிப்போர்கனிவுதரச்சிறப்பினுராய்ந்
தேலுமிதினர்த்தமதையுரைப்பவர்கள்கேட்பவர்கள்யாருமெந்தை
நாலுமறையுணர்வரியநளினமலரடியிணையின்நயந்துவாழ்வார்.

நல்லதொருபேரறிஞர்தமையடைந்தசிந்தையின்மேனலமில்லாத
புல்லறிவோர்தமைப்புனிதராக்குவர்களதுபோலப்புலவர்தாமுஞ்
சொல்லியவிக்கவிதைதனிலுறுபிழைகடணையகற்றிச்சோர்விலாது
மல்லலுறுஞ்சொன்னிறுவிமண்மீதுகொள்ளுவர்கள்மரபினுலே. 50

வேறு

மன்னுமறையவர்முனிவர்மகங்கள்வாழி
மௌலியணிவேந்தர்மனுநீதிவாழி
உன்னருமைந்தெழுத்துமணிநீறுவாழி
யுளங்கவினுஞ்சைவநெறியோங்கிவாழி
நன்மையுலகுயிர்தழைத்துநாளும்வாழி
நானிலமேல்முகில்மழையைநல்கிவாழி
அன்னநடையுறுநகுலாம்பிகையும்வாழி
யடியருடன்நகுலேசவமலன்வாழி. 51

**மாருதப்புரவீகவல்லியாத்திரைப்படலம்**

முற்றிற்று.

ஆகவிருத்தம் 630

நகுலேசன்றுணை

சுபமஸ்து.

---

# நகுலகிரிப்புராணம்

முற்றிற்று.

—*—

KOHA JPL

3873 C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org